# கென்னடி வீர வரலாறு

ஆசிரியர்
பாவலர் தி. முருகுசுந்தரம், எம். ஏ.,

சிவலிங்க நூற்பதிப்புக் கழகம்,
அ. பெ. எண் 2, ஈரோடு-1.

# கென்னடி - வீர வரலாறு

ஆசிரியர்

புலவர் தி. முருகுசுந்தரம், எம். ஏ.,

வேலா
சிவகம்
வெளியீடு

முதற் பதிப்பு — 1965
மறு பதிப்பு — 1977

வெளியீட்டாளர் :
© சிவலிங்க நூற்பதிப்புக் கழகம்,
அ. பெ. எண் : 2, ஈரோடு—638001.

விலை உரு. 5—00 (ஐந்து உருபாய்கள்)

வேலா அச்சகம், ஈரோடு.

# வாயில்

கதிரவன் நடுவானத்தில் திடீரென்று மறைவதைப்பார்த்திருக்கிறீர்களா? ........ அமெரிக்காவில் பேரொளி வீசி வட்டமிட்டுச் சுழன்று வந்த கென்னடி என்ற அரசியற் கதிரவன் திடீரென்று நடுவானில் மறைந்து விட்டான். நல்லோர் உள்ளத்திலெல்லாம் கவலை இருளை வீசி விட்டு மறைந்து விட்டான்.

கென்னடியின் சாவைக் கேட்ட உலக மக்கள் வடித்த கண்ணீரை ஒருமுகப் படுத்தியிருந்தால் அது காவிரியாகப் பாய்ந்திருக்கும். கென்னடியின் இறப்பை எண்ணி உலக மக்கள் விட்ட பெருமூச்சை ஒருமுகப்படுத்தியிருந்தால் அது பெரும் புயற்காற்றாக மாறியிருக்கும்.

கென்னடியின் வரலாறு ஒரு வீர வரலாறு தியாக வரலாறு; உள்ளத்தை உருக்கும் கண்ணீர்க் காதை.

இச்சிறு நூல் கென்னடியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது; அவர் உணர்ச்சிகளை உங்கள் உள்ளத்தோடு பேச விடுகிறது; அவர் உள்ளத்தில் முகிழ்த்த சொற்பொழிவுகளையும் மொழி பெயர்த்து உங்கள் முன் படைக்கிறது.

மனித உள்ளத்தோடு வாழ விரும்பும் ஒவ்வொருவரும் கென்னடியைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். கென்னடி! இது உள்ளக் கிளர்ச்சியூட்டும் ஒரு மந்திரச் சொல் .... வாழிய கென்னடியின் புகழ்!

கவிதைப் பண்ணை
15—6—64

முருகு

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தோற்றுவாய் | .... | 1 |
| 2. | குடியேற்றம் | .... | 3 |
| 3. | வாழ்க்கைப் போராட்டம் | .... | 8 |
| 4. | செல்வச் சிறப்பு | .... | 11 |
| 5. | கென்னடியின் இளமை | .... | 15 |
| 6. | ஐரோப்பியப் பயணம் | .... | 20 |
| 7. | போர்வீரர் கென்னடி | .... | 24 |
| 8. | அரசியல் வாழ்க்கை | .... | 31 |
| 9. | சட்டமன்ற உறுப்பினர் | .... | 37 |
| 10. | பாராளுமன்ற உறுப்பினர் | .... | 42 |
| 11. | மணவாழ்க்கை | .... | 47 |
| 12. | புலிட்சர் பரிசு | .... | 53 |
| 13. | அமெரிக்க நாட்டின் தலைவர் | .... | 58 |
| 14. | வெள்ளை மாளிகை | .... | 68 |
| 15. | மக்கள் உரிமைச் சட்டம் | .... | 72 |
| 16. | புகழ்ச்சாவு | .... | 79 |
| 17. | இறுவாய் | ... | 86 |
| 18. | கென்னடியின் பொன்மொழிகள் | .... | 88 |




சிறுவன் ஜான் கென்னடி



கடற்கரையில் கென்னடி







கென்னடி, ஜாக்குலின், குழந்தைகள்



கென்னடி — குருஷ்சேவ்



கென்னடி — மாக்மில்லன்



கென்னடி — நேரு



கென்னடி — டாக்டர் இராதாகிருஷ்ணன்

# 1. தோற்றுவாய்

வெள்ளிக்கிழமை ஒரு புனித நாளாக இந்துக்களாலும் கிறித்தவர்களாலும், இசுலாமியர்களாலும் கொண்டாடப்படு கிறது. இப்புனித நாளில் உலக மக்களின் கண்களைக் குளமாக்கி விட்டு உயிர் துறந்தோர் மூவர். பாவேந்தர் பாரதிதாசன் கூறியபடி "தம்பெண்டு தம்பிள்ளை சோறு வீடு சம்பாத்யம் இவையுண்டு தாமுண்டு" என்று தந்நல வாழ்வு வாழ்ந்து செத்தவர்கள் அல்லர் அம்மூவரும்; நீர்நிறைந்த ஊருணி போலவும், உள்ளூர்ப் பழுத்த பயன்மரம் போலவும், மருந்தாகித் தப்பாத மரத்தைப் போலவும் பிறர் பொருட்டு வாழ்ந்த பெரியார்கள்; இருள்நீக்க மெழுகுவர்த்தி தான் எரிந்து சாவதைப் போல, உலகம் வாழத் தம் வாழ்வை முடித்துக் கொண்ட பெருந்தகையாளர்கள்.

இம்முப்பெரும் பெரியார்களில் முதல்வர் ***அப்ரகாம் லிங்கன்***. இவர் பூத் என்ற நடிகனால் சுட்டுக் கொல்லப் பட்டார். இரண்டாமவர் இந்தியத் தாயின் அடிமை விலங் கைத் தகர்த்தெறிந்த ***காந்தியண்ணல்***. இவர் கோட்சே என்ற கொடியவனின் குண்டுக்கு இரையானார். இறுதியாக நம் கண்ணெதிரில் சில திங்கள்களுக்கு முன் உயிர்விட்ட சுதந்தர வீரன் ***ஜான்பிட் ஜெரால்டு கென்னடி***.

அப்ரகாம் லிங்கனும், காந்தியண்ணலும் தாங்கள் மேற்கொண்ட அரும்பணிகளை வெற்றிகரமாக முடித்துவிட்டு வீறுநடை போட்டுச் செல்லும்போது கொல்லப்பட்டார்கள். ஆனால் கென்னடி தமது திருப்பணியைத் தொடங்கிய வுடனே கொல்லப்பட்டார். அரும்பிலேயே முல்லை கருகி விட்டது. தாவி வரும் இளங்குழவியின் கழுத்தை நெரிப்பது போல், தன்னேரிலாத இளந்தலைவனை மண்ணில் சாய்த்து விட்டனர். அடிமையிருள் நீக்கப் புறப்பட்ட விடிவெள்ளி விண்ணின்று வீழ்ந்துவிட்டது.

இளைய பிட் என்பவன் ஆங்கில வரலாற்றில் நிலையான இடம் பெற்ற பேரமைச்சன். அவன் தந்தையும் ஆங்கிலப் பேரரசில் தலைமை அமைச்சராகப் பணியாற்றி உயிர் துறந்தார். இளைய பிட் காலத்தில் ஆங்கிலப் பேரரசு பெரும் வல்லரசாக மாறியது. உலகமெங்கும் ஆங்கிலக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது. இவ்வெற்றிகளுக்கு இளைய பிட்டின் அரச தந்திரமே காரணம் என்று வரலாற்றாசிரியர்கள் பெருமையுடன் கூறுகின்றனர். ஆனால் இந்தப் பிட் ஆங்கிலப் பேரரசின் தலைமை அமைச்சனாகப் பதவியேற்ற பொழுது மிகவும் இளைஞனாக இருந்தான். அப்போது பாராளு மன்றத்தில் வீற்றிருந்த உறுப்பினர்கள் அவன் தோற்றத்தைப் பார்த்து, "இந்தச் சிறுவனா நாட்டை ஆளப்போகிறான்" என்று வியப்போடு பேசினர். அப்போது அவ்வுறுப்பினர்களைப் பார்த்து, "எனது தந்தையே இளமை உருவோடு உங்கள் கண்ணெதிரில் நிற்கிறார்" என்று இளைய பிட் அஞ்சாமையோடு பதிலிறுத்தான்.

ஜான் பிட் ஜெரால்டு கென்னடியை நினைக்கும்போது இளைய பிட் பாராளுமன்றத்தில் அஞ்சாமையோடு வெளியிட்ட கூற்றே நம் கண்முன் வந்து நிற்கிறது. கென்னடி அமெரிக்கத் தலைவராகப் பதவியேற்ற பொழுது பலர் வியப்பில் ஆழ்ந்தனர். இப்பெரும் அரசியல் சுமையைச் சுமக்க இவ்விளைஞனால் ஆகுமா? என்றனர். ஆனால் கென்னடி தலைமைப் பொறுப்பேற்ற சில திங்களுக்குள் தமது பேராற்றலை உலக அரசியல் அரங்கில் புலப்படுத்திக் காட்டிவிட்டார். குறிப்பாகச் சொல்லப் போனால் புரட்சிவீரர் வாஷிங்டனின் அஞ்சாமையையும், அப்ரகாம் லிங்கனின் அருளுள்ளத்தையும், ரூஸ்வெல்ட்டின் அரசியல் மேதையையும் ஒருங்கே பெற்று, இளமை முறுக்கோடு புறப்பட்ட அருந்தலைவர் கென்னடி என்று கூறினால் அது மிகையாகாது.

பேரிடியின் அஞ்சாமையும், காட்டாற்றின் வலிமையும் பெற்றுப் பாய்ந்து புறப்பட்ட புலிப் போத்து பாதி வழியில் வீழ்ந்து விட்டது. அதன் வீர வரலாற்றில் நுழைவோம்.

# 2. குடியேற்றம்

இந்திய வரலாற்றில் பொன்னேடுகளை நிரப்பிய பெருமை இராசபுத்திரர்களுக்கு உண்டு. இராசபுத்திர இனத்தார் அஞ்சாமையும்; வீரமும் நாட்டுப் பற்றும், மான உணர்ச்சியும் மிக்கவர்கள்; இந்தியப் பெரு நிலத்தின் பெரும் பகுதியை ஒரு குடைக்கீழ்க் கட்டியாண்ட மாமன்னன் அக்பரையே தம் வாள் வீரத்தால் திணற அடித்தவர்கள். இத்தகைய அரும்பெரும் பேராற்றல்கள் இராசபுத்திரர் களிடம் நிரம்பியிருந்தமைக்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு.

நட்டாசியாவிலிருந்து வளமிக்க இந்திய நாட்டைக் கைப்பற்றுவதற்காக ஹூணர்கள், சாகர்கள், பார்த்தியர்கள் குஷானர்கள் என்ற பல முரட்டுக் கூட்டத்தார்கள் படை யெடுத்தனர். ஒவ்வோர் இனத்தவரும் சிலகாலம் இந்திய நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி புரிந் தனர், பிறகு கால வெள்ளத்தில் அவர்கள் ஆட்சி சரிந்தது ஆட்சிப் பெருமையிழந்த அவ்வினத்தார் இந்திய மக்களோடு நாளடைவில் இரண்டறக் கலந்துவிட்டனர். அவ்வினக் கலப்பால் புதிய இனமொன்று தோன்றலாயிற்று. அவ் வினமே இராசபுத்திர இனமாகும். பல இனத்தாரின் குருதிக் கலப்பில் தோன்றிய அப்புதிய இனம் மிகவும் ஆற்றலோடு விளங்கியது. இந்திய வீர வரலாற்றுக்கும், கலாசார வரலாற் றுக்கும் புதிய பெருமைகளைத் தேடிக் கொடுத்தனர் அவ் விராசபுத்திர இனத்தார். அமெரிக்கர்களை இவ்விராசபுத்திர இனத்தாரோடு ஒப்பிடலாம்.

சங்க காலமான கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்கு முன்பிருந்தே ஐரோப்பிய நாடுகளுக்கும், ஆசிய நாடுகளுக் கும் வாணிகத் தொடர்பு இருந்தது என்பதைக் கிரேக்க, ரோம் வரலாற்ருசிரியர்களின் குறிப்புகளிலிருந்து அறியலாம்.

வாணிகம் நிலவழியிலும், நீர் வழியிலும் நடைபெற்று வந்தது. கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் துருக்கி நாடு பெரிய வல்லரசாக மாறியவுடன் இவ்வாணிகம் தடைப்பட்டது. எனவே மேற்கு ஐரோப்பிய நாட்டினர் ஆசிய நாடுகளுக்குப் புதிய வழிகளைக் கண்டுபிடிக்க விரும்பினர். இச்சமயத்தில் உலகம் உருண்டையானது என்னும் கொள்கையை விஞ்ஞானிகள் வெளியிட்டனர்.

***கிறிஸ்தோபர் கொலம்பசு*** என்ற ஒரு மாலுமி ஸ்பெயின் நாட்டு அரசி இசபெல்லாவின் துணை கொண்டு, இந்தியா விற்குப் புதிய கடல்வழி கண்டறிவதற்காகப் புறப்பட்டார். ஆனால் தற்செயலாக அவர் மேற்கிந்தியத் தீவுகளைக் கண் டறியும் வாய்ப்பு ஏற்பட்டது. அவருக்குப் பின் ***அமெரிக்கோ வெஸ்புக்கி*** என்ற இத்தாலியர் புத்துலகமான அமெரிக்கக் கண்டத்தைக் கண்டறிந்தார். அமெரிக்கா வளம் மிக்க பெருநிலமாக இருப்பதைக் கண்ட ஐரோப்பியர்கள் போட்டி போட்டுக்கொண்டு இப்புத்துலகத்திற்குச் சென்றனர்; அங்குக் கிடைத்த பொன்னையும், வெள்ளியையும் கப்பல் கப்பலாக வாரிக்கொண்டு வந்து தங்கள் நாட்டுக் கருவூலங் களில் கொட்டி நிரப்பினர். அமெரிக்கத் தங்கத்தில் பெரும் பகுதியை வாரிக் கொண்டு வந்தவர்கள் ஸ்பானியர்களே. அவர்களுக்குப்பின் பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர் களும், போர்த்துகீசியர்களும், டச்சுக்காரர்களும் இக்கொள்ளை யில் பெரும் பங்கு கொண்டனர்.

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பல அரசியல், சமயக் குழப்பங்களின் காரணமாக ஆங்கிலேயர் களும், பிரெஞ்சுக்காரர்களும், ஸ்பானியர்களும் கூட்டங் கூட்டமாக அமெரிக்காவில் குடியேறத் தொடங்கினர். பிறகு மற்ற ஐரோப்பிய நாட்டினரும் குடியேறத் தொடங்கினர். பல குடியேற்ற அரசாங்கங்கள் தோன்றத் தொடங்கின. இவைகள் குடியேற்ற நாடுகள் (Colonies) என்னும் பெயர் பெற்றன. இக்குடியேற்ற நாடுகள் நாளடைவில் உரிமை பெற்றுத் தன்னாட்சி நாடுகளாக மாறின. இத்தன்னாட்சி

நாடுகளின் ஒன்றுபட்ட அமைப்பே **ஐக்கிய நாடு** என்னும் பெயர் பெற்று விளங்குகின்றது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் பல மொழியாளர்களும் இனத்தார்களும் ஒன்றுகூடி வாழும் நிலை ஏற்பட்டது. பல நாட்டுப் பண்பாடும், கலாசாரங்களும் கூடிக் கலப்புற்றன. புத்துணர்ச்சியோடு கூடிய ஒரு புதிய தலைமுறை ஏற்பட்டது. இத்தலைமுறையே அமெரிக்கத் தலைமுறையாகும். இராச புத்திரர்களைப் போல இவ்வமெரிக்க மக்களும் எழுச்சிமிக்க இனத்தவராக விளங்குகின்றனர். அமெரிக்க நாட்டின் எல்லையற்ற வளம், இம்மக்களின் குன்றாத உழைப்பைப் பெற்று வளர்ந்தது. உலகில் அமெரிக்க நாடு இன்று செல்வச் சிறப்புள்ள நாடாக விளங்குகிறது; உலக அரசியல் அரங்கில் முதலிடம் பெற்று வல்லரசாகவும் மாறிவிட்டது. இன்று பன்னாடுகளின் தலைவிதியை மாற்றியமைக்கும் ஆற்றலை அமெரிக்க நாடு பெற்று விளங்குகிறது அமெரிக்க நாடு வல்லரசாக மாறியதற்கும், செல்வச் சிறப்புப் பெற்றதற்கும் **கென்னடியின்** குடும்பமும் தன்னாலியன்ற பணியைச் செய்து வந்திருக்கிறது. கென்னடியின் முன்னோர்கள் அயர்லாந்தி லிருந்து குடியேறிய கத்தோலிக்கர்கள்.

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அயர்லாந்து பெரும்பாலும் உழவுத் தொழிலையே நம்பி வாழ்ந்து வந்தது. உருளைக்கிழங்கு பயிரிடும் தொழிலே அயர்லாந்து மக்களின் முக்கியமான தொழில். கி பி 1840 ஆம் ஆண்டிலிருந்தே இப்பயிர்த் தொழிலுக்குப் பெரும் கேடு சூழத் தொடங்கியது. வர வர விளைச்சல் குறைந்து கொண்டு வரத் தொடங்கியது. கிழங்குகள் நிலத்திற்குள்ளேயே அழுகத் தொடங்கின. நல்ல நிலையில் இருந்த கிழங்குகள் ஒரே இரவில் கூட அழுகி விடுமாம். உருளைக்கிழங்கு பயிரிடுவதைத் தவிர வேறு எத் தொழிலும் செய்தறியாத அவ்வேழை உழவர்கள் யாது

செய்வார்கள்? பசியும் பட்டினியும் அவர்களை வருத்தத் தொடங்கின.

'பசி வந்தால் பத்தும் பறந்து போம்' என்னும் முதுமொழிக் கிணங்க, உற்ருர் உறவினரையும் மறந்து விட்டுக் குடும்பம் குடும்பமாக உழவர்கள் பிறந்த பொன் ஞட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர்; முதுமையால் தளர்ந்துபோன கிழவர்களையும், நடக்கும் திறனற்ற பிஞ்சுக் குழந்தைகளையும் பள்ளங்களில் சாக விட்டுவிட்டு வெளி யேறினர். வெளியேறும் துணிச்சலற்றவர்கள் சாவை எதிர் நோக்கிக் காத்துக் கிடந்தனர். அரைப்பட்டினியோடு நாளைக் கடத்திவந்த சிலரும் நச்சுக் காய்ச்சலினுல் பீடிக்கப் பட்டு உயிர் துறந்தனர்.

இவ்வாறு அயர்லாந்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டிருந்த காலத்தில் அமெரிக்கக் குடியேற்றம் மிக விரைவாக நடந்து வந்தது. உயிரோடு போராடிக் கொண்டிருந்த அயர்லாந்து மக்கள் சிக்கனமாக மீத்து வைத்திருந்த சிறு தொகைகளைத் திரட்டி எடுத்துக்கொண்டு குடும்பம் குடும்பமாகக் கப்பலேறி அமெரிக்காவுக்குப் புறப்பட்டனர்.

கென்னடியின் முன்னேர்கள், தென்கிழக்கு அயர் லாந்தில் நேரோ ஆற்றங்கரையில் உள்ள நியூராஸ் நகரத் தைச் சேர்ந்தவர்கள்; தொழுதுண்டு வாழும் தொழிலை வெறுத்து, உழுதுண்டு வாழ்ந்த உயர் மக்கள். மண்ணில் உழைத்துப் பொன்னைத் தேடியவர்கள். இக்கென்னடி குடும்பத்தைச் சேர்ந்த பாட்ரிக் கென்னடி என்ற இளைஞர் ஒருநாள் வீட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார். பசி தாங்க முடியாமல் ஆதரவற்ற நிலையில் அவர் தம்மை மறந்து நடந்து கொண்டிருந்தார். பெரிய கூட்டமொன்று நியூராசை விட்டுக் கிளம்பிக் கொண்டிருந்தது. இளைஞர் பாட்ரிக் தம் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தார். தாம் நீண்டநாள் சேமித்து வைத்த நாணய முடிப்பு அதில் கிடந்தது. கூட்டம் லிவர்பூலை அடைந்தது. அமெரிக்கா

புறப்படுவதற்காக ஒரு கப்பல் அத்துறைமுகத்தில் நின்று கொண்டிருந்தது. அக்கூட்டத்தாரோடு சேர்ந்து தாமும் ஒரு பயணச் சீட்டு வாங்கிக்கொண்டார் பாட்ரிக். கப்பல் பாய்விரித்துப் புறப்பட்டது. பிறந்த பொன்னாட்டையும், தவழ்ந்து விளையாடிய இல்லத்தையும் அவர் மீண்டும் மிதிக்கவே இல்லை. ஜான்பிட் ஜெரால்டு கென்னடி மட்டும் காங்கிரஸ் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஓர் ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். தம் முன்னோரின் தாயகமான அயர்லாந்தைக் காணும் ஆவல் அவர் உள்ளத்தில் ஏற்பட்டது. அவர் நியூராஸ் சென்று கென்னடி குடும்பத்தாரின் பழைய வீட்டைப் பார்வையிட்டார்; அங்கு வாழ்ந்த கென்னடி குடும்பத்தாரிடம் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். ஏழை உழவர்களாக இருந்த அக்குடும்பத்தார் கென்னடியை அன்போடு வரவேற்று உபசரித்தனர்.

* * *

# 3. வாழ்க்கைப் போராட்டம்

பாட்ரிக் கென்னடி ஏறிவந்த கியூனர்டு கப்பல் பாஸ்டனிலுள்ள நீடில்சு என்ற தீவை வந்தடைந்தது. அத்தீவில் பெரிய கப்பல் கம்பெனியின் கிடங்கு ஒன்றிருந்தது. இந்த இடம் மிகவும் சுறுசுறுப்பான ஒரு சிறிய நகரம். கப்பல்கள் அடிக்கடி இத்தீவை வந்தடைந்து கொண்டிருந்தன. நூற்றுக்கணக்கான சிறிய படகுகள் போவதும் வருவதுமாக இருந்தன. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான வந்தேறிகளை அப்படகுகள் சுமந்து கொண்டு வந்து தீவில் இறக்கின. வெளிநாடுகளிலிருந்து வெறுங்கையோடு அங்கு வந்து குவிந்த வந்தேறிகளுக்கு வயிற்றுப் போராட்டம் பெரும் பாடாக இருந்தது. கப்பல் தளங்களிலோ, பொருள்களை ஏற்றி இறக்கும் இடங்களிலோ வேலை செய்யலாம். ஆனால் புற்றீசல்போல் நாள்தோறும் வந்து குவிந்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அச்சிறு தீவு எவ்வாறு வேலை கொடுத்து ஆதரிக்க முடியும்? பசியோடும் பட்டினியோடும் போராடித் தாய்நாட்டை விட்டு வந்த ஏழை மக்களுக்கு எதிரில் வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் பெரும் பூதம் தன் கோரைப் பற்களைக் காட்டிக் கொண்டு அங்காத்த வாயோடு நின்றது.

உழவுத் தொழிலையன்றி வேறொன்றும் அறியாத பாட்ரிக் செய்வதறியாது திகைத்தார். இயந்திரத் தொழில் அவருக்குப் பழக்கமில்லாத ஒன்று. முதலில் அவருக்கு வாழ்க்கை பெருந்துன்பமாகத் தான் இருந்தது. நாளடைவில் அவ்வியந்திர வாழ்க்கையோடு தம்மை இணைத்துக்கொண்டார். உழவுத் தொழிலை விட இயந்திரத் தொழில் நல்ல வருவாய் உள்ளதாக இருந்தது. ஆனால், நாள்தோறும் பதினைந்து மணி நேரம் உழைக்கவேண்டியிருந்தது.

*பாஸ்டன்* வட்டாரத்தில் * *யாங்கிக் கிறித்தவர்கள்* பெருவாரியாக வாழ்ந்தனர். இவ்வட்டாரத்தின் ஆதிக்கம் இவர்கள் கையில் இருந்தது. இவர்கள் அயர்லாந்திலிருந்து வந்து குடியேறிய கத்தோலிக்கர்களை மிகவும் கேவலமாக மதித்தனர்; வெறுத்தனர். அயர்லாந்து மக்களோடு எந்த விதச் சமூகத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்பதில் யாங்கிகள் பெரிதும் பிடிவாதம் காட்டினர். எனவே ஐரிஷ் மக்கள் தன்மானம் மிக்கவர்களாகவும், யாங்கிகளையோ மற்ற இனத்தாரையோ உதவிக்கு எதிர் பாராமல் சுயேச்சை மனப்பான்மையோடு வாழ்பவர்களாக வும் மாறிவிட்டனர். சமூகப் பொருளாதாரத் தொடர்புகளை யெல்லாம் தங்கள் இனத்தாரோடு நிறுத்திக்கொண்டனர்.

இளைஞர் பாட்ரிக் இவற்றைப்பற்றியெல்லாம் அதிகம் சிந்திக்கவில்லை. சிந்திப்பதற்கும் அவருக்கு நேரமில்லை. வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி என்பதிலேயே அவர் முனைப்பாக இருந்தார். வாழ்க்கையோடு சலியாத போராட்டம் நடத்தினார். ஓரளவு அவர் வாழ்க்கைத்தரம் மேன்மை யுற்றது. ஓர் ஐரிஷ் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு நான்கு குழந்தைகளுக்குத் தந்தையானார். நான் காவது குழந்தை பிறந்த சில நாட்களில் பாட்ரிக் இறந்தார்.

பாட்ரிக்கின் நான்காவது குழந்தைக்குத் தாயார் *பாட்ரிக் ஜெ. கென்னடி* என்று பெயரிட்டார். அக்குழந்தை தான் ஜான் பிட் ஜெரால்டு கென்னடியின் தாத்தா. கென்னடியின் குடும்பம் உலகப் புகழ் பெறுவதற்கு வித் திட்டவர் இவரே. பாட்ரிக் ஜே. கென்னடியின் இளமை வாழ்க்கைத் துன்பத்திலேயே கழிந்தது. கணவனை இழந்த

---

* *யாங்கிக் (Yankee) கிறித்தவர்கள் பிராடெஸ்டண்டுகள் நியூ இங்கிலாந்து மாநிலங்களில் பெருவாரியாக வாழும் அமெரிக்க மக்கள்.*

கைம்பெண்ணான இவர் தாயார், ஒரு கடையில் வேலை செய்து தம் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

தம் தாயின் நிலை கண்டு வருந்திய பாட்ரிக் ஜே. கென்னடி இளமையிலேயே பள்ளிப் படிப்பைத் துறந்து விட்டு உழைப்பாளியாகி விட்டார். மதுபான வாணிகத்தில் இவர் கவனம் சென்றது. கிழக்குப் பாஸ்டனில் கப்பல் துறைக்கெதிரில் சிறிய மதுக்கடை ஒன்றைத் திறந்தார். கப்பல் தளத்தில் பணி முடித்துக் களைப்போடு திரும்பும் தொழிலாளர் பலர் இவருடைய கடைக்கு வந்து மதுவருந்தத் தொடங்கினர். நாளடைவில் வாணிகம் பெருகியது. நடுத்தர மக்கள் நிலையைக் கடந்து சிறிது செல்வம் சேர்க்கும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.

பாட்ரிக் ஜே. கென்னடி பருத்த உடலும் உயர்ந்த தோற்றமும் வாய்க்கப் பெற்றவர். முறுக்கிவிட்ட மீசை இவர் முகத்தை அழகு செய்யும். எல்லாரிடத்திலும், இவர் சரளமாகப் பேசிப் பழகும் பண்புள்ளவர். இன்சொல் இவருக்கு வாய்த்த பிறவிக் கொடை. இவர் மெல்லப் பேசும் அடக்கமும், கண்டிப்பான நற்பழக்கங்களும் உடையவர்; பிறருக்கு மதுவை வழங்குவாரேயன்றித் தாம் அதை நாவால் தீண்டமாட்டார். குறைந்த கல்வியறிவுடையவர் என்றாலும், படிப்பதில் மிகவும் ஆர்வம் காட்டினார். இவர்பால் பொருந்தியிருந்த இத்தகு அரும் பண்புகளால், பாஸ்டன் பகுதியில் வாழ்ந்த மக்களை இவர் பெரிதும் கவர்ந்தார். சமூகத்தில் இவருக்கு நிலையான மதிப்பு ஏற்படத் தொடங்கியது. இவரும் தமது செல்வாக்கை விரிவுபடுத்திக் கொண்டார். தொடர்ந்தாற் போல் ஐந்து முறை மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில் நின்று வெற்றிபெற்றார். பின்னர் மாநில மேல்சபை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடைய மூத்த மகனே ***ஜோசப் பாட்ரிக் கென்னடி*** என்பவர்.

● ● ●

# 4. செல்வச் சிறப்பு

பாஸ்டன் பகுதியில் குறிப்பிடத்தக்க மற்ருெரு செல்வர் ஜான் எப். பிட் ஜெரால்டு என்பவர். இவரும் ஐரிஷ் கத்தோலிக்கர்; பொது வாழ்விலும் அரசியல் வாழ்விலும் நல்ல ஈடுபாடு கொண்டவர். கடற் சுங்கத் துறையில் எழுத்தராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிப் படிப்படியாக முன்னேறி நாட்டுத் தன்ருட்சி மன்ற உறுப்பினர், மாநகராட்சி மன்றச் சிறப்புறுப்பினர், மாநிலச் சட்ட உறுப்பினர் அமெரிக்க பாராளுமன்றக் காங்கிரஸ் உறுப்பினர் முதலிய மதிப்பான பதவிகளை வகித்து இறுதியில் பாஸ்டன் நகர மேயரும் ஆனுர்.

இச் சமயத்தில் ஜோசப் பாட்ரிக் கென்னடி, ஹார் வார்டு கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று, ஒரு வங்கியின் அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். கி. பி. 1914 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஜோசப் பாட்ரிக் கென்னடிக்கும், பிட் ஜெரால்டின் மகளான **ரோசிக்கும்** திருமணம் நடைபெற்றது.

ஜோசப் பாட்ரிக் கென்னடி அயராத உழைப்பும், நுண்ணறிவும் வாய்க்கப் பெற்றவர். இவர் சிறுவராக இருந்தபோது குடும்பம் வறுமை நிலையில்தான் இருந்தது. அப்போது இவருக்கு வயது ஏழு. அப்பிஞ்சுப் பருவத்தில் இவர் பாஸ்டன் உல்லாசப் படகுகளில் பட்டாணிக் கடலையும் சாக்லேட் கட்டியும் விற்றுக் குடும்பத்திற்குத் துணையாக இருந்திருக்கிருர். இவர் கல்லூரியில் படித்த காலத்தில் ஒரு கோடை விடுமுறையின் போது ஊர்க் காட்சிகளைப் பார்க்கும் பேருந்து வண்டியொன்றை ஓட்டிப் பல ஆயிரம் டாலர்களைச் சம்பாதித்தார்; தமது முப்பத்தைந்தாவது வயதிற்குள் ஒரு மில்லியன் டாலர் சம்பாதிக்க வேண்டு

மென்று உறுதி பூண்டிருந்தார்; அவ்வுறுதியின்படி சம்பாதித்தும் விட்டார்; ஒரு மில்லியன் டாலர் மட்டுமல்ல பல மில்லியன் டாலர்கள் சம்பாதித்தார்.

இவருடைய உழைப்பு ஈடு இணையற்றது. கிழக்குப் பாஸ்டனில் இவருடைய குடும்பத்தார்க்கு ஒரு பகுதி சொந்தமான வங்கியொன்று இருந்தது. இவ்வங்கி இழப்பில் நடந்து கொண்டிருந்த காரணத்தால், மற்றொரு பெரிய வங்கியுடன் இணையும் நிலையில் இருந்தது. உடனே ஜோசப் பாட்ரிக் கென்னடி சிறிது மூலதனம் திரட்டித் தம் குடும்பத்தார் துணையுடன் அவ்வங்கியின் அதிபர் ஆனார். அப்போது இவருடைய வயது இருபத்தைந்து தான். அமெரிக்க நாட்டிலேயே இவ்வளவு இளம் வயதில் இப்பதவியை வகித்தவர் இவர் ஒருவரே.

சில ஆண்டுகள் கழித்து ஜோசப் வங்கித் தலைவர் பதவியை விட்டு விட்டுப் பெரிய கப்பல் கட்டும் துறையொன்றின் நிர்வாகியானார். அதில் சிறிதுகாலம் பணியாற்றி விட்டு **ஸ்டோன் அண்டு கம்பெனி** என்ற பெரிய முதலீட்டு வங்கியின் தலைவரானார். பாஸ்டன் நகரில் மிகப் பெரிய வங்கி அதுதான். அது யாங்கிகளின் ஆதிக்கத்தில் இருந்தது. அதில் எப்படியோ ஜோசப் நுழைந்து விட்டார். ஆனால், இதை யாங்கி முதலாளிகளில் பலர் விரும்பவில்லை. ஜோசப்பிற்கு எதிர்ப்புகள் வளரத் தொடங்கின. ஜோசப் சிந்திக்கத் தொடங்கினார்; பாஸ்டனில் யாங்கிகளின் ஆதிக்கம் இருக்கும் வரையில் ஐரிஷ் கத்தோலிக்கர்கள் பொருளாதாரத் துறையிலோ அரசியல் துறையிலோ சிறப்பான முன்னேற்றம் அடைய முடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்தார். எனவே பாஸ்டனை விட்டு வெளியேற ஜோசப் முடிவு செய்தார்.

பாஸ்டன் நகரை எல்லையாகக் கொண்டு வளர்ந்த வாணிகம் இப்போது பெருத்த அளவில் விரிவு பெற்றது. ஜோசப் தமது தொழில் நிறுவனங்களை நியூயார்க்கிற்கும்

ஹாலிவுட்டிற்கும் மாற்றினுர். ஜோசப் கென்னடி தம் கவனத்தைத் திரைப்படத் தொழிலிலும் திருப்பினுர். பல திரைப்பட நிறுவனங்களைத் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்து, அவற்றை மாற்றியமைத்துப் பேரளவு ஆதாயத்துக்கு விற்ருர்.

பொருளாதாரத் துறையில் ஜோசப் கென்னடி தாம் எதிர்பார்த்த அளவுக்குமேல் பெரிய வெற்றி பெற்ருர். அடுத்தாற்போல் அவருடைய கவனம் அரசியல் துறையின் பால் சென்றது. அவருக்கு இளமையிலிருந்தே ஜனநாயகக் கட்சி (Democratic Party) யின்பால் பிடிப்பு உண்டு. கி. பி. 1936 இல் *பிராங்க்வின் டி. ரூஸ்வெல்ட்* அமெரிக்க நாட்டுத் தலைவராக விளங்கினுர். அவருடைய கொள்கைகளை ஆதரித்து, "நான் ரூஸ்வெல்ட்டை ஆதரிக்கிறேன்" என்ற பெயரில் ஜோசப் கென்னடி ஒரு நூல் எழுதி வெளியிட்டார். அந்நூலில் ரூஸ்வெல்ட்டின் புதுமுறைக் கொள்கைகளை ஆதரித்து அமெரிக்கப் பொருளாதாரத்தை ஆட்டிப் படைக்கும் பெரிய பண முதலைகளின் நன்றியற்ற போக்கைத் தம் சொல்லம்புகளால் துளைத்து எடுத்துவிட்டார்; அவர்களைத் தாக்குவதற்கென்றே "சலுகை பெற்ற பெரிய மனிதர்கள்", "நன்றியற்ற பணக்காரர்கள்" என்ற பல புதிய சொற்ருெடர்களை உருவாக்கினுர். இச்சொற்களைப் படித்த பணக்காரர்கள் பலர் மிகவும் உள்ளம் புண்பட்டனர். இளமையில் யாங்கி முதலாளிகள் தமக்குக் கொடுத்த தொல்லைகளை உள்ளத்தே வைத்துக் கொண்டு சரியானபடி பழி வாங்கிவிட்டார் ஜோசப் கென்னடி.

ரூஸ்வெல்ட் இவரைப் பங்குப் பத்திரங்கள் வழங்கும் குழுவின் தலைவராகவும், பின்னர்க் கடல்துறை நிர்வாகக் குழுவின் தலைவராகவும் அமர்த்தினுர். ஒரு கத்தோலிக்கர் இவ்வுயர் பதவிகளில் அமர்த்தப் பட்டதைக் கண்ட அமெரிக்க முதலாளிகள் வியப்பில் ஆழ்ந்தனர். இறுதியில் ஜோசப் கென்னடி பிரிட்டனின் தூதராகவும் ஆக்கப் பட்டார்.

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்றார் புரட்சிக் கவிஞர். இப்பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது ஜோசப் கென்னடியின் குடும்பம். இவருக்கு நான்கு ஆண் குழந்தைகளும், ஐந்து பெண் குழந்தைகளும் பிறந்தனர். இவர்களில் இரண்டாமவராகப் பிறந்தவரே, அமெரிக்கக் குலவிளக்காகத் தோன்றி அணைந்த ஜான்பிட் ஜெரால்டு கென்னடி.

○ ○ ○

# 5. கென்னடியின் இளமை

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்"—என்பது வள்ளுவப் பெருமானின் அருள்வாக்கு. இத்திருக்குறட் கருத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கியவர் ஜோசப் கென்னடி. ஜான் பிட் ஜெரால்டு கென்னடி இன்று உலக மக்கள் உள்ளத்தில் அழியா இடம் பெற்றதற்கு அவருடைய தந்தையாகிய ஜோசப் கென்னடியே அடிப்படைக் காரணம் என்பது வெள்ளிடை மலே. தம் மகனுக்கு ஜோசப் கென்னடி முன்னேடியாகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்துகாட்டினர். ஜானின் அரசியல் ஆசான் அவருடைய தந்தையே என்று கூறினல் மிகையாகாது.

ஒரு குழந்தையின் எதிர்கால வாழ்க்கைக்கு அடிப் படையாக அமைபவை இரண்டு என்று உளநூல் வல்லுநர் கூறுவர். ஒன்று தலைமுறை தலைமுறையாக வருவது (heredity); மற்றென்று சுற்றுச் சூழ்நிலே. ஜான் கென்னடிக் குத் தம் தந்தையின் மூலம் நல்ல தலைமுறை நிலே கிட்டியது. நல்ல சுற்றுச் சூழ்நிலேயை ஜோசப் தம்முடைய மகனுக்கு அமைத்துக் கொடுத்தார். தந்தையும் மகனும் பல பண்பு களில் ஒற்றுமை காட்டினர்.

ஜோசப் இளமையிலேயே சிறந்த உழைப்பாளர்; ஜானும் இளமையிலேயே சிறந்த உழைப்பாளர்.

ஜோசப் சிறந்த எழுத்தாளர்; அவர் எழுதிய நூல் அமெரிக்க மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. ஜானும் சிறந்த எழுத்தாளர்; இவர் எழுதிய நூல்கள் உலகப் புகழ் பெற்றன; அமெரிக்காவில் மிக உயர்ந்த பரிசான *புலிட்சர் பரிசையும்* இவர் நூல் ஒன்று பெற்றது.

ஜோசப் அமெரிக்க அரசியலில் பெரிய பதவிகளை வகித்தார்; ஜான் அமெரிக்க நாட்டுத் தலைவராகவே ஆகிவிட்டார்.

கால் பந்தாட்டத்திலும், கழிப் பந்தாட்டத்திலும் (base ball) ஜோசப் வல்லவர்; ஜானுக்கு இவ்விரண்டிலும் நல்ல ஈடுபாடு உண்டு. தம்முடைய முதுகெலும்பை முறித்துக்கொள்ளும் அளவுக்குக் கால் பந்தாட்டத்தில் இவர் பித்துடையவராக இருந்தார்.

ஜான் இளமையில் பல பள்ளிகளில் கல்வி பயின்றார். **புரூக்ளின்** என்ற இடத்திலுள்ள துவக்கப் பள்ளியிலும், நியூயார்க்கிற்கு அருகிலுள்ள **ரிவர்டேல்** பள்ளியிலும், **கனெக்டிகட்** நகரிலுள்ள **காண்ட்டர்பரி** பள்ளியிலும் ஜான் தமது இளமைக் கல்வியை முடித்துக் கொண்டார். பிறகு **சோட்** பள்ளியில் உயர் படிப்புக்காகச் சேர்ந்து தமது பதினெட்டாம் வயதில் பட்டம் பெற்றார். இறுதியில் **ஹார்வார்டு** கல்லூரியில் ஆராய்ச்சிக் கல்வியும் பயின்றார். இன்று அமெரிக்க அரசியலில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள **அட்லாய் ஸ்டீவென்சனும், செஸ்டர் பௌல்சும்** சோட் பள்ளியில் ஜானுடன் பயின்ற மாணவர்களே.

ஜான், பள்ளியில் பயின்றபோது ஒற்றைநாடி உடம்புக்காரர். இவரை ஆசிரியர் எல்லாரும் நன்கு நினைவில் வைத்திருக்கின்றனர். அடக்கமும், பண்பும் உள்ளவராக ஜான் விளங்கினார் என்று ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். இவருடன் பயின்ற மாணவர்கள் இவரைப்பற்றிச் சுவையான ஒரு செய்தி குறிப்பிடுகின்றனர். குறிப்பிட்ட ஒரு சில பொருள்களை மட்டும் இவர் மறந்து விடுவாராம்.

"கடிதப் போக்குவரத்து, உரையாடல், வரலாற்று நிகழ்ச்சிகள் முதலியவை ஜானுக்குப் படம் பிடித்தாற்போல் நினைவிருக்கும்; ஆனால் சொற்பொழிவு நகல்கள், நூல்கள், துணிமணிகள் ஆகியவற்றை எங்கே வைத்தோம் என்பதை

அவர் அடிக்கடி மறந்து விடுவார்'' என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஜான் சிறந்த எழுத்தாளர் என்பதையும், சிறந்த பேச்சாளர் என்பதையும் உலகம் நன்கு அறியும். ஆனால் அவருடைய சொற்பொழிவைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''அவருடைய பேச்சில் வெற்று அலங்காரங்களோ, கேட்போரை மலைக்கவைக்கும் சொல்லடுக்குகளோ, கிடையா. வீணாக ஒரு சொல்லைக்கூடத் தவறியும் தம் பேச்சில் பயன் படுத்தமாட்டார். தம் கொள்கைக்கு ஆக்கம் தேடும் தடைவிடைகளும் விளக்கங்களுமே அவர் பேச்சில் காணப் படும்'' என்று அமெரிக்க அறிஞர்கள் கூறுகின்றனர். ஜான் இளமையிலிருந்தே அவ்வாறு பழகிவிட்டார். ஒரு சிறிய கருத்தை வெளியிடும்போது காரண காரியங்களைப் பிறர் உள்ளம் கொள்ளுமாறு விளக்கி எடுத்துக் கூறுவதே அவர் வழக்கம். அவர் பள்ளியில் பயின்ற காலத்தில், தமக்குக் கொடுத்த செலவுத் தொகை போதவில்லை என்பதைத் தந்தைக்கு எடுத்துக் காட்டி மிகுதியான தொகை கேட்க விரும்பினார். அமெரிக்கச் சமூக உரிமைக் (American Civil Right) கொள்கையின் இன்றியமையாமையைப் பாராளு மன்றத்தில் எடுத்துக் கூறும்போது எவ்வாறு காரண காரியங்களை எடுத்துக் கூறினாரோ, அதேபோலத் தந்தைக்கெழுதிய கடிதத்திலும் காரண காரியங்களை எடுத்துக் கூறியிருந்தார். அக்கடிதம் பின்வருமாறு:

''இப்போது என் செலவுக்காக நாற்பது செண்டு கொடுக்கப்படுகிறது. இதை வான ஊர்தியின் பொருட்டும், மற்றப் பிள்ளைப்பருவ விளையாட்டுக்களுக்காகவும் பயன் படுத்தினேன். நான் இப்பொழுது ஒரு சாரணச் சிறுவன் இனி நான் உணவு வைத்துக்கொள்ளும் பெட்டிகள், தோளில் மாட்டிக் கொள்ளும் பைகள், கம்பளிகள், விளக்குகள், மற்றும் பல ஆண்டுகளுக்குப் பயன்படக்கூடிய பொருள்கள் முதலிய வற்றை வாங்கவேண்டியிருக்கிறது. இந்தப் பொருள்களை

யெல்லாம் வாங்கி, எனக்கு வேண்டியவற்றையும் கவனித்துக் கொள்வதற்கு எனக்கு மேற்கொண்டு முப்பது செண்டுகள் தேவைப்படுகின்றன. எனவே எனது நியாய மான வேண்டுகோளை ஏற்று நான் கேட்கும் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்...''

ஒருமுறை அவர் தம்முடைய பொறுப்புணர்ச்சியை உணர்ந்து தமது தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினர். அக்கடிதம் பின்வருமாறு:

''அசட்டுத்தனமாகச் சுற்றித் திரிவதை நிறுத்திவிடுவ தென்று உறுதியோடு முடிவு செய்துவிட்டேன். நான் இங்கிலாந்துக்குச் செல்லவேண்டுமானுல், இந்த ஆண்டு என் படிப்பை வெற்றிகரமாக முடிப்பது எவ்வளவு இன்றியமை யாதது என்பதை நான் உணருகிறேன். நான் மிக முயற்சி யோடு படிப்பதாக என்னை இவ்வளவு நாட்களாக நானே ஏமாற்றிக் கொண்டிருந்தேன் என்பதை உண்மையாகவே உணருகிறேன்...''

இக்கடிதத்தைப் படித்த ஜோசப் கென்னடி ஜானுக்கு மறுகடிதம் எழுதினர். தம் மகனுடைய முன்னேற்றத்தில் அக்கறையும், பொறுப்புணர்ச்சியும் கொண்ட ஒரு தந்தை எவ்வாறு கடிதம் எழுதுவார் என்பதற்கு அக்கடிதம் சிறந்த எடுத்துக்காட்டாகும். அக்கடிதம் பின்வருமாறு:

அன்புள்ள ஜாக் !

நான் ஏதோ நச்சரிப்பவன் என்று நினைக்கக்கூடாது. மக்களை எடைபோடுவதில் எனக்கு நல்ல பட்டறிவு உண்டு. உன்னிடம் ஆற்றலும் அறிவும் இருக்கின்றன. நீ சிறப்பான முன்னேற்றத்தை அடைவாய் என்பது எனக்கு நன்கு தெரி யும். உன்னிடமுள்ள ஆற்றல்களையும் பண்புகளையும் நீ பயன் படுத்திக் கொள்ளவேண்டும் என்று நான் வற்புறுத்தா விட்டால், ஒரு நண்பன்கூடச் சொல்லக் கூடியதை நான் சொல்லத் தவறியவனுவேன். நான் உன்னிடம் மிகவும் அதிக மாக எதிர்பார்க்கவில்லை. நீ சிறந்த மேதையாக மலர்ச்சி

பெருவிட்டால் நான் ஏமாற்றமடைய மாட்டேன். ஆனால் நல்ல தெளிவும், எதையும் நன்கு சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்யும் ஆற்றலும் உள்ள, பயனுடைய குடிமகனாக நீ விளங்க முடியுமென்றே நான் நினைக்கிறேன்...

மேற்கண்ட கடிதங்களைப் படிக்கும்போது, ஜோசப் கென்னடி தம் மக்களை 'அறிவறிந்த மக்களாக' வளர்ப்ப தற்கு எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டார் என்பது விளங்கும். சாப்பாட்டு நேரத்தில் ஜோசப் தம் மக்களை யெல்லாம் ஒன்று கூட்டி உணவருந்துவது வழக்கம். அப்போது அரசியல், சமூகம், கலை, விளையாட்டு ஆகிய பலவற்றைப் பற்றிச் சிறப்பான உரையாடல்கள் நடைபெறும். மக்களின் உள்ள வளர்ச்சிக்கு இவ்வுரையாடல்கள் பெரிதும் துணைபுரிந்தன.

பள்ளிப் பருவத்தில் ஜானுக்குக் கல்வியைவிட விளை யாட்டுக்களிலும், போட்டிப் பந்தயங்களிலும் மிகுந்த ஆர்வம் இருந்தது. முப்பது விநாடிகளில் நாற்பத்தாறு மீட்டர் நீந்தி விடுவார். இந்நீச்சல் பயிற்சி, இவர் கப்பல் தலைவராக இருந்தபோது பல பேருடைய உயிரைக் காப்பதற்குப் பெருந் துணை புரிந்தது. பள்ளி நேரமில்லாத பிறநேரங்களில் பெரும் பாலும் இவரை விளையாட்டு வெளிகளில்தான் காணமுடியும்.

சில பெற்றோர்கள் ஓர் எல்லைக்குள் நிறுத்தி மிகக் கட்டுப்பாட்டுடனும், கண்டிப்புடனும் வளர்க்கின்றனர். இச்சூழ்நிலையில் சில குழந்தைகளின் உள்ளம் ஆற்றலிழந்து போய்விடக்கூடும். இவ்வுண்மையை நன்குணர்ந்தவர் ஜோசப் கென்னடி. தம் குழந்தைகளுக்கு வெளி உலகில் தொடர்பு இல்லாமல் செய்துவிடவேண்டும் என்று அவர் என்றும் விரும்பியதில்லை. உலகத்தில் வாழ்க்கைப் போராட்டம் எவ்வளவு கடுமையாக இருக்கிறது என்பதை, அவர்களும் தெரிந்து கொள்ளட்டுமே என்று நினைத்தார். எனவே வேளை நேரும் போதெல்லாம் உலகியல் அறிவை மக்களுக்கு ஊட்ட அவர் தவறியதே இல்லை.

# 6. ஐரோப்பியப் பயணம்

ஜான் தமது பதினெட்டாவது வயதில் பட்டம் பெற்றதும் பிரான்சு, ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். ஜோசப் கென்னடி இச்சமயம் பிரிட்டனில் அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஜான் தமது தந்தையைக் காண்பதற்காக பிரிட்டன் சென்றார். அப்போது இலண்டன் பொருளாதாரப் பள்ளியில் ஹெரால்டு ஜே. லாஸ்கி என்பவர் பேராசிரியராக இருந்தார். இவர் உலகப் புகழ் பெற்ற பொருளாதார அறிஞர். இவரிடம் ஜான் பாடம் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஜானுக்கு இளமையிலிருந்தே வரலாற்றுப் பாடத்தில் அளவு கடந்த பற்றுதல் இருந்தது. அதுவும் அரசியல் வாதிகளின் வாழ்க்கை வரலாறு என்றால் அவருக்கு மிகவும் பிடிக்கும். அவர் கல்லூரியில் சேர்ந்தவுடன் தேசியம், பாசிசம், குடியேற்ற நாடுகளின் அரசியல் ஆகியவைகளைப் பற்றி ஊக்கத்துடன் கற்கத் தொடங்கினார். பிரிட்டனில் இருந்தபோது ஆங்கிலத் தொழிலாளர் கூட்டம், ஐரோப்பிய அகதிகள், காலனி நாடுகளிலிருந்து வந்த தீவிர வாதிகள், இந்திய நிர்வாக உயர் அதிகாரிகள் ஆகியோருடன் ஜான் கலந்து பழகினார். அவருக்கு அவர்களுடைய கருத்துக்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. இத்தகைய பட்டறிவுகளைத் தம் மகனுக்கு ஊட்டுவதில் ஜோசப் கென்னடியும் பேரூக்கம் காட்டினார்.

பிரிட்டனில் சிறிது காலம் பொருளாதாரக் கல்வி பயின்ற பின் ஜான் அமெரிக்கா திரும்பினார். ஹார்வார்டு கல்லூரியில் அரசியல் தத்துவத்திற்கான 'ஆனர்சு' பட்டத்தைப் பெறும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். இப்பட்டத்தைப் பெற சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை எழுதவேண்டும்

ஹார்வார்டு கல்லூரியில் முதல் ஆண்டுக் கல்வியை ஜான் வெற்றிகரமாக முடித்த நேரத்தில் இரண்டாம் உலகப் போருக்கான முயற்சிகளில் ஐரோப்பாக் கண்டம் ஈடுபட்டிருந்தது. இக்கொந்தளிப்பை மன நிம்மதியின்றி ஜான் கவனித்துக் கொண்டிருந்தார். கல்லூரிப் பாடத்தில் அவர் உள்ளம் நிலைகொள்ளவில்லை; போர் நெருக்கடி குமுறிக் கொண்டிருக்கும் இடங்களை நேரில் பார்க்க வேண்டுமென்று விரும்பினார். ஹார்வார்டு கல்லூரி முதல்வரிடம் இசைவு பெற்றுக்கொண்டு ஜான் மீண்டும் ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். தமது விருப்பத்தைப் பிரிட்டனிலிருந்த தமது தந்தைக்கும் தெரியப்படுத்தினார். ஜோசப் கென்னடி தம் மகனின் விருப்பத்திற்கு ஒப்புதல் தெரிவித்ததோடு, சுற்றுப் பயணத்தின் போது செல்லும் நாடுகளின் அரசியல் நிலையைப்பற்றி விரிவான அறிக்கைகளை எழுதியனுப்புமாறு பணித்தார்.

இச்சுற்றுப் பயணத்தின்போது பிரான்சு, போலந்து, ரீகா, உரிசியா, துருக்கி, பாலஸ்தீனம், ஜெர்மனி, பால்கன் முதலிய நாடுகளை ஜான் பார்வையிட்டார்; அந்தந்த நாட்டு மக்களுடன் கலந்து பழகி அவர்களுடைய உள்ளங்களையும் ஆராய்ந்தார்; இப்பயணத்தில் பல சிறந்த அரசியல் வாதிகளைச் சந்தித்து அவர்களுடன் தங்கி உரையாடும் வாய்ப்பும் பெற்றார். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் **பாரிசில்** தூதராக இருந்த **புல்லிட்டும்,** வார்சாவில் தூதராக இருந்த **பிட்டலும், மாஸ்கோவில்** இரண்டாவது செயலாளராக விருந்த **சார்லஸ் போலனும்** ஆவர்.

ஜான் ஒவ்வொரு நாட்டுத் தலைநகரிலும் தங்கியிருந்த போது, விரிவான அறிக்கைகளைத் தயாரித்து இலண்டனிலிருந்த தமது தந்தைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். இவருடைய கட்டுரைகளில் இலக்கியச் சுவை இல்லை; வரிக்கு வரி நிதான உணர்ச்சியே புலப்பட்டது; தாம் எடுத்துக்கொண்ட

கருத்துக்களை விருப்பு வெறுப்பில்லாமல் நடுநிலையிலிருந்து சீர்தூக்கிப் பார்த்து எழுதியிருந்தார்; பல நெருக்கடியான அரசியல் செய்திகளை வருணிக்கும் போது உணர்ச்சி வயப் படாமல் ஒதுங்கி நின்று எழுதியிருந்தார்; ஜனநாயகத்தின் வலிவற்ற தன்மையையும், ஆங்கிலப் பேரரசின் அலட்சிய மனப்பான்மையையும் மிகஅழகாகத் தெளிவுபடுத்தியிருந்தார் இரண்டாம் உலகப் போர் எந்த உருவில் மூளும் என்று ஜான் தம்முடைய கட்டுரையில் கூறியிருந்தாரோ, அதே உருவில் குறிப்பிட்ட காலத்தில் மூண்டது. போரைப்பற்றி இவர் குறிப்பிட்டிருந்த கருத்துக்களில் பெரும் பகுதி உண்மையாயிற்று.

தம் சுற்றுப் பயணத்தின் போது தாம் எழுதிய கட்டுரைகளையே ஒழுங்குபடுத்தி ஜான் ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்காகக் கல்லூரிக்கு அனுப்பினார். இக்கட்டுரைகள் பேராசிரியர்களுக்கு மிகவும் பிடித்திருந்தன. ஜானின் அரசியல் தீர்க்கதரிசனத்தை அவர்கள் மிகவும் பாராட்டினர்.

ஜான் எழுதிய கட்டுரைகளைப் படித்து சுவைத்த ஜோசப் கென்னடி அளவற்ற பெருமகிழ்ச்சி கொண்டார்; தம் மகனுடைய அறிவாற்றலை வியந்து பாராட்டினார் சிறப்பான எதிர்காலம் தம் மகனுக்குக் காத்திருக்கிறது என்று அவர் உள்ளம் நினைக்கத் தொடங்கியது.

“அன்பிற்குரிய ஜான்!

உன் ஆற்றலைப்பற்றி எனக்குத் தெரியும். நீ திறமை மிக்கவன்; சிறப்பான மகன்...” என்று ஜோசப் கென்னடி கடிதம் எழுதியிருந்தார். அறிவறிந்த ஒரு மகனைப் பெறு வதைவிடப் பேரின்பம் ஒரு தந்தைக்கு என்ன இருக்க முடியும்?

தம்முடைய ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ஹார்வார்டு கல்லூரியில் நல்ல வரவேற்புக் கிடைத்ததை அறிந்த ஜான் அக்கட்டுரைகளை நூலாக வெளியிட விரும்பினார். வில்பிரட்

பங்க் பதிப்பகத்தார் இந்நூலைச் சிறந்த முறையில் வெளியிட இசைந்தனர். இங்கிலாந்து ஏன் தூங்கியது? என்ற பெயரோடு இந்நூல் அழகிய முறையில் வெளியிட வந்தது. இந்நூல் அமெரிக்க அரசியல் உலகில் பெரிய பரபரப்பை உண்டாக்கியது. நாற்பதாயிரம்படிகள் விற்பனையாயின. இங்கிலாந்திலும் இதே அளவு இந்நூல் விற்பனையாயிற்று. அவ்வாண்டு மிகப் பேரளவில் விற்பனையான நூல்களில் இதுவும் ஒன்று. "இருபத்துமூன்று வயதுடைய இளைஞர் ஒருவர், மிகத் திறமையோடு அரசியலை ஆராய்ந்து தெளிவான முறையில் பல அரிய உண்மைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்" என்று அமெரிக்கத் திறனாய்வாளர்கள் பாராட்டி எழுதியிருந்தனர்.

○ ○ ○

# 7. போர் வீரர் கென்னடி

கல்லூரியை விட்டு வெளிக் கிளம்பிய கட்டிளங் காளையான ஜான் தாமும் போரில் நேரடியாக பங்கு கொள்ள விரும்பினூர்; எனவே இராணுவத்தில் சேர்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். ஜானின் முதுகெலும்பு இதற்கு முன்னரே பழுதுபட்டிருந்தது. முதுகில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக, இராணுவத்தில் சேர்வதற்காக அவர் போட்டிருந்த விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது ஜானுக்கு இது பெருத்த ஏமாற்றமாக இருந்தது. முயற்சி யுடையார் இகழ்ச்சியடையாரன்றே? ஜான் எவ்வாறேனும் இராணுவத்தில் சேர்வதென முடிவு செய்தார்.

மருத்துவர்களையும் உடற்பயிற்சி வல்லுநர்களையும் கலந்து ஜான் ஆலோசனை செய்தார். தொடர்ந்து ஐந்து திங்கள்கள் உடற்பயிற்சி செய்து தம் உடலை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். எதிர்பார்த்தபடி அவருடைய உடல் வலிமையும் வனப்பும் பெற்றது. மீண்டும் இராணுவத்தில் சேர்வதற்காக விண்ணப்பம் செய்தார். இம்முறை அவர் எவ்வித மறுப்புமின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடற் படைத் தகுதித் தேர்விலும் முதல்தரமான வெற்றி பெற்றூர். ஜான் கென்னடி கடற்படை வீரர் கென்னடி ஆனூர்.

இரண்டாம் உலகப் போர் மிகவும் தீவிரமாக நடை பெற்றுக் கொண்டிருந்தது ஜப்பானியர்கள் பெர்ல் துறை முகத்தின்மீது திடீர்த் தாக்குதல் நடத்தினர். ஜான் போரில் பங்குகொள்ள வேண்டும் என்ற தமது விருப்பத்தை மேலதி காரிகளுக்குத் தெரியப்படுத்தினூர். மேலதிகாரிகளும் அவர் விருப்பத்திற்கு இணங்கினர். கி. பி. 1943 ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஜான், சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து தெற்குப் பசிபிக்கிற்குப் புறப்பட்டார். அங்குதான் நேச நாட்டுப் படைகள் ஜப்பானியர்களைப் பின்னடையச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தன.

அவ்வாண்டு ஆகஸ்டுத் திங்கள் இரண்டாம் நாள் நள்ளிரவில், பி டி. 109 என்ற கண்காணிப்புப் போர்ப் படகு ஒன்று ஜியார்ஜியாவிற்கு மேற்கே சுற்றிக் கொண் டிருந்தது. அது அமெரிக்கக் கப்பற்படையைச் சேர்ந்தது. அதன் தலைமைப் பொறுப்பை லெப்டினெண்ட் ஜான் கென்னடி ஏற்றிருந்தார். எதிர்பாராத விதமாக ஜப்பானிய நாசகாரிக் கப்பல் ஒன்று அப்பக்கமாக வந்தது. அமெரிக்கப் படகைக் கண்டதும் அந்நாசகாரி மிக வேகமாகப் பாய்ந்து வந்தது.

நாசகாரிக் கப்பல் விரைந்து வருவதைப் படகுத் தலைவரான ஜான் கண்டார். ஆனால் சிறிய படகை வைத்துக் கொண்டு பெரிய நாசகாரிக் கப்பலை எதிர்த்து நிற்க முடியுமா? மண்ணாங்கட்டி மலையை எதிர்த்துப் போராட முடியுமா? ஜான் கென்னடி செய்வதறியாமல் திகைத்தார். நாசகாரி யின் எதிர்பாராத தாக்குதலுக்கு ஆற்றாத அமெரிக்கப் படகு, கண்மூடி விழிப்பதற்குள் இரண்டு துண்டாகிவிட்டது. இரு துண்டுகளும் கடலில் தீப்பற்றி எரியத் தொடங்கின.

படகு உடைந்ததும் இருவர் உடனே மாண்டனர். நாசகாரி மோதிய அதிர்ச்சியில் ஜான் மல்லாந்தவண்ணம் வீழ்ந்தார். முதுகில் பலமான அடிபட்டது. மரணம் வந்தால் இப்படித்தானிருக்கும் போலிருக்கிறது என்று அவர் எண்ணத் தொடங்கினார். ஒரு கணத்தில் அருமைப் பெற்றோரும், அன்பிற்குரிய உடன்பிறந்தாரும் அவர் உள்ளத்தில் தோன்றி மறைந்தனர். மெதுவாகச் சமாளித்து எழுந்து நின்றார் ஜான். படகிலிருந்து கடலில் வீழ்ந்த அதிகாரிகளும் மாலுமி களும் தண்ணீரில் எண்ணெய் எரிந்து கொண்டிருந்த இடத்துக்கு அப்பால் மிதப்பதற்குத் தத்தளித்துக் கொண் டிருந்தனர். இதற்குள் படகின் ஒரு பகுதி கடலுக்குள் மூழ்கி விட்டது. மற்றொரு பகுதி மிதந்து கொண்டிருந்தது ஜானும், மற்றும் நால்வரும் அதைப் பற்றிக் கொண்டிருந்தனர். மூழ்காமல் வேறு யாராவது உயிருடன் இருக்கிறார்களா என்பதை அறிவதற்காக ஜான் கூப்பாடு போட்டுக் கேட்டார்.

மேலும் ஆறு பேர் பதிலுக்கு எதிரொலி கிளப்பினர். அவர்களை எல்லாம் மீட்கும் முயற்சியில் ஜான் ஈடுபட்டார்.

மக்மாகன் என்பவருக்கு உடலெல்லாம் நெருப்புக் காயம் ஏற்பட்டிருந்தது. ஆரிஸ் என்ற மற்றொருவருக்குக் கர்லில் கடுமையான அடி ஏற்பட்டிருந்தது. கென்னடி அவர்கள் இருக்குமிடம் நீந்திச் சென்றார்; அவர்களை மெல்லப் படகுக்குக் கொண்டு வந்து சேர்த்தார். ஆரிஸ் வலி பொறுக்க முடியாமல் துடித்தார். உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கை அவர் உள்ளத்திலிருந்து நீங்கியது.

இத்துன்பச் சுழலில் உயிருக்கு மன்றாடிய மாலுமிகளைக் காப்பாற்றும் பொறுப்பு, தலைவரான ஜானுக்கு ஏற்பட்டது. ஒரு தலைவனின் ஆற்றல் இது போன்ற துன்பக் காலங்களில் தான் வெளிப்படும். ஜான், தாம் ஓர் இணையற்ற தலைவன் என்பதை அவ்வமயம் மெய்ப்பித்துக் காட்டினார். படகு உடைந்தவுடன் தாம் எவ்வாறு உயிர் பிழைப்பது என்பதைப் பற்றி ஜான் சிந்திக்கவில்லை; தம்மைச் சார்ந்தவர்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். ஆரிஸ் உயிருக்கு பயந்து அலறித் துடித்த போது, "பாஸ்டன் வீரனாகிய நீ இவ்வாறு அஞ்சுவதா? உன் கோழைத்தனத்தைக் கண்டு வெட்கப்படுகிறேன்" என்று கூறினார்.

பொழுது புலர்ந்தது. உடைந்த படகில் தொற்றிக் கொண்டிருந்த பதினொரு வீரர்களும் உதவிக்கு வேறு ஏதேனும் படகு வருமா? என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தனர் யாது காரணத்தாலோ படகு எதுவும் வரவில்லை. சுற்றியிருந்த தீவுகளில் ஜப்பானியர்கள் இருந்தனர். இவர்கள் நம்பியிருந்த உடைந்த படகும் மூழ்கத் தொடங்கியது. எந்த நேரத்திலும் ஜப்பானியர்களின் படகு அவ்வழியாக வரக்கூடும்.

"எதிரிகள் வந்தால் நாம் யாது செய்யலாம்? அவர்களோடு உயிருள்ளவரை போராடலாமா? அல்லது சரணடைந்து விடலாமா?" என்று ஜான் தமது நண்பர்களைக்

கேட்டார். "ஜான்! நீர்தாம் எமது தலைவர். நீர் என்ன முடிவு செய்கிறீரோ, அம்முடிவை நாங்களும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்" என்று நண்பர்கள் விடையிறுத்தனர்.

இவ்வாறு உரையாடிக் கொண்டிருந்தபொழுது, இவர்கள் தொற்றிக் கொண்டிருந்த படகு மூழ்கிவிட்டது. இனிக் கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதில் எவ்விதப் பயனுமில்லை என்பதை உணர்ந்த ஜான், நண்பர்களுடன் நீந்திச் சென்று அருகிலுள்ள ஒரு தீவை அடைய விரும்பினார். படுகாயமடைந்து விட்ட மக்மாகனைச் சுமந்து செல்வது இவர்களுடைய கடமையாயிற்று. ஜான் மக்மாகனை முதுகில் ஏற்றிக்கொண்டு மெல்ல நீந்திச் சென்றார். மற்ற நண்பர் களும் அவரைப் பின்தொடர்ந்தனர். தென் கிழக்கில் ஐந்து கி. மீட்டர் தொலைவில் தென்பட்ட ஒரு சிறு தீவை நோக்கி எல்லாரும் நீந்தினர். போகும்போது சுமை தாள முடியாமல் ஜான் நிறையக் கடல் நீரைக் குடித்தார். ஐந்து மணி நேரம் கடலோடு போராடி அத்தீவை அடைந்தனர். பதினைந்து மணி நேரம் எல்லாரும் கடல் நீரில் மிதந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது நண்பர்களை அத்தீவில் விட்டுவிட்டு ஜான் மட்டும் பெர்கூசன் பாதைக் கருகில் உள்ள மற்றொரு தீவுக்கு நீந்திச் சென்றார்; அப்பாதை வழியாகச் செல்லும் அமெரிக்கக் கண்காணிப்புப் படகுகளில் ஏதாவதொன்று கண்ணில் தட்டுப்படலாம் என்று எதிர்பார்த்தார்; ஆனால் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. ஏமாற்றத்தோடும் கவலையோடும் ஜான் திரும்பி வந்தார்.

நண்பர்கள் தங்கியிருந்த தீவை நோக்கி அவர் நீந்தத் தொடங்கினார். களைப்பும், பசியும் அவரை மிகவும் வாட்டத் தொடங்கின. எதிர்பாராத விதமாக ஒரு நீர்ச் சுழலிலும் சிக்கிக்கொண்டார். நீரின் வேகம் அவரைத் திசை தெரியாமல் இழுத்துச் சென்றது. நண்பர்கள் தங்கியிருந்த தீவையும் கடந்து சென்றுவிட்டார். சிறிது சிறிதாக நினைவையும்

இழக்கத் தொடங்கினுர். 'சிறுகச்சிறுக இறந்துகொண்டிருக் கிறோம் போலிருக்கிறது' என்று ஜான் நினைக்கத் தொடங் கினுர். இறுதியில் அந்நீரோட்டம் எப்படியோ அவரை நண்பர்கள் தங்கியிருந்த கரைக்கே கொண்டுவந்து சேர்த்து விட்டது. கரையில் ஒதுங்கிய ஜான் மெதுவாக மணலில் ஊர்ந்து செல்லத் தொடங்கினுர். நண்பர்கள் எல்லாரும் அவரைக் கரையில் கண்டதும் ஓடி வந்து தூக்கினர். ஜான் மணலில் வாந்தி எடுக்கத் தொடங்கினுர்; தமது அருகில் நின்று கொண்டிருந்த மூன்ருவது அதிகாரியை நோக்கி "இராஸ்! இன்று இரவு நீதான் முயற்சி செய்ய வேண்டும். எப்படியாவது கண்காணிப்புப் படகைக் கண்டு பிடித்தாக வேண்டும்" என்று கூறிவிட்டு மயங்கி விழுந்தார். அமெரிக்கக் கப்பற் படைத் தளத்தில் இருந்தவர்கள், பி. டி. 109 படகில் இருந்த வீரர்கள் யாவரும் இறந்து விட்ட தாக எண்ணினர். இவர்களுடைய ஆன்ம ஈடேற்றத்துக்காக இறைவணக்கமும் நடத்திவிட்டனர்.

அன்று மாலை இராஸ் பெர்கூசன் பாதைக்கு நீந்திச் சென்ருர்; நீண்ட நேரம் காத்திருந்தார். படகு எதுவும் கண்களுக்குப் புலப்படவில்லை. முதல் நாள் ஜானுக்கு ஏற் பட்ட பட்டறிவே இராசுக்கும் ஏற்பட்டது. மிகவும் அல்லல் பட்டுத் தீவுக்குத் திரும்பினுர். இனி அத்தீவில் தங்கியிருப்ப தால் யாதொரு பயனுமில்லை. என்பதை உணர்ந்த ஜான் தமது நண்பர்களோடு பெர்கூசன் பாதைக்கருகிலிருந்த தீவை நோக்கி நீந்திச் சென்ருர். இத்தீவை அடைய மூன்று மணி நேரம் அவர்கள் அலைகளோடு போராடினர். இத்தீவில் தென்னைமரங்கள் நிறைய இருந்தன. இளநீரைப் பருகித் தங்கள் வேட்கையையும் பசியையும் அவர்கள் போக்கிக்கொண்டனர்.

அன்று நான்காவது நாள். எல்லாருடைய உடலும் உள்ளமும் மிகவும் சோர்ந்துவிட்டன. உயிரோடு தங்கள் கப்பற்படைத் தளத்தை அடைவோம் என்ற நம்பிக்கை அவர்களுக்குச் சிறிது சிறிதாக நீங்கிக்கொண்டிருந்தது.

மக்மாகனுடைய நெருப்புக் காயங்களிலிருந்து சீழ் வடியத் தொடங்கியது. முழுமூச்சோடு இறுதி முயற்சியில் ஈடுபட்டனர் ஜானும் இராசும். இருவரும் அருகிலிருந்த நாருத் தீவுக்கு நீந்திச்சென்றனர். அப்பக்கத்தில் வாழும் சுதேசிகள் இருவர் அங்கிருந்தனர். ஜானையும், இராசையும் கண்டவுடன் அவர்கள் அங்கிருந்து ஓடிவிட்டனர். ஜப்பானியர்கள் விட்டுச் சென்ற சில உணவுப் பொருள்களும் படகு ஒன்றும் அங்குக் காணப்பட்டன. சிறிது நேரத்தில் வேறு சுதேசிகள் அங்கு வந்தனர். ஜான் அவர்களிடம் சிறிது நேரம் பேசி நட்புச் செய்துகொண்டார். பிறகு ஒரு தேங்காயின்மேல், "பதினொரு பேர் உயிருடனிருக்கிறோம். நாருத் தீவில் தங்கியிருக்கிறோம். நாங்கள் இருக்குமிடம் இத் தீவுக்காரர்களுக்குத் தெரியும்—கென்னடி" என்று ஜான் எழுதினார். அத் தேங்காய் மூடியை எடுத்துக் கொண்டு அச்சுதேசிகள் புறப்பட்டனர்.

ஜான் கண்காணிப்புப் படகைத் தேடும் முயற்சியில் மீண்டும் ஈடுபட்டார். இராசும் உடன் சென்றார். இருவரும் படகில் ஏறிப் புறப்பட்டுப் பெர்கூசன் பாதையை அடைந்தனர். திடீரென்று காற்று பலமாக வீசத் தொடங்கியது. ஏறிச்சென்ற படகும் கவிழ்ந்து விட்டது. இருவரும் இரண்டு மணி நேரம் கடலில் தத்தளித்த பிறகு எப்படியோ நாருத் தீவின் கரையில் வந்து ஒதுங்கினர். கையிலும் தோள்களிலும் இராசுக்கு நல்ல காயம். இருவரும் நாருத் தீவு மணலில் படுத்து நன்றாக உறங்கினர்.

கதிரவன் கீழைக்கடலில் தலை நீட்டித் தன் பொற் கதிர்களால் அலைகளின் மீது தங்கப்பாலம் எழுப்பினான். செய்திகொண்டு சென்ற சுதேசிகள் இவர்களை வந்து எழுப்பினர்.

"உங்களுக்கு ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறோம்" என்று அவர்கள் கூறினர்.

ஜான் அக்கடிதத்தைப் பிரித்துப் படித்துப் பார்த்தார். **நியூஜிலந்துக்** காலாட் படையின் தளபதி **நியூஜார்ஜியா** விலிருந்து அக்கடிதத்தை அவருக்கு எழுதியனுப்பியிருந்தார். அச் சுதேசிகளோடு தம்முடைய முகாமுக்கு வரும்படி அக் கடிதத்தில் அவர் வற்புறுத்தியிருந்தார். சுதேசிகள் ஜானைத் தமது படகுக்கடியில் படுக்கவைத்துக் கொண்டு நியூஜிலந்துக்காரர்கள் தங்கியிருந்த இடத்திற்குப் படகைச் செலுத்தினர். சில மணி நேரத்திற்கெல்லாம் ஒரு மீட்சிப் படகும் வந்து சேர்ந்தது.

"டேய்! ஜான்!" என்று யாரோ படகிலிருந்து கூப்பிட்டார்கள். அவர்கள் வேறு யாருமல்லர். ஜானின் நண்பர்களே. ஜான் படகிலிருந்து குதித்தெழுந்தார். நண்பர்கள் அவரைக் கட்டித் தழுவிக் கொண்டனர். ஜானும் அவருடைய வீரர்களும் விரைவில் அமெரிக்கக் கப்பல் தளத்தை அடைந்தனர்.

தப்பிப் பிழைத்து வந்த ஜானின் வீர வரலாற்றைக் கேட்டு எல்லாரும் வியப்படைந்தனர். மேலதிகாரிகள் இவரைப் பெரிதும் பாராட்டினர். பர்ப்பில் ஹார்ட் என்ற பட்டத்தையும், கடற்படை பதக்கத்தையும் கடற்படைத் துறையினர் இவருக்கு வழங்கிச் சிறப்புச் செய்தனர். இவருக்கு வழங்கிய பாராட்டிதழில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது.

"இவருடைய அஞ்சாமையும், துன்பங்களைச் சகித்துக் கொள்ளும் ஆற்றலும், சிறப்பான தலைமையும் பல உயிர்களைக் காப்பதற்குப் பெருந்துணையாக விளங்கின. இவருடைய பண்புகள் அமெரிக்கக் கப்பற்படையில் உயர்ந்த மரபுக்கு அறிகுறியாக இருந்தன."

* ● *

# 8. அரசியல் வாழ்க்கை

கடற்படை வீரத்திற்காகப் பட்டமும் பதக்கமும் பெற்ற ஜான், இந்நிகழ்ச்சிக்குப் பிறகு போரில் பங்கு பெற முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. முறைக் காய்ச்சல் பீடித்து அவரைப் பெருந் தொல்லைக்குள்ளாக்கியது. ஜப்பானிய நாசகாரிக் கப்பல் தாக்கிய போது ஜான் மல்லாந்த வண்ணம் வீழ்ந்தாரல்லவா? அப்போது அவர் முதுகில் அடிபட்ட பழைய புண் இன்னும் அதிகமாகி விட்டது. அதனால் அவருக்கு முதுகில் அடிக்கடி தாங்க முடியாத அளவு வலி தோன்றிக் கொண்டிருந்தது. உடனே ஜான் அமெரிக்கா வுக்குத் திரும்பிப் பாஸ்டனுக்கு அருகிலுள்ள **செல்சி** கடற் படை மருத்துவ மனையில் தங்கி மருத்துவம் செய்து கொண்டார். அவருக்கு முதுகில் அறுவை மருத்துவம் செய்யப்பட்டது. மருத்துவ மனையிலிருந்து அவர் வெளிக் கிளம்பிய போது மிகவும் மெலிந்து வலிமையிழந்து காணப் பட்டார். இந்நிலையில் போர்ப்பணி என்பது அவருக்குச் சிந்திக்க முடியாத ஒன்றாகி விட்டது. வாஷிங்டனில் உள்ள கடற்படைத் தலைமைக் குழுவின் முன் சென்று தம் நிலைமையை விளக்கிப் போர்ப் பணியினின்றும் விடுதலை பெற்றார்.

இப்போது ஜானுக்கு வயது இருபத்தெட்டே ஆகி யிருந்தது. இவ்விளம் வயதில் அவர் எவ்வளவோ சாதித் திருக்கிறார். பட்டம் பெற்றார்; அரசியல் உலகில் பரபரப்பை உண்டாக்குமளவுக்கு விளம்பரம் பெற்ற சிறந்த நூலும் எழுதினார். ஐரோப்பாக் கண்டம் முழுதும் விரிவான சுற்றுப் பயணம் நிகழ்த்தினார்; ஒரு சிறந்த கப்பற்றலைவராகப் பொறுப்பேற்றுப் போர்ப்பணியில் ஈடுபட்டார்; அப்பணியில் அஞ்சாமையையும், அறிவாற்றலையும் புலப்படுத்தி வீர விருதும் பட்டமும் பெற்றார். இவற்றோடு இவர் வீர வரலாறு

முற்றுப்பெறவில்லை. புகழ்தரும் எதிர்காலம் இவருக்குக் காத்திருந்தது. அரசியல் உலகம் இவரை அள்ளி அணைக்கக் கைவிரித்துக் காத்திருந்தது.

ஜான் தேனீயைப் போல் சுறுசுறுப்பானவர். படையிலிருந்து விடுதலைபெற்று வெளியேறியதும், "உலக அமைதிக்கு ஒரு சோதனை" என்ற தலைப்பில் ஓர் அரசியல் திறனாய்வுக் கட்டுரை எழுதி வெளியிட்டார். நேச நாடுகளெல்லாம் படை வலிமையைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும் என்று அக்கட்டுரையில் ஜான் வற்புறுத்தியிருந்தார்.

உலகப்போர் முடிவுற்றதும் ஜான் தமது எதிர்காலம் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார். ஆசிரியத் துறையும், செய்தித்தாள் துறையும், அரசியல் துறையும் அவரைப் பெரிதும் கவர்ந்தன. ஆசிரியத் துறைக்குரிய பட்டப் படிப்பு அவருக்கில்லை. எனவே அத்துறையைக் கைவிட அவர் முடிவு செய்தார். இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடந்த போது, செய்தித்தாள் திறனாய்வாளராக அவர் பணியாற்றினார். அத்துறையில் சென்றால், எதிர்காலத்தில் சிறப்பான முன்னேற்றம் அடைய முடியாது என்பதைக் கண்டார். எனவே அத்துறையையும் கைவிட்டார். இறுதியாக அரசியற்றுறையின்பால் கவனம் சென்றது. அத்துறை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. முடிவுகள் செய்வது, சட்டமியற்றுவது, அரசியல் விவகாரங்களைக் கையாளுவது, மேல்மட்ட அரசியல் வாதிகளோடு கை குலுக்குவது அவர்களோடு விருந்துண்பது, மேடை ஏறிப் பேசுவது, மாலையணிந்து கொள்வது ஆகிய எல்லாவற்றிலும் அவருக்கு ஒரு கவர்ச்சி இருக்கத்தான் செய்தது. ஆனால் அத்துறையிலும் ஒரு பெருங்குறை அவருக்குப் புலப்பட்டது. வெளிவேடம், ஒன்றை ஆதரித்து மற்றொன்றை மிகைபடக் கண்டித்துப் பேசுவது ஆகிய போலிச் செயல்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. பிறகு உள்ளத்தை எப்படியோ திடப்படுத்திக் கொண்டு அரசியலில் குதிக்க அவர் முடிவு செய்தார்.

சட்டசபை உறுப்பினர் ஆவதற்குரிய தகுதிகள் யாவும் அவரிடத்தில் நிறைந்து காணப்பட்டன. ஆனால் தமது அரசியற் பணிக்கு நிலைக்களமாக எவ்விடத்தைத் தேர்ந்தெடுப்பது என்பதுதான் அவருக்குப் புரியவில்லை. ஜான் எவ்விடத்திலும் நிலைத்து வாழ்ந்தவரல்லர்; தமது சொந்த ஊர் என்று சொல்லிக் கொள்வதற்கு அவருக்கு எதுவுமில்லை. குழந்தைப் பருவத்தில் சிறிது நாள் பாஸ்டனில் வாழ்ந்திருக்கிறார்; பிறகு நியூயார்க்கிலும், கனக்டிக்கட்டிலும் பள்ளி மாணவராக இருந்திருக்கிறார். அவருடைய கல்லூரி வாழ்க்கை ஹார்வார்டில் கழிந்தது. பிறகு கடற்படையில் பணி புரிந்தார். எப்பொழுதுமே அரசியல்வாதிகளுக்கு நெருங்கிப் பழகிய சொந்த இடம் ஒன்று இருக்க வேண்டும். அத்தகைய வாய்ப்பு ஜானுக்கு இல்லாதது பெருங்குறையே. நீண்ட சிந்தனைக்குப் பிறகு தங்கள் முன்னோர்கள் வாழ்ந்த பாஸ்டன் பகுதியே அவருக்குச் சிறந்ததாகப் பட்டது. அத் தொகுதி மாசாசூசெட்ஸ் மாநிலத்தில் அடங்கியதாகும்.

புதிதாக அரசியலில் நுழைபவர்களுக்கு அப்பகுதி தகுந்ததன்று. எண்ணெய்க் கிணறுகள் புகைவண்டித் தொடர்கள், குப்பை மேடுகள், புகை மண்டிய தொழிற்சாலைகள், பழமைச் சின்னங்களாக நிற்கும் செங்கற் குடிசைகள், சரக்குகள் ஏற்றியிருக்கும் கிடங்குகள் ஆகியவற்றுக்கிடையே ஐரிஷ் மக்கள், இத்தாலியர்கள் மற்றும் பல்நாட்டு வந்தேறிகள் நெருக்கியடித்துக்கொண்டு அப்பகுதியில் வாழ்ந்து வந்தனர். கப்பற்றுறையிலும் கிடங்குகளிலும் பணிபுரிந்த கூலிக்காரர்களும், தொழிற்சாலைப் பொறியோட்டிகளும் அங்கு வாழ்ந்தனர். அமெரிக்காவில் மிகுதியாகக் குற்றங்கள் நடைபெறும் இடங்களில் அதுவும் ஒன்றாக இருந்தது. அத்தொகுதியின் ஒரு மூலையில்

ஹார்வார்டு கல்லூரியும், யாங்கிக் கிறித்தவக் குடும்பங்களும் இடம் பெற்றன. நகரங்களில் பணியாற்றிய நிர்வாகிகளும் இம் மூலையில் வாழ்ந்தனர்.

இத்தொகுதியில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் சட்டமன்ற உறுப்பின (Congress member) ராக நிற்பதற்கு ஜான் முடிவு செய்தார். இத்தொகுதியில் பெல்வியூ என்ற விடுதியில் அறைகள் எடுத்துக்கொண்டார். அரசியல் மேதையான பிட்ஸ் தாத்தாவும் இங்குத்தான் தங்கியிருந்தார். இருபத்தெட்டு வயதினரான இளம் கென்னடி, யாரிடமும் கலந்து பழகும் வழக்கமில்லாதவர்; நடக்கும் கோல்போல் மெலிந்த உருவினர்; தேனீயைப்போல் சுறுசுறுப்பானவர். டெர்பித் தொப்பியும், அட்டகாசமான பேச்சும், தொந்தியும் தொப்பையுமான தோற்றமும் உடைய பாஸ்டன் அரசியல் வாதிகளுக்கு இவர் நேர்மாறானவர். இவ்வரசியல்வாதிகள் ஜானை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

மற்ற உறுப்பினர்கள் தேர்தல் வேலையில் இறங்கு வதற்கு முன்பாகவே ஜான் தமது தேர்தல் வேலைகளைத் தொடங்கிவிட்டார். முதலில் இவரைக்கண்டு மற்ற உறுப்பினர்கள் சிரித்து ஏளனம் செய்தார்கள். "பாவம்! பணக்காரப் பையன்! உலகமறியாதவன்! கென்னடி குடும்பத்தின் பெயரையும், பணத்தையும் பயன் படுத்திக் கொண்டு உள்ளே நுழையப் பார்க்கிறான்" என்று எல்லாரும் பேசிக்கொண்டனர். ஆனால் உண்மையாக ஜான் தமது குடும்பப் பெயரையோ, பணத்தையோ நம்பி இப்பணியில் இறங்கவில்லை; தமது அயரா உழைப்பையே நம்பியிருந்தார்.

ஜான் முதலில் தமக்கென்று ஒரு கூட்டத்தைத் திரட்டத் தொடங்கினார். சோட் பள்ளியிலும், ஹார்வார்டு கல்லூரியிலும், கடற்படையிலும் உடனிருந்த நண்பர்களே இக்கூட்டத்தில் இருந்தனர். பிறகு இவர்களின் துணை கொண்டு, ஜனநாயகக் கட்சியினர், லிபரல்கள், கன்சர்

வெட்டிவ்கள் ஆகிய எல்லாரையும் கண்டு நேரில் பேசி ஆதரவு திரட்டினார். தம்முடைய மூதாதையர் வாழ்ந்த பாஸ்டன் நகரிலிருந்து இளைஞர்கள், விருவிருப்பானவர்கள், அரசியல் பட்டறிவில்லாதவர்கள், நிச்சயமான கொள்கைத் தெளிவில்லாதவர்கள் ஆகியவர்களை யெல்லாம் ஒன்று திரட்டி இளந்தலைவர் படை என்ற பெயரில் ஓர் அமைப்பை நிறுவினார். பிறகு அவர்களுக்குப் பயிற்சியும் ஊக்கமும் அளித்து அரசியலில் ஒரு பிடிப்பை உண்டாக்கினார். பாஸ்டனில் மிகவும் செல்வாக்கு பெற்றிருந்த தமது பிட்ஸ் தாத்தாவையும் பாட்டியையும் தேர்தல் பணிக்குப் பயன் படுத்தி கொண்டார்.

அத்தொகுதியில் உள்ள எண்ணற்ற தெருக்களில் புயல்வேகத்தில் ஜான் சுற்றித் திரிந்தார்; சிகையலங் கரிக்கும் நிலையங்கள், தொழிற்சாலைகள், கப்பல் கிடங்குகள் ஆகிய இடங்களுக்கெல்லாம் ஓடுவார்; எல்லாரிடமும் நேரில் பேசுவார்; அடிக்கடி தேர்தல் கூட்டங்களிலும் கலந்து கொள்வார். முதலில் அவருடைய தேர்தல் பேச்சுக் களில் சற்றுத் தயக்கமும் நடுக்கமும் காணப்பட்டன. அவருடைய பேச்சுக்கள் நேரடியானவையாகவும், எளிமை யுடையவையாகவும், அலங்காரமோ, அடுக்குச் சொற்களோ மிகைப்படுத்தலோ இல்லாதவையாகவும் விளங்கின. பழங் கால அரசியல்வாதிகளின் பேச்சுக்களுக்கு நேர்மாறானதாக அவர் பேச்சு விளங்கியது. வெளிப்படையாக எதையும் கூறும் அவர் போக்கை மக்கள் விரும்பினர்.

தம்முடைய தொகுதியிலிருந்த கணக்கற்ற வாக் காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று ஜான் பேசினார்; தம் இளந்தலைவர் படையைப் பல கூறுகளாக்கி வாக்காளர் களை நேரில் கண்டு பேச அனுப்பினார். தேர்தல் நாளும் வந்துவிட்டது. ஜான் மிகவும் மகிழ்ச்சியோடு காணப்பட் டார். தேர்தல் முடிவு தெரிவதற்கு முன்பாகத் தமது தாத்தாவோடும் பாட்டியோடும் திரைப்படம் பார்ப்பதற்குச் சென்றிருந்தார். ஜான் வெற்றி பெற்றுவிட்டதாகத் தேர்தல்

அறிக்கை கூறியது. பிட்ஸ் தாத்தாவால், உள்ளத்தில் பொங்கிய மகிழ்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உடனே மேசையின் மீது ஏறி ஓர் ஐரிஷ் நட்னம் ஆடிக் காண்பித்தார் அம்முதுகிழவர்.

இருபத்தொன்பது வயது கூட நிரம்பாத ஓர் இளைஞர் தேர்தலில் வெற்றி பெற்றது மற்ற உறுப்பினர் களுக்குப் பெரிதும் மானக்கேடாகி விட்டது. கென்னடியின் தந்தை ஏதோ திரை மறைவிலிருந்து கொண்டு சூழ்ச்சி செய்து விட்டார் என்று பேசினர். பணத்தை வாரி இறைத்துச் செலவு செய்தார் என்றும், பத்திரிகைகளில் அளவுக்கு மீறி விளம்பரம் செய்தார் என்றும் ஜான் மீது குற்றம் சாட்டினர். ஆனால் உண்மையில் ஜான் வெற்றி பெற்றதற்குக் காரணம், அவருடைய அயரா உழைப்பும், நண்பர்களின் ஒத்துழைப்புமே ஆகும்.

○ ○ ○

# 9. சட்டமன்ற உறுப்பினர்

கி. பி. 1947 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் ஜான், சட்டமன்ற உறுப்பினராகப் பதவி ஏற்ருர். இனி நாமும் அவரை மதிப்புடன் கென்னடி என்று அழைப்போம். கென்னடி சட்டமன்றத்தில் நுழைந்தபோது எல்லாரும் அவரை ஏளனமாகப் பார்த்தனர்; கல்லூரியில் பயிலும் மாணவர் ஒருவர் பணத்தாலும், மேல்மட்டச் செல்வாக்காலும் உறுப்பினராகி வந்துவிட்டார் என்று எண்ணினர். கென்னடி பாஸ்டன் நகரில் புகழ் மிக்கவராக இருக்கலாம். மிகவும் செல்வாக்கும் விளம்பரமும் பெற்ற அரசியற் குடும்பங்கள் மிகுந்திருந்த தலைநகரில் கென்னடி இலைமறை காய் போல் தெரிந்தும் தெரியாமலும் இருந்தார். கென்னடி சட்டமன்ற உறுப்பினர் ஆகியும்கூட, அவருடைய விளையாட்டுப் பண்பு போகவில்லை. சில நேரங்களில் அலுவலக வேலைகளை விரைவாக முடித்துக் கொண்டு கால்பந்து விளையாட்டிற்கோ, அல்லது கழிப்பந்தாட்டத்திற்கோ சென்றுவிடுவார்.

கென்னடி சட்டமன்றத்தில் இடம் பெற்று சிறிது காலம் ஆனவுடன் பலதரப்பட்ட மக்கள் கென்னடியின் அலுவலகத்தைத் தேடிவரத் தொடங்கினர். அவருடைய அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகள் புத்துருவமும் வளர்ச்சியும் அடையத் தொடங்கின. தொழிலாளர் ஊதியம், வேலை நிலைமை, சமூகப் பாதுகாப்பு, வீட்டு வசதி, விலைவாசிகள், வாடகைகள், முன்னுள் இராணுவ வீரர்கள் சலுகை, முதியோர் பாதுகாப்பு ஆகிய பல திட்டங்களைப் பற்றிக் கென்னடி தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினுர்.

கென்னடியின் அரசியற் கொள்கை பலருக்குப் புரியாத புதிராக இருந்தது. அவர் முழுக்க முழுக்கக் கட்சி

நோக்கம் உடையவராக இல்லை. அவர் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் என்பது உண்மைதான் ஆனால் அவர் ஜனநாயகக் கட்சியின் எல்லாக் கொள்கைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஜனநாயகக் கட்சி ஒன்றுதான் அவருடைய கொள்கைகளை உருவாக்கியது என்று கூற முடியாது. நல்ல கருத்துக்களையும், திட்டங்களையும் கட்சி வேறுபாடின்றி அவர் ஆதரித்தார். தம்முடைய புயல்வேக முன்னேற்றங்களுக்கு ஒத்துவராத ஜனநாயகக் கட்சித் தலைமையைக் கூட அவர் பொருட் படுத்தவில்லை ஏன்? ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய முன்னேற்றத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்ல ஆற்றல் பெற்ற அமெரிக்கத் தலைவர் ட்ரூமனைக் கூடச் சில சமயங்களில் அஞ்சாமையோடு எதிர்க்கத் துணிந்தார்.

"சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாரும் வெறும் புழுக்களைப் போல மதிக்கப்படுகிறார்கள். தேசியத் திட்டங்களில் எங்களை யாரும் பொருட் படுத்துவதில்லை. ஓர் அரசியல் ஆண்டையாருக்கு நான் பதில் சொல்ல வேண்டுமென்று எனக்கு கற்றுக் கொடுக்கவில்லை. அரசியலின் மேல்மட்டத்தில் உள்ள தலைவர்களைப் பகைத்துக் கொண்டே நான் எனது ஆக்க வேலைகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும். அமெரிக்கத் தலைவர் ட்ரூமனின் தயவு தேவை என்ற உணர்ச்சியே எனக்கு ஏற்படவில்லை" என்று அஞ்சாமையோடு முழங்கினார் கென்னடி.

கட்சி அரசியலுக்கும், அமெரிக்க அரசியலைப் பற்றிய சாதாரண விளக்கங்களுக்கும் கென்னடி அப்பாற்பட்டவர். ஹார்வார்டு கல்லூரியில் பயிலும்போது அவர் ஒரு கன்சர் வெட்டிவ் போலக் காணப்பட்டார். ஆனால் அரசியலில் நுழைந்ததும் அவருடைய கொள்கைகள் திருத்தம் பெற்று மெருகேறத் தொடங்கின. பொதுவுடைமை நாடுகளின் பால் அமெரிக்க அரசாங்கம் கடைப்பிடித்த எதிர்மறைக் கொள்கைகளை அவர் கண்டிக்கத் தொடங்கினார்;

அமெரிக்கத் தலைவர் ட்ரூமனின் வெளிநாட்டுக் கொள்கைகளில் புரையோடிப் போயிருந்த குறைபாடுகளைக் கண்டித்தார். ஆனால் பாராட்ட வேண்டிய கொள்கைகளைக் கென்னடி பாராட்டத் தவறியதில்லை.

கென்னடியினுடைய அரசியல் போக்கை நண்பர்கள் கூர்ந்து கவனித்தனர். கென்னடி உரிமை வேட்கை மிகுந்த சுதந்தர அரசியல்வாதியாக வளரத் தொடங்கினர்; நாட்டின் கவனத்தை ஈர்த்த பெரும்பாலான முக்கியக் கொள்கைகளை விருப்பு வெறுப்பில்லாமல் அணுகினர். கட்சி நலன் என்ற குறுகிய எல்லையில் நில்லாமல், அமெரிக்க மக்கள் நலன் என்ற விரிந்த அளவில் கென்னடியின் அரசியற் கொள்கைகள் விளங்கின. கென்னடியின் இப்போக்கு கட்சித் தலைவர்களுக்கு அதிர்ச்சியைத் தரக் கூடியதாக இருந்தது. ஆனால் கென்னடி இதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

கென்னடி தமக்கென்று உயர்ந்த அரசியல் கொள்கைகளை வகுத்துக் கொண்டு அவற்றைச் செயல்படுத்தத் தொடங்கி விட்டார். மக்களுக்குக் கென்னடியின் தலைமையில் பற்றும் நம்பிக்கையும் தோன்றத் தொடங்கி விட்டன. மாசாசூசெட்ஸ் தொகுதியில் கென்னடியை எவரும் எதிர்த்து வெற்றி பெற முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே கட்சித் தலைவர்கள் கென்னடியின் போக்கைத் தடுத்து நிறுத்தவோ, தலையிட்டுத் தொல்லை கொடுக்கவோ ஆற்றலின்றிச் செயலற்றவர்களானர்கள்.

இளைஞரான கென்னடி அரசியல் வானில் பேரொளியோடு வலம் வருவதைக் கண்ட எதிர்க்கட்சிக்காரர்கள் இவருடைய சமயத்தை ஒரு காரணமாக எடுத்துக் கூறி, இவர் செல்வாக்கைக் குறைக்க விரும்பினர். எல்மர் ஈ ரோஜர்ஸ் என்ற உறுப்பினர் ஒருமுறை தாம் சட்டமன்றக் குழுவில்

படைத்த அறிக்கையில், "கத்தோலிக்கர்களின் பற்று இரு கூறுனது. அவர்கள் தங்கள் அன்பைப் போப்பாண்டவருக்கும், அடுத்தாற்போல் அமெரிக்க நாட்டிற்கும் செலுத்துகிறார்கள்" என்று கூறினுர். இதில் கத்தோலிக்கர்கள் அமெரிக்க நாட்டைவிடப் போப்பாண்டவரையே மிகவும் விரும்புகின்றனர் என்ற குற்றச்சாட்டுக் காணப்படுகிறது.

"நீங்கள் கூறுவதை என்னுல் ஏற்றுக் கொள்ள முடியாது. உங்கள் கூற்றுத் தவருனது என்பதற்கு உயிருள்ள எடுத்துக்காட்டாக நான் விளங்குகிறேன். கத்தோலிக்கச் சமயக் கொள்கைகளை விளக்கி நான் இங்குச் சொற்போர் செய்ய விரும்பவில்லை. ஆனுல் தவருன செய்திகளை நீங்கள் பேசக்கூடாது. அமெரிக்காவிலுள்ள கத்தோலிக்கர்கள் போப்பாண்டவரின் சட்டபூர்வமான குடிமக்கள் என்று கூறுகிறீர்கள்? நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன். நான் போப்பாண்டவரின் சட்டபூர்வமான குடிமகன் அல்லன்" என்று விடையிறுத்தார் கென்னடி. "சமயப்பற்றுள்ள ஒவ்வொரு கத்தோலிக்கருக்கும் இரட்டை விசுவாசம் உண்டு" என்று ரோஜர்ஸ் மீண்டும் கூறினுர்.

"பாஸ்டனில் ஒரு பழமொழி உண்டு. எங்களுடைய சமயம் உரோமாபுரியிலிருந்து பெறப்படுவது; ஆனுல் எங்கள் அரசியல் உள்ளூரிலிருந்து பெறப்படுவது என்று கத்தோலிக்கர்கள் கூறுவார்கள். இப்பழமொழியை நண்பர் ரோஜர்ஸ் அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்" என்று கென்னடி கூறினுர்.

சட்டமன்ற உறுப்பினராகப் பதவி ஏற்றதிலிருந்து ஐந்தாண்டுகளுக்குள் கென்னடி அரசியல் உலகில் தமக்கென ஒரு நிலையான இடம் பிடித்து விட்டார். மன்றத்தில் வீற்றிருந்த உறுப்பினர்களுக்கு இவரை மிகவும் பிடித்துவிட்டது. இவருடைய இளமையும், அரசியற் பிடிப்பும், ஐயத்திற்

கிடமற்ற இவருடைய தொகுதியும், இவருடைய சிறப்பான எதிர்காலத்திற்குக் கட்டியம் கூறின. இருபது ஆண்டுகளில் இவர் ஜனநாயகக்கட்சியின் தலைவராக ஆகக்கூடும் என்று எல்லோரும் எண்ணினர். ஆனால் அமெரிக்கத் தலைவர் பதவியே அவ்விருபதாண்டிற்குள் இவருக்காகக் காத்திருந்தது என்பதை யாரே அறிவார்?

● ● ●

# 10. பாராளுமன்ற உறுப்பினர்

வாஷிங்டனில் குடியேறிய நாள் முதற்கொண்டு கென்னடியின் எண்ணங்களும், விருப்பங்களும் வளர்ந்து கொண்டே இருந்தன. சட்ட மன்ற உறுப்பினராகவே தமது வாழ்நாளைக் கழிக்க அவர் விரும்பவில்லை. நாடு முழுவதற்குமான ஒரு பதவிக்குப் போட்டியிட முடியுமா? என்று அவர் சிந்தித்துக் கொண்டிருந்தார். 1952 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் (Senator) ஹென்றி காபட் லாட்ஜின் பதவிக்காலம் முடியப்போகிறது என்பதைக் கென்னடி உணர்ந்தார்; லாட்ஜ் மீண்டும் தேர்தலுக்கு நிற்பார் என்பதையும் அறிந்தார். அத்தொகுதியில் நின்று போட்டியிடலாமா என்று கென்னடி எண்ணினுர்.

மாசாசூசெட்ஸ் மாநிலத்தின் ஆளுநராக (Governor) இருந்த திருவாளர் டெவர் அவர்களும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடலாமா? என்று சிந்தித்துக் கொண்டிருந்தார். ஆனல் லாட்ஜின் வலிமையை எடைபோட்டு பார்த்துவிட்டு அவர் ஒதுங்கி விட்டார். ஆளுநர் டெவரின் அச்சத்தைக்கண்ட கென்னடி உளம் தளர்ந்து விடவில்லை. 1952-ம் ஆண்டு ஏப்ரலில், "மாசாசூசெட்டிலிருந்து அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஹென்றி காபட் லாட்ஜை (ஜூனியர்) எதிர்த்து நான் போட்டியிடப் போகிறேன்" என்று கென்னடி அறிக்கை வெளியிட்டார்.

கென்னடியின் அறிக்கையைப் படித்த நண்பர் பலர் திகைத்துப் போய்விட்டனர். காபட் லாட்ஜை வெற்றி கொள்வதென்பது அவ்வளவு எளிதான செயலன்று. லாட்ஜ் தேர்தல் கலையில் வல்லுநர்; பிரசாரத்தில் கைதேர்ந்தவர்; சொல் வல்லர்; சோர்விலர்; அஞ்சாதவர்; மாசாசூசெட்ஸ்

மாநிலத்தின் உயிர்நாடியைப் பிடித்துப் பார்த்தறிந்தவர்; ஏறக்குறைய அம்மாநில மக்கள் எல்லாரிடமும் கைகுலுக்கியவர். பாஸ்டன் அரசியலில் கென்னடிக்கு எந்த அளவு புகழுண்டோ அந்த அளவு மாநில அரசியலில் லாட்ஜுக்குப் புகழுண்டு.

மாசாசூசெட்ஸ் மாநில பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நிற்கும் காபட் லாட்ஜ், கென்னடி ஆகிய இருவருமே சிறப்பான பல பண்பொற்றுமை உடையவராக விளங்கினர். இருவரும் நல்ல தோற்றமுடையவர்கள்; உயரமானவர்கள்; இளம் வயதினர்; அழகாகப் பழகும் ஆற்றலுடையவர்கள். இருவரும் ஹார்வார்டு கல்லூரியில் கல்வி பயின்றவர்கள். இருவரும் அரசியலுக்கு வருவதற்கு முன்பு பத்திரிகையாளர்களாக இருந்தவர்கள். மக்களின் வாழ்க்கை பற்றிய முன்னேற்றத் திட்டங்களில் பரந்த மனப்பான்மை காட்டவேண்டுமென்பதில் இருவருமே கருத்தொற்றுமை கொண்டவர்கள்,

கென்னடி முன்னெச்சரிக்கையோடு தேர்தல் வேலைகளில் ஈடுபட்டு விட்டார். பொதுவாகத் தேர்தல் பிரசாரங்களில் ஊழியர்களைவிடத் தலைவர்களே மிகுதியாகக் காணப்படுவர். ஆனல் கென்னடி இந்நிலையை மாற்றியமைக்க விரும்பினர். தேர்தல் அலுவலகத்தில் அமர்ந்துகொண்டு வம்பளக்கும் தலைவர்களைவிட, வீடு வீடாகச் சென்று கதவைத்தட்டி வாக்குக் கேட்கும் ஊழியர்களையே அவர் விரும்பினர். தேர்தல் வேலைத் திட்டத்தில் அவர் செய்த அடிப்படை மாற்றம் இதுதான்.

கென்னடியின் குடும்பத்தினர் எல்லோரும் மிக்க சுறுசுறுப்பானவர்கள். தேர்தல் பொறுப்புக்களை எல்லாம், தமது குடும்பத்தாரின் பொறுப்பிலேயேவிட விரும்பினர் கென்னடி. கென்னடியின் குடும்பத்தினர் எல்லாரும்

தொகுதிக்கு வந்து சேரத்தொடங்கினர். தமது தங்கைகளான ஜீன், யூனிஸ், பாட்ரீசியா ஆகியோரையும் கென்னடி வரவழைத்தார்; தமது தம்பியான பாபுவை (Bob) அழைத்து பிரசாரக் குழுவின் தலைவராக நியமித்தார்.

தேர்தல் நெருங்க நெருங்கக் கென்னடி குடும்பத்தினரின் தேர்தல் நடவடிக்கைகள் சூடுபிடிக்கத் தொடங்கின. கென்னடியின் தங்கைமார் நாள்தோறும் பலரை அழைத்து விருந்துகள் நடத்திய வண்ணமாக இருந்தனர். பாஸ்டன் தொகுதிகளில் கென்னடியின் தாயார் சுற்றிக்கொண்டிருந்தார். நகரின் தெருக்களில் கென்னடி ஓய்வொழிச்சலின்றிச் சுற்றிக்கொண்டிருந்தார்.

கென்னடியின் புயல்வேகச் சுற்றுப்பயணத்தையும், சலியாத உழைப்பையும், வேலைத்திட்டங்களையும் கண்ட நண்பர்கள் வியப்பில் ஆழ்ந்தனர்.

"ஆகா! கென்னடியின் தேர்தல் வேலையை நினைத்தாலே மனம் நடுங்குகிறது. ஜான் தமது சுற்றுப்பயணத்தின் போது பத்துலட்சம் பேருடனாவது பேசியிருப்பான்; ஏழரை லட்சம் பேருடனாவது கைகுலுக்கியிருப்பான். இந்தத் தொகுதியில் உள்ள 351 நகரங்களுக்கும் அவன் சென்று திரும்பினான்" என்று எல்லோரும் பேசிக்கொண்டனர்.

தேர்தல் முடிவு தெரியும் இரவன்று கென்னடி தமது நண்பர்களுடன் தேர்தல் அலுவலகத்தில் உம்மென்று முகத்தை வைத்துக்கொண்டு வீற்றிருந்தார். அவரிடத்தில் பரபரப்பு எதுவும் காணப்படவில்லை. வாக்குகளின் எண்ணிக்கை இருவருக்கும் ஏறிக்கொண்டும் இறங்கிக் கொண்டும் இருந்தது. பொழுது புலர்ந்தது. காலை ஆறு மணிக்குத் தமது தோல்வியை அறிந்த காபட்லாட்ஜ் தேர்தல்

அலுவலகத்திலிருந்து வெளியேறினர். புகழ்பெற்ற மேல் சபை உறுப்பினரான ஹென்றி காபட் லாட்ஜை 70,000 வாக்குகள் மிகுதியாகப்பெற்று, ஜான் பிட்ஜெரால்டு கென்னடி தோற்கடித்தார். புகழ்பெற்ற இவ்வெற்றியைக் கொண்டாட, பிட்ஸ் தாத்தா உயிருடனிருக்கவில்லை. அவர் உயிருடன் இருந்திருந்தால், அளவுக்கு மீறிய மகிழ்ச்சியை அடைந்திருப்பார். காரணம் காபட் லாட்ஜ் சீனியரிடம் போட்டியிட்டு பாராளுமன்றத் தேர்தலில் அவர் தோல்வி யடைந்திருக்கிறார்.

வாஷிங்டனுக்கும் செனட் அலுவலகத்திற்குமிடையே தனிப்பட்ட பாதாள வண்டித் தொடர் ஒன்று ஓடுகிறது. அவ்வண்டியில் ஏறுவதற்காகக் கென்னடி காலை வைத்தார். அப்போது அங்கு நின்றுகொண்டிருந்த காவலாளி அவரைத் தடுத்துக் "கொஞ்சம் பொறுங்களையா! பாராளுமன்ற உறுப் பினர்கள் முதலில் வண்டியேறட்டும்!" என்று கூறினான்.

"என்ன?" என்று கூறி நிமிர்ந்து பார்த்தார் கென்னடி. கென்னடியின் முகத்தைக் கூர்ந்து பார்த்த காவலாளி அச்சத்தால் அதிர்ந்து போய்விட்டான். "மன்னித்துக் கொள்ளுங்களையா! தங்களை இன்னார் என்று அறியாமல் சொல்லிவிட்டேன்!" உன்று தாழ்மையுடன் கூறினான் அக் காவலாளி. கென்னடி கல்லூரி மாணவரைப்போல் இளமை யோடும், துடிப்போடும் காட்சியளித்தார். இவருடைய தோற்றமே அக்காவலாளியை ஏமாற்றி விட்டது.

கி. பி. 1953 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் மூன்றும் நாள் பாராளுமன்ற மாளிகைக்குள் நுழைந்து பதவி ஏற்றுக் கொண்டார் கென்னடி. அமைச்சர்கள், தலைமை நடுவர்கள் வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்தர அரசியற்றுறைத் தலைவர்கள், தொழிலதிபர்கள், தொழிலாளர் தலைவர்கள், புகழ் பெற்ற பத்திரிகையாளர்கள் ஆகியோர் அப்பேரவை யில் வீற்றிருந்தனர். ஜனநாயகக் கட்சித் தலைவர்களுக்குப்

பின் வரிசையில் கென்னடி சென்று அமர்ந்தார். தாம் வீற்றிருந்த இடத்திலிருந்து அப்பேரவையைச் சுற்றி ஒரு கண்ணோட்டம் விட்டார். புகழ்பெற்ற அரசியல் தலைவர்களான ரிச்சர்ட் எம். நிக்சன், லிண்டன் பி. ஜான்சன், ஹியூபர்ட் ஹம்பிரி, பால் எச். டக்ளஸ் ஆகியோர் முன் வரிசையில் வீற்றிருந்தனர்.

கென்னடி மேல்சபை உறுப்பினராகப் பதவி ஏற்று இருவாரங்கள் கழித்து டுவைட் டி ஐசனோவர் அமெரிக்கத் தலைவராகப் பதவி ஏற்றார். 1953-ஆம் ஆண்டு மேத்திங்கள் 18-ம் நாள் பிற்பகல் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் கென்னடி முதன்முதலாகப் பேசினார். தாம் பேசப் புகுந்த சொற்பொழிவை முன்கூட்டியே தயார் செய்து தாளில் எழுதியிருந்தார். ஒற்றை நாடி உடம்பினரான கென்னடி அரங்கில் நிமிர்ந்து நின்று சொற்பொழிவாற்றினார். அவருடைய முகத்தில் இளமையும், அறிவு முதிர்ச்சியும். பொறுப்புணர்ச்சியும் ஒரே சமயத்தில் தென்பட்டன. மூன்று நாட்கள் மேல்சபையில் அவர் சொற்பொழிவாற்றினார்.

கென்னடியின் சொற்பொழிவில் திட்டமான யோசனைகளும், உண்மைகளும் நிறைந்திருந்தன. அவருடைய பேச்சு ஏறத்தாழ ஹார்வார்டு வாணிகப் பள்ளியில் பொருளாதாரத்தைப் பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதைப் போலவே இருந்தது.

பேரவையில் கென்னடி நிகழ்த்திய பேச்சு சிறந்த ஒன்றாகும். அவருடைய பேச்சைக் கேட்ட மற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் கென்னடியைப் பாராட்டினர். அப்பாராட்டு, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் பேசியவுடன் வழக்கமாகப் பாராட்டும் முறையில் அமைந்திருக்கவில்லை; மிகுந்த உணர்ச்சியுடன் அவர்கள் பாராட்டினார்கள்.

—○—

# 11. மண வாழ்க்கை

உருசியப் பிரதமர் குருச்சேவ் அமெரிக்கா சென்றிருந்த போது கென்னடியின் மனைவியான ஜாக்குலினைக் கண்டு அளவளாவினார். அப்போது அவர், "திருமதி கென்னடி யோடு பேசும்போது மொழிபெயர்ப்பாளரின் துணையே தேவைப்படவில்லை. அவரைப் பார்த்துக்கொண்டிருந் தாலே போதும். பேச்சே தேவையில்லை" என்று குறிப் பிட்டார்.

" அமெரிக்காவிலிருந்து எந்தப் பொருளையாவது பிரெஞ்சு நாட்டிற்குக் கொண்டு வருவதாக இருந்தால், அது திருமதி கென்னடியாகத்தான் இருக்கும் " என்று பிரெஞ்சு நாட்டுத் தலைவரான திகால் ஒரு முறை குறிப்பிட்டார்.

கென்னடியின் அரசியலுக்கு உலகில் எந்த அளவுக்கு மதிப்புண்டோ, அந்த அளவு மதிப்பு ஜாக்குலினுடைய அழகிற்கும் உண்டு. கென்னடி தம்முடைய மனைவி மீது அளவற்ற பற்றும், அவளுடைய அழகின் மீது மட்டற்ற மதிப்பும் கொண்டிருந்தார். கென்னடி ஒரு முறை பிரெஞ்சு நாட்டில் சுற்றுச் செலவு மேற்கொண்டபோது " நான் வேறு யாருமல்லன்; முன்பொருமுறை திருமதி ஜாக்குலின் என்ற நங்கையோடு உங்கள் நாட்டிற்கு வந்தவன்தான்" என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். மேற்கூறிய எடுத்துக்காட்டுகளால் ஜாக்குலினுடைய அழகும், கென்னடி அவள் பால் கொண்டிருந்த அன்பும் புலப்படும்.

பாராளுமன்ற உறுப்பினர் கென்னடிக்கு வயது முப்பத்தாறு. இந்த வயதிலும் இவர் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்த நிலை எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்தது. பெரும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த

அழகர் ஒருவர் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கின்றூர் என்றுல் பலரும் பலவிதமாகப் பேசத்தானே செய்வார்கள்!

"மேல்சபை உறுப்பினரான கென்னடி அமெரிக்கா விலேயே எல்லோரும் விரும்பத்தக்க அழகிய பிரம்மச்சாரி! அவர் இன்னும் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதில் நியாயமே இல்லை!" என்று போஸ்ட் என்ற செய்தித்தாள் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது.

"கென்னடி உல்லாச இளம் பிரம்மச்சாரி" என்று வேறு சில செய்தித்தாள்களும் வர்ணிக்கத்தொடங்கிவிட்டன. ஆனுல் திருமணத்தைப்பற்றி செய்தித்தாள்களில் பேச்சு அடிபடுவதற்கு முன்பாகவே கென்னடி ஒரு மங்கை நல்லாள் மீது அன்பு செலுத்தத் தொடங்கிவிட்டார். யார் அந்த நங்கை? அவள் தான் அறிவிலும், அழகிலும் ஒப்பற்று விளங்கிய குமாரி ஜாக்குலின் லீ பொவியர்.

கென்னடி சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் ஒரு விருந்தில் குமாரி ஜாக்குலினை எதிர்பாராமல் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஒரு நண்பர் இருவரையும் அறிமுகம் செய்து வைத்தார். அப்பொழுதே குமாரி ஜாக்குலினைத் தம் மனைவியாக்கிக் கொள்ளத் தம் உள்ளத்தில் முடிவு செய்து கொண்டார். குமாரி ஜாக்குலினுக்கு அப்போது வயது இருபத்தொன்று.

திருவாளர் ஜான் லீ பொவியர் என்பாரின் திருமகளே ஜாக்குலின்; நியூயார்க்கிலும், வாஷிங்டனிலும் வளர்ந்தவள்; தலைநகரை அடைவதற்கு முன் வாஸ்ஸாரிலும், சார்போனிலும் கல்வி பயின்றவள். கென்னடியைப்போல் இவளும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவள்; கென்னடி வளர்ந்த அதே சமூகச் சூழ்நிலையில் வளர்ந்தவள்.

ஜாக்குலினிடம் அழகோடு வேறு சில பாராட்டிற்குரிய பண்புகளும் பொருந்தியிருந்தன. இவள் மிகவும் துணிச்சல் உடையவள்; குதிரை ஏற்றத்தில் மிகவும் வல்லவள்.

குழந்தைப் பருவத்தில் ஜாக்குலின் பிரெஞ்சு மொழியை நன்கு பயின்ருள்; பிறகு ஸ்பானிய மொழியையும் கற்றுத் தேர்ச்சி பெற்ருள்.

ஓவியங்கள் வரைவதிலும், கவிதைகள் எழுதுவதிலும் இவள் மிகவும் ஆர்வம் காட்டிஞள். சேக்ஸ்பியரின் நாடகங் களில் இவளுக்கு அளவு கடந்த பற்று உண்டு. புகைப்படம் எடுக்கும் கலேயிலும் இவள் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தாள். இத்திறமைகளின் காரணமாகத்தான் ஜாக்குலினுக்கு வாஷிங்டன் டைம்ஸ்ஹெரால்டு என்ற செய்தித்தாள் நிலேயத் தில் வேலே கிடைத்தது. அமெரிக்க நாட்டில் வாழ்ந்த அரசியல் மேதைகள், கவிஞர்கள், கலேஞர்கள், தொழிலதி பர்கள், விளேயாட்டு வீரர்கள் ஆகியோரை நேரில் கண்டு படமெடுத்து, அவருடைய பண்பு நலன்களே விளக்கிக் கட்டுரையாக்கி மேற்கூறிய செய்தித்தாள்களுக்கு அனுப்பு வதுதான் இவளுடைய வேலே. கென்னடி புகழ் மிக்க லாட்ஜை தேர்தலில் தோற்கடித்துப் பாராளுமன்ற உறுப்பின ராக வெற்றிபெற்றபோது அவரை சந்தித்து அவரைப் பற்றி செய்தித்தாளுக்கு எழுதும் வாய்ப்பையும் குமாரி ஜாக்குலின் பெற்ருள்.

கி. பி. 1951 ஆம் ஆண்டே கென்னடியும் ஜாக்குலி னும் முதன் முதலாகச் சந்தித்துப் பழகும் வாய்ப்பைப் பெற்றனர். ஆனுல் திருமணம் செய்துகொள்ள இருவரும் இரண்டாண்டுகள் பொறுத்திருக்க வேண்டியிருந்தது. கென்னடி பெரிய அரசியல்வாதி. அவருக்கு எப்போதும் வெளி வேலேகளே சரியாக இருக்கும். அடிக்கடி அவர் வெளியூர்களுக்கு சுற்றுப்பயணம் சென்று விடுவார். அதனுல் இருவரும் அடிக்கடி சந்திக்கமாட்டார்கள். கென்னடிக்கு ஓய்விருக்கும்போது இருவரும் சந்திப்பது வழக்கம். அச் சந்திப்பின்போது கென்னடி மணப்பொருள்களோ, ஆடை,

அணிகளோ, அலங்காரப் பொருள்களோ ஜாக்குலினுக்குப் பரிசளிக்கமாட்டார். சிறந்த வரலாற்று நூல்களையே பரிசாகக் கொடுப்பார். ஜாக்குலின் தான் வரைந்த ஓவியங்களைப் பரிசாகக் கொடுப்பாள். இரண்டாண்டுகள் இவ்வாறு பழகிய பிறகே "என்னை மணந்து கொள்கிருயா?" என்று கென்னடி ஜாக்குலினிடம் கேட்டார். ஜாக்குலினும் அன்போடு ஒப்புக் கொண்டாள்.

இதற்குள் பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் வந்து விட்டது. கென்னடி ஜாக்குலினை மறந்து விட்டு முழுமூச்சாகத் தேர்தலில் இறங்கிவிட்டார். பல திங்கள்கள் ஜாக்குலினைச் சந்திக்கும் எண்ணமே கென்னடிக்கு ஏற்படவில்லை. தேர்தலில் வெற்றிபெற்ற பிறகே அவர் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினுர். 1953 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 12 ஆம் நாள் மேல் சபை உறுப்பினர் ஜான் பிட் ஜெரால்டு கென்னடிக்கும் குமாரி ஜாக்குலின் லீ பொவியருக்கும் நியூ போர்டில் மரியன்னை பேரால் அமைந்த ரோமன் கத்தோலிக்கக் கோவிலில் திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கென்னடியின் குடும்பத்தினருக்குப் பலகாலம் நண்பராகவும் வேண்டியவராகவும் இருந்த பூஜ்யர் ரிச்சர்ட் ஜே. குஷிங் திருமணத்தை நடத்தி வைத்தார். போப்பாண்டவர் மணமக்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

திருமணம் நடந்தபின் கென்னடியின் வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சிக் குரியதாக இருந்தது. அரசியல் வாழ்வில் அவர் அடைந்திருந்த வெற்றியும், அழகியான ஜாக்குலினை மனைவியாகப் பெற்ற வெற்றியும் அவர் உள்ளத்தில் பேருவகையை உண்டாக்கின. சில திங்கள்கள் இவ்வாறு கழிந்தன. கென்னடி மீண்டும் அரசியலுக்குச் சென்றுவிட்டார்.

ஒரு நாள் கென்னடி பூங்காவில் தனிமையாக உலாவிக் கொண்டிருந்தார். திடீரென்று பூங்காவின் மூலையில் ஸ்வீட் அடிலைன் என்ற பாட்டு தென்றலில் மிதந்து வந்தது. அப்பாட்டைக் கேட்டதும் கென்னடி அசைவற்று நின்றுவிட்டார்; அப்பாட்டு வரும் திசையை நோக்கினார். இரு பாஸ்டன் நகரக் கிழவர்கள் அப்பாட்டைப் பாடிக்கொண்டிருந்தனர். கென்னடி காபட் லாட்ஜைத் தேர்தலில் தோற்கடித்து வெற்றி பெற்றதைப் பாராட்டும் நோக்கத்தோடு அப்பாடலை அக்கிழவர்கள் பாடினர். அப்பாடல் கென்னடியின் தாத்தாவான பிட் ஜெரால்டு கிழவருக்கு மிகவும் பிடித்தமான பாட்டு. அதைக் கேட்ட கென்னடியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கியது.

"உங்களுக்காக உழைப்பேன்; உங்கள் நலனுக்காகப் பாடுபடுவேன்" என்று ஓர் உறுதி எடுத்துக்கொண்டார் கென்னடி.

கென்னடியின் அலுவலகத்தில் எந்நேரமும் கூட்டம் மிகுதியாக இருந்தது. அவரைக் கண்டு பேச மக்கள் அலை அலையாக வந்து கொண்டிருந்தனர். கென்னடி எல்லாரையும் இன்முகத்தோடு வரவேற்று, அவர்களுடைய குறைகளைப் பொறுமையுடன் கேட்டு வந்தார்; அவர்களுடைய குறைகளைப் போக்க அல்லும் பகலும் பாடுபட்டார்.

புது மனைவியான ஜாக்குலின் தனது கணவனுடைய வரவை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தாள். எல்லா மனைவியருக்கும் இயல்பாக இருக்கும் பண்பு அவளிடமும் இருக்குமல்லவா? மற்றப் பெண்டிரைப் போல ஜாக்குலினும் கணவனிடம் சலித்துக்கொண்டாள்.

"ஜாக்குலின்; நீ ஓர் அரசியல் வாதியின் மனைவி. அரசியல் வாதியின் மனைவியென்றால் இப்படிப் பல தொல்லைகளைச் சகித்துக்கொள்ளத் தான் வேண்டும். நான் உனக்கு மட்டும் சொந்தமானவன் அல்லன். இந்த நாட்டுக்கே சொந்தமானவன்" என்று கென்னடி அடிக்கடி கூறுவது வழக்கம்.

ஒரு நாள் செய்தித்தாள் நிருபர் ஒருவர் ஜாக்குலினைக் காண வந்தார். அவர் ஜாக்குலினைப் பார்த்து, "உங்கள் மண வாழ்க்கை எப்படி இருக்கிறது? திருவாளர் கென்னடி உங்களை விட்டுப் பிரியாமல் இருக்கிருரா?" என்று கேட்டார்.

அதற்கு ஜாக்குலின், "அவருக்கு நான் வாஷிங்டனி லிருந்தாலும் ஒன்றுதான்; ஆயிரம் கல் தொலைவுக்கு அப்பா லுள்ள அலாஸ்காவில் இருந்தாலும் ஒன்றுதான்" என்று வேடிக்கையாகக் கூறினுள்.

ஜாக்குலின் சிலசமயம் தன்னுடைய கணவரைச் சலித்துக்கொண்டாலும் அவருடைய உள்ளத்தை நன்கு புரிந்துகொண்டு வாழ்க்கை நடத்திஞள். முதலில் ஜாக்குலி னுக்குச் சற்றுத் தொல்லையாக இருந்தது. எப்போதும் அரசி யல் வாதிகளின் கூட்டம் கென்னடியைச்சுற்றி மொய்த்துக் கொண்டிருக்கும். தம் மனைவியிடம் பேசும்போதுகூடக் கென்னடி அரசியலைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார். இது ஜாக்குலினுக்குச் சற்று எரிச்சலாகவும் இருந்தது. ஜாக்குலின் கலை உள்ளம் படைத்தவள். கென்னடியோ தீவிர அரசியல் வாதி. இருவருடைய உள்ளச் சுவைகளும் அடிப்படையிலே முரண்பட்டவை.

ஜாக்குலின் காலப்போக்கில் தன்னுடைய உள்ளத்தை மாற்றிக் கொள்ளத் தொடங்கினுள். நிறைய அரசியல் நூல் களைப்படிக்கத் தொடங்கினுள். நாள்தோறும் செய்தித் தாள் களைக் கூர்ந்து படித்து நடப்பு அரசியலையும் நன்கு அறிந்து கொண்டாள். அவளுக்கும் அரசியலில் ஒரு பிடிப்பு ஏற்படத் தொடங்கியது. இப்போது வாழ்க்கையில் சலிப்புத் தோன்ற வில்லை. கென்னடியின் அரசியல் அவளுக்குத் தேனுய் இனிக்கத் தொடங்கியது.

※ ※ ※

# 12. புலிட்சர் பரிசு

கென்னடி இளைஞராக விருந்தபோது கால்பந்தாட்டத்தில் தமது முதுகெலும்பை முறித்துக்கொண்டார் என்றும், இராணுவ வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வெளியேற அதுவே காரணமாக இருந்ததென்றும் நாம் முன்பு படித்தோம். அம்முதுகு வலி திருமணமாகி ஓராண்டு கழிந்ததும், மீண்டும் தொல்லை கொடுக்கத் தொடங்கியது. திருமணக் காலத்தில் மண்டியிட்டுக் கென்னடியால் ஆசி பெற முடியுமா? என்று கூட நண்பர்கள் ஐயப்பட்டனர். கென்னடி தமது முதுகுவலியைக் குறைத்துக் கொள்வதற்காக எப்போதும் ஆடும் நாற்காலியையே பயன்படுத்துவது வழக்கம். என்ன செய்தும் அவருடைய முதுகுவலி குறையவே இல்லை. கென்னடி இரண்டு ஊன்று கோல்களின் துணையால் நடக்கத்தொடங்கினர். அதுவும் பயன் தரவில்லை. மருத்துவர்கள் முதுகில் அறுவை மருத்துவம் செய்துகொண்டால் நல்லது என்று குறிப்பிட்டார்கள். கென்னடியும் அதற்கு இசைந்தார்.

கி. பி. 1954 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 ஆம் நாள் அறுவை நடந்தது. ஒடிந்த எலும்புகளை மருத்துவர்கள் ஒட்டவைத்தார்கள். இவ்வறுவை மருத்துவத்தால் எதிர்பார்த்த பயன் ஒன்றும் கிட்டவில்லை. மீண்டும் தாங்கமுடியாத அளவு முதுகில் வலியெடுக்கத் தொடங்கியது. நான்கு தினங்களுக்குப் பிறகு மீண்டும் அறுவை மருத்துவம் செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் கூறினர். "உயிர் போனலும் பரவாயில்லை" என்று எழுதிக் கொடுத்துவிட்டுக் கென்னடி அறுவை அரங்கத்துள் நுழைந்தார். இறுதி இறை வழிபாடு கூட இவர்பொருட்டுச் செய்யப்பட்டது நெருங்கிய உறவினர்கள் தவிர மற்றையோர் அருகில் அனுமதிக்கப்படவில்லை. ஜாக்குலின் கணவன் அருகிலேயே இருந்து சலியாமல் தொண்டு செய்தாள்.

இரண்டாவது முறையாகச்செய்த அறுவை மருத்துவம் மிகவும் வெற்றிகரமாக முடிந்தது. இவ்வறுவையினுல் கென்னடியின் சிந்தனை ஆற்றல் பாதிக்கப்படுமோ என்று மருத்துவர்கள் அஞ்சினர். ஆனுல் அவர்கள் அச்சம் பொய்யாகி விட்டது. அறுவை மருத்துவத்திற்குப் பிறகுதான் கென்னடியின் சிந்தனை ஆற்றல் கூர்மை பெற்றது.

ஓய்வு பெறுவதற்காகக் கென்னடி பாம்பீச்சிற்குச் செல்வது நல்லது என்று மருத்துவர்கள் கூறினர். கென்னடியும் தம் மனைவியோடு புறப்பட்டார். பாம்பீச்சின் தட்ப வெப்பம் கென்னடியின் உடல் நிலைக்கு மிகவும் ஏற்றதாக இருந்தது. நீண்டநாள் தம் உள்ளத்தில் தேக்கி வைத்திருந்த எண்ணங்களுக்கு அவர் முழு உருவம் தந்து வெளிப்படுத்தினுர், அவ்வெண்ணக் குவியல் தீரர்கள் வாழ்க்கை என்ற அரிய நூலாக மலர்ந்தது.

பாம்பீச்சில் தமது வீட்டின் கீழ்த்தளத்தில் படுக்கையில் படுத்த வண்ணமோ அல்லது வீட்டிற்கு முன்புள்ள குளத்தின் கரையில் அமர்ந்திருந்த வண்ணமோ கென்னடி எழுதிக் கொண்டிருந்தார். சில சமயங்களில் அவர் சொல்ல ஜாக்குலின் எழுதுவதும் உண்டு. கனமான வெள்ளைத்தாளில் நிறைய இடைவெளி விட்டுக் கென்னடி எழுதினுர். இத்தாள்கள் சிவப்பு அட்டைக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

சட்ட மன்ற நூலகத்திலிருந்த ஆய்வுப் பிரிவினர் கென்னடியின் தேவையை அறிந்து நிறைய நூல்களை அனுப்பிக் கொண்டிருந்தனர். வாஷிங்டனில் சோரன்சன் என்பார் இவருடைய இலக்கியப் பிரதிநிதியாக இருந்து நிகழ்ச்சிகளைப்பற்றிய விவரங்களைத் தேடிக் கண்டறிந்து அவற்றைப்பற்றி வரலாற்று வல்லுநர்களிடமும், நிபுணர்களிடமும், கலந்து பேசிக்கொண்டிருந்தார். ஆர்தர் கிராக் என்ற பழைய குடும்ப நண்பர் ஒருவரும், மற்றும்பல அறிஞர்களும் இவருக்கு அடிக்கடி ஆய்வுரைகள் அனுப்பிவந்தனர்.

பதினறு ஆண்டுகளுக்கு முன்பு ‘ இங்கிலாந்து ஏன் தூங்கியது?’ என்ற பெயரில் கென்னடி ஒரு நூல் எழுதி வெளியிட்டாரல்லவா ? அந்நூலை ஹார்ப்பர் பிரதர்ஸ் என்ற பெரிய பதிப்பகத்தார் வெளியிட மறுத்துவிட்டனர். ஆனல் அதே பதிப்பத்தார் ‘ தீரர்கள் வாழ்க்கை ’யை வெளியிடுவதற்கு வலிய வந்தனர். நூல் சிறப்பான முறையில் வெளியிடப்பட்டது. இந்நூலைக் கென்னடி தமது மனைவிக்குக் காணிக்கையாக்கினர்.

இந்நூல் புகழ்மிக்க அரசியல் வீரர்களைப் பற்றிய வரலாருகும். இதில் அரசியல் வீரம் என்ருல் என்ன என்பதைக் கென்னடி தெளிவாக விளக்கியிருந்தார், பொதுவாக அரசியலில் முன்னேற விரும்புவோர், தமது தொகுதி மக்களின் தேவைகளை உணர்ந்து திருப்தி செய்தல், தொகுதியிலுள்ள மக்களுக்குக் கையூட்டு வழங்குதல், ஆசை காட்டல் முதலிய வழிகளைக் கடைபிடிக்க வேண்டும் என்பது அமெரிக்க அரசியல் வாதிகளின் பொதுவான எண்ணம், இக்கொள்கையைக் கென்னடி மறுத்தார் ; சட்டமியற்றும் பாராளுமன்றத்தின் தன்மையை விளக்கினர் ; பாராளுமன்ற உறுப்பினர்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்தினர்.

அரசியல் வீரத்திற்குத் தடையாக இருப்பது, ஓர் உறுப்பினர் மீண்டும் மீண்டும் தாம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று விரும்புவது தான் என்பதைக் கென்னடி விளக்கினர் ; குறிப்பிட்ட ஒரே கொள்கைக்காக மீண்டும் மீண்டும் போராடித் தோல்வியடையும் அரசியல் வாதிகள், மற்ற உயர்ந்த கொள்கைகளுக்காகப் போராடும் வாய்ப்பை இழக்கிருர்கள் என்பதைத் தெளிவுபடுத்தினர்.

ஓர் அரசியல்வாதி தாம் தேர்ந்தெடுக்கப்படும் தொகுதி வாக்காளர்களால் பெரிதும் அவதிப்படும் நிலையை விளக்கினர். தொகுதியின் குறிப்பிட்ட சில நலன்களையே பெரிதாகக்

கருதும் அரசியல் குழுவினர் கட்டுக் கட்டாகக் கடிதம் எழுதுவர். அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற எந்த அரசியல்வாதியாலும் இயலாது என்று கென்னடி இந்நூலில் குறிப்பிடுகிருர்.

கென்னடியின் சிந்தனை வளர்ச்சியிலும், அரசியல் வளர்ச்சியிலும் இந்நூல் ஓர் எல்லைக்கல் என்று குறிப்பிடலாம். இந்நூலின் இறுதியில், " தம்முடைய தொகுதியிலும் சரி அல்லது நாட்டிலும் சரி, பொது மக்களின் எண்ணத்தையும் பொருட்படுத்தாமல், அறத்திற்காகவும், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் போராடித் தோல்வியை எவன் ஏற்றுக்கொள்கிருனே, அவன்தான் உண்மையான அரசியல்வாதி!" என்று கூறிக் கென்னடி முடிக்கிருர்.

இந்நூல் எழுதப்பட்ட காலத்திலேயே கென்னடியின் உள்ளம் அறத்தின் அடிப்படையில் உலகத்தை எல்லையாகக் கொண்டு விரிந்துவிட்டது என்பதை உணரலாம். அறத்திற்காகப் போராடித் தோல்வியடைவதை அரசியல் வீரம் என்று குறிப்பிட்ட கென்னடி, அறத்திற்காகப் போராடி உயிரையே பலிபீடத்தில் வைத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

" தீரர்கள் வாழ்க்கை" க்கு, அமெரிக்காவிலே மிகவும் மதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படும் புலிட்சர் பரிசு கிட்டியது. இப்பரிசைப் பெற்றுக்கொண்ட போது, " எனது வாழ்க்கையில் இதைவிடப் பெரிய கௌரவம் எதுவும் எனக்குக் கிடைக்காது" என்று கென்னடி குறிப்பிட்டார்.

இந்நூலுக்குக் கிடைத்த புலிட்சர் பரிசான 500 டாலரையும் கென்னடி ஐக்கிய நீக்ரோ கல்லூரி நிதிக்குப்பரிசாகக் கொடுத்துவிட்டார். அவ்வாண்டு உலகில் மிகுதியாக விற்பனையான நூல்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் ஸ்பெயின், துருக்கி. ஜப்பான், அரபு, இந்தோனேசியா, வியட்நாம், தமிழ் தெலுங்கு ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

“ பணக்கார இளைஞரும் அமெரிக்க மேல்சபை உறுப்பினருமான கென்னடி, இப்படியொரு சிறந்த நூலை எழுதியிருப்பது மிகவும் பாராட்டற்குறிய பெரிய செய்தியாகும். இந்நூலை எழுதியதன் மூலம் கென்னடி தமது அரசியல் கொடியை உயரத்தில் பறக்கவிட்டிருக்கிறார். உயர்ந்த கொடி உயரவே பறக்கட்டும் ” என்று கிறிஸ்தியன் சயன்ஸ் மானீட்டர் என்ற செய்தித்தாள் பாராட்டியிருந்தது. ஆம்! அன்று முதல் கென்னடியின் கொடி அரசியல் வானில் மிக உயரத்தில் பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியது.

# 13. அமெரிக்க நாட்டின் தலைவர்

ஏழு தினங்களுக்குப் பிறகு கென்னடி வெற்றி வீரனைப் போல் வாஷிங்டனுக்குத் திரும்பினர். அவர் தமது அலுவலகத்தில் நுழைந்தபோது செயலாளர்கள் எழுந்து நின்று கைதட்டி ஆரவாரம் செய்தனர். செய்திதாள் நிருபர்கள் பலர் அங்குக் கூடியிருந்தனர். வாழ்த்துச் செய்திகள் குவிந்திருந்தன. டிக் நிக்சன் என்பார் அனுப்பி வைத்த பழக் கூடையொன்று அவரை வரவேற்றவண்ணம் மே சை யி ன் மேல் காத்திருந்தது.

கென்னடி மறுநாள் மேல் சபைக்குள் காலெடுத்து வைத்தபோது மற்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று கைதட்டி ஆரவாரித்தனர். ஜனநாயகக் கட்சித் தலைவரான இலிண்டன் பி. ஜான்சன், " ஜான் ! உம்மைக் காண மிகவும் மகிழ்ச்சியடைகிறோம் " என்று கூறினர்.

கி. பி. 1951 ஆம் ஆண்டு அமெரிக்கத் தலைவர் தேர்தல் வந்தது. அதில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் திருவாளர் ஸ்டீவன்சனை அமெரிக்கத் தலைவர் பதவிக்கு நிற்க வைப்பதென்று முடிவாயிற்று. துணைத்தலைவர் பதவிக்குத் திருவாளர் கெபாவரும், கென்னடியும் ஜனநாயகக்கட்சி உறுப்பினராகப் போட்டியிட்டனர். இவ்விரண்டு பேரில் யாரையாவது ஒருவரைக் கட்சி முறையில் தேர்ந்து பிறகு துணைத் தலைவராகத் தேர்தலில் நிற்க வைத்தாக வேண்டும். ஜனநாயகக் கட்சியின் சார்பில் யாரை அமெரிக்கத் துணைத் தலைவராக நிற்க வைப்பது என்பதை முடிவு செய்யக் கட்சிக்குள்ளேயே ஒரு தேர்தல் நடத்தப்பட்டது, சிகாகோ நகரில் நடந்த இத்தேர்தலில் கென்னடி தோல்வியடைந்துவிட்டார். எனினும் தோல்வி கண்டு அவர் உள்ளம் தளர்ந்தாரல்லர். தோல்வியையும் வெற்றியையும் ஒப்பமதிக்கும் பண்பு அரசியல்வாதிகளுக்கு வேண்டும். அப்பண்பு கென்னடியிடம் நிறைந்

திருந்தது. "தோல்வியே வெற்றியின் அடிப்படை" என்ற பழமொழி கென்னடியின் வாழ்க்கையில் உண்மையாகப் போகிறது என்பதை உலகம் விரைவில் அறியாமல் இல்லை.

தோல்வியடைந்த கென்னடி தம் இருப்பிடத்திலிருந்து எழுந்து நின்றார். "சீமாட்டிகளே! நண்பர்களே! நாட்டின் நாற்றிசையிலிருந்தும் வந்திருந்து என்னிடம் அன்பு காட்டிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களுக்கு என் உளம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமெரிக்க நாட்டின் துணைத் தலைவர் பதவிக்குத் திருவாளர் கெபாவரை ஜன நாயகக் கட்சியின் வேட்பாளராக நிற்க வைக்கும்படி நான் முன் மொழிகிறேன்" என்று கூறினார். இதைத் தொலைக் காட்சிக் (Television) கருவியின் மூலம் நேரில் பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்க மக்கள், உற்சாகத்தோடு ஆர வாரம் செய்தனர். கென்னடியின் பெருந்தன்மை எல்லா ருடைய உள்ளத்தையும் உருக்கிவிட்டது.

சிகாகோவில் அடைந்த தேர்ல்விக்குப் பிறகு கென்ன டியின் வாழ்க்கையில் மீண்டும் ஒரு துன்ப நிகழ்ச்சி ஏற் பட்டது. ஜாக்குலினுக்குப் பிறந்த முதல் குழந்தை இறந்து விட்டது. எதிர்பாராத இவ்விழப்பால் கென்னடி தம்பதியர் மிகவும் வருந்தினர். முதல் குழந்தையைப் பறிகொடுத்த வீட்டில் குடியிருக்க ஜாக்குலின் விரும்பவில்லை. எனவே, கென்னடி தமது வீட்டையும், அதை ஒட்டியிருந்த பண்ணை யையும் தம்பிக்கு விற்றுவிட்டு ஜார்ஜ் டவுனில் குடியேறினார். 1957 ஆம் ஆண்டின் இறுதியில் ஜாக்குலினுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குக் கரோலின் என்று பெயரிட்டனர்.

அடுத்த ஆண்டு பாராளுமன்றத்தில் கென்னடியின் பதவிக் காலம் முடிவுற்றது. கென்னடி மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு 8,74,618 வாக்குகள் மிகுதியாகப் பெற்று

வெற்றியடைந்தார். இது மிகவும் பாராட்டுதற்குரிய வெற்றியாகும். இம்முறை கென்னடி மேல்சபை உறுப்பினராகப் பதவி ஏற்றதும், மிகவும் உயர்ந்த பதவியான அமெரிக்கத் தலைவர் பதவிக்குப் போட்டியிட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார். இப்பதவியை அமெரிக்காவில் எந்தக் கத்தோலிக்கரும் இதுவரை வகித்ததில்லை. சமயம் இதற்கு ஒரு பெருந்தடைக் கல்லாக இருந்தது. இருந்தாலும் கென்னடி உள்ளம் தளரவில்லை

அமெரிக்கத் தலைவர் தேர்தல் நெருங்க நெருங்கக் கென்னடியின் பெயர் செய்தித் தாள்களில் அடிபடத் தொடங்கியது.

"பொதுமக்களின் எண்ணம் என்றும் பொய்ப்பதில்லை. கென்னடியை அமெரிக்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அமெரிக்க மக்களில் பெரும்பகுதியினர் விருப்பப்படுகின்றனர் ஏன் ? கென்னடி இளைஞர் ; நாற்பத்திரண்டு வயதைக்கூடக் கடவாதவர் ; பரட்டைத் தலையுடன் காட்சியளிக்கும் இவர் இன்றும் கல்லூரி மாணவரைப் போலவே காட்சியளிக்கிறார்.

"கென்னடி சுறுசுறுப்பானவர்; அறிஞர்; உறுதியான பண்புடையவர் ; உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவர் ; ஊக்கம் நிறைந்தவர் ; ஒளிவு மறைவில்லாமல் பேசுபவர்" என்று செய்தித் தாள்கள் கென்னடியை வருணிக்கத் தொடங்கிவிட்டனர். 1961 ஆம் ஆண்டு நடந்த அமெரிக்கத் தலைவர் தேர்தலில் கென்னடி சிறப்பான வெற்றியடைந்தார். உலகிலேயே மிகச்சிறிய வயதில், மிகப் பெரிய பதவியை வகித்த முதல் மனிதர் ஜான் பிட்ஜெரால்டு கென்னடிதான்.

அன்று வாஷிங்டன் நகரமே விழாக்கோலம் பூண்டு விளங்கியது. தெருவெங்கும் நூறாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். போக்குவரத்துக்குக்கூடத் தடை விதிக்கப் பட்டுவிட்டது. தமது இளந்தலைவரான கென்னடியைக் காண

பதற்கும், அவர் பேச்சைக் கேட்பதற்கும் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் மக்கள் கால் கடுக்க நின்றுகொண்டிருந்தனர். உலக நாடுகளின் அரசியல் தலைவர்கள் எல்லாரும் தொலைக்காட்சிக் கருவிகளின் முன்னும், வானொலியின் முன்னும் ஆவலோடு அமர்ந்திருந்தனர். உலக நாடுகளின் தலை விதியையே மாற்றியமைக்கும் ஆற்றல் பெற்ற ஒரு வல்லரசின் ஆட்சித்தலைவர் என்ன பேசப்போகிறார் என்பதை அறிவிப்பதற்காகச் செய்தித் தாள்களின் நிருபர்கள் காதைத் தீட்டிக்கொண்டு காத்திருந்தனர்.

கி. பி. 1961 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 20 ஆம் நாள், அமெரிக்க நாட்டின் முப்பத்தைந்தாவது தலைவராக ஜான் பிட் ஜெரால்டு கென்னடி பதவி ஏற்றார். அவர் அப்போது ஆற்றிய சொற்பொழிவு உலக வரலாற்றிலே ஒரு திருப்புமையம் என்று சொல்லலாம். இப்பேச்சைக் கொட்டும் அடைமழை என்று சொல்வதா? இனிக்கும் இலக்கியத் தேனாறு என்று சொல்வதா? தங்கப் பேழையில் நிரப்பி வைத்த வைரக்கற்கள் என்று அவர் பேச்சைக் கூறலாம். அவர் பேச்சு உலக அரசியல் வாதிகளின் நெஞ்சத்தில் ஆழமாகச் சென்றுதைத்தது. எதிரிகளின் அணிவகுப்பில் கூட ஒரு நெகிழ்ச்சியை அப்பேச்சு உண்டாக்கியது. அச்சொற்பொழிவின் சுருக்கம் பின் வருமாறு :

“ உலகம் இன்று பெரும் அளவு மாறிவிட்டது. பல உருவங்களில் தோன்றி உலக மக்களை வருத்தும் பசிப் பிணியைப் போக்கும் ஆற்றலை மனிதன் பெற்றிருப்பதைப் போலவே. மக்களினத்தை அழித்தொழிக்கும் ஆற்றலையும் பெற்றிருக்கிறான். எந்தப் புரட்சிகரமான கொள்கைகளுக்காக நமது முன்னோர்கள் போராடினார்களோ, எந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காக நமது முன்னோர்கள் தமது ஆருயிரை நல்கினார்களோ, அக்கொள்கைகளும், சிக்கல்களும் இன்றும் முற்றிலும் தீர்வு காண முடியாத நிலையிலேயே இருக்கின்றன. மனிதனின் உரிமைகள் ஆண்டவனால் அளிக்கப்பட்டவை. அவை அரசாங்கங்களின் இரக்க உணர்வால் கிடைப்பவை அல்ல.

“ உலகத்தில் முதல் முதலாகப் புரட்சிக் கொடி தூக்கிய பரம்பரையில் வந்தவர்கள் நாம் என்பதை அமெரிக்கர்கள் மறந்துவிடக் கூடாது. அமெரிக்காவிலும் சரி, அல்லது உலகின் எப்பகுதியிலும் சரி, மக்களுடைய உரிமையையும், அவர்கள் நல்வாழ்வையும் பாதுகாப்பதை நாம் நமது கடமையாகக் கருதவேண்டும். மக்கள் உரிமை அழியாமல் என்றும் வாழ்வதற்கு நாம் எந்தக் கடமையையும் ஏற்போம் ; எந்தத் துன்பத்தையும் பொறுத்துக்கொள்வோம் ; எந்த நண்பரையும் ஆதரிப்போம்; எந்த எதிரியையும் எதிர்ப்போம். நம்பால் நல்லெண்ணம் கொண்டிருக்கும் நாடுகளும் சரி, நாம் அழிந்துவிடவேண்டும் என்று எண்ணும் நாடுகளும் சரி, இதை அறிந்து கொள்ளட்டும்.

“ எங்களுக்குப் பண்பாட்டையும், ஆன்மிகக் கொள்கைகளையும் நல்கிய பழம்பெரும் நேசநாடுகளுக்கு நாங்கள் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறோம். நாம் ஒன்றுபட்டால் இவ்வுலகில் நடக்காத செயல் எதுவுமில்லை ; நாம் பிரிந்து நின்றால், ஆற்றல் மிக்க அறைகூவல்களை எதிர்க்கத் திறனின்றிச் சிதைந்து போவோம்.

உலகின் பல பகுதிகளிலும் புதிதாகச்சுதந்திரம் பெற்று முன்னேறும் நாடுகளை இருகை நீட்டி வரவேற்கிறோம். அவர்களுக்கு நாங்கள் கூறும் அறிவுரை இதுதான். நீரிலிருந்து தப்பி நெருப்பிற்குள் பாய்வது அறிவுடைமை ஆகாது. மாற்றார் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றுச் சர்வாதிகார ஆதிக்கத்தில் சிக்கிக் கொள்ளக் கூடாது. எங்களை ஆதரிக்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்கவில்லை. ஆனால் அவர்களுடைய சுதந்திரத்தைச் சிதையாமல் காத்துக் கொள்ளவேண்டும். என்று அவர்களுக்குக் கூறுகிறேன். புலியின் முதுகில் ஊர்ந்து செல்பவன், என்றாவது ஒருநாள் புலிக்குத்தான் இரையாக வேண்டும். அதுபோல் முறையற்ற அரசியல் என்றும் நிலைத்திருப்பதில்லை.

" உலக உருண்டையின் பாதிப் பகுதியில் வறுமை யால் வாடிக் கொண்டிருக்கும் மக்களுக்கும் நாங்கள் ஒரு செய்தி விடுக்கிறோம். அவர்கள் தங்கள் வறுமையைப் போக்கிக்கொண்டு தம் சொந்த முயற்சியோடு வாழ, எங்க ளால் முடிந்த உதவியைக் காலவரையறையின்றிச் செய்யக் காத்திருக்கிறோம். பொதுவுடைமை நாடுகள் அவர்களுக்கு உதவி செய்கின்றன என்பதால் நாங்கள் உதவி செய்ய முன் வரவில்லை. அறத்தின் அடிப்படையில் நாங்கள் இதைச் செய்கிறோம். சுதந்திரம் பெற்ற ஒரு பெருநாடு, பெருந் தொகையான ஏழை மக்களுக்கு உதவி செய்ய முடியவில்லை என்றால், சிறு தொகையான பணக்காரர்களை ஒரு நாளும் காப்பாற்ற முடியாது. நம் நாட்டு எல்லைக்குத் தெற்கிலிருக்கும் நாடுகளுக்கும் நாம் ஒன்று சொல்ல விரும்புகிறோம். ஒரு சுதந்திர நாடு மற்றொரு சுதந்திர நாட்டுக்குத் துணையாக இருக்கவேண்டும். நாம் தோளோடு தோள் சேர்ந்து நின்று வறுமையை எதிர்த்துப் போராடுவோம். ஆனால் பகை என்னும் தீய ஆற்றலுக்கு இரையாகாமல் நம்மைக் காத்துக் கொள்வோம். அமெரிக்கக் கண்டங்களில் அழிவோ, ஆக்கி ரமிப்போ நேரும்போது, அண்டை நாடுகளான நாம் ஒன்று சேர்ந்து எதிர்ப்போம். நம் வீட்டுக்கு நாமே தலைவர் என்பதை மற்றவர்களுக்குத் தப்பாமல் உணர்த்துவோம்.

" அணுக் கருவிகள் தோன்றி உலகில் அமைதியை அழிக்கக் காத்திருக்கும் இந்நேரத்தில், ஐக்கிய நாடுகளின் சபை ஒரு நம்பிக்கையூட்டும் கலங்கரை விளக்கமாகக் காட்சி யளிக்கிறது. அது ஒரு வசை மன்றமாக மாறாமல், பிற்பட்ட நாடுகளுக்குப் பாதுகாவல் மன்றமாக மாறுவதற்கு எங்க ளாலான முயற்சியை மேற்கொள்வோம் என்று உறுதி கூறுகிறோம்.

இறுதியாக நம்மை எதிரிகளாகக் கருதும் நாடுகளுக்கும் நாங்கள் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறோம். அறிவியல்

முன்னேற்றம் இன்று அழிவு ஆற்றல்களை யெல்லாம் கட்ட விழ்த்து விட்டிருக்கிறது. மக்களினத்திற்குத் திட்டமிட்ட அழிவோ, அல்லது எதிர்பாராத அழிவோ எந்நேரத்திலும் ஏற்படலாம். இந்த அச்சத்தைப் போக்கி, உலகில் அமை தியை நிலைநாட்டும் பணியில் அவர்களைத் தோள் கொடுக்கு மாறு வேண்டுகிறேன். இவ்வேண்டுகோள் அச்சத்தின் அடிப்படையிலோ, அல்லது எங்கள் வலிமைக் குறைவின் அடிப்படையிலோ தோன்றவில்லை. எங்கள் படைவலிமையை ஐயமறத் தெளிந்தறிந்த நிலையிலேயே நாங்கள் இந்த வேண்டு கோளை விடுக்கிறோம்.

"எதிரெதிர் அணியில் நிற்கும் வல்லரசுகள், தங்களைச் சூழ்ந்திருக்கும் இப்போதைய நெருக்கடி நிலைமையை மேலும் மேலும் வளர்க்க விரும்பமாட்டா என்பதை நாங்கள் அறிவோம். இருதரப்பினரும் அணு ஆயுதங்களின் பொருட்டு அளவற்ற பொருட் செலவை மேற்கொண்டிருக்கின்றனர். வான மண்டலத்தில் அணு ஆயுதச் சோதனையால் நச்சுப் பொருள் மிகுந்து வருகின்றது என்பதை இருதரப்பினரும் உணருகின்றனர். மூன்றும் உலகப்போர் நேர்வதற்குரிய நெருக்கடிகளைப் போக்க இருதரப்பாரும் முயன்றுகொண்டு தான் இருக்கின்றனர். நாணயமும், மரியாதையும் அச்சத் தின் அடிப்படையில் தோன்றியவை அல்ல. நாம் அச்சத் தால் ஒன்று சேரவேண்டும். ஆனால் ஒன்று சேர அச்சப் படவும் வேண்டாம். நம்மைப் பிரித்து வைக்கும் வழி வகை களை ஆராய்வோம். எதிரணியில் திரண்டிருக்கும் நாம் ஒன்று கூடிப்படைக் குறைப்பான உறுதிமொழி மேற்கொள்வோம். உலக நாடுகளின் ஒன்றுபட்ட ஆற்றலால் மற்ற தீய ஆற்றல் களைக் கண்டறிவதைவிட, ஆக்க ஆற்றல்களைக் கண்டறியும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவோம்.

" நாம் ஒன்றுகூடி விண்ணிலுள்ள கோள்களை ஆராய் வோம்; பாலைவனங்களைச் சோலை வனங்களாக்குவோம்; பிணிகளை உலகில் இல்லாமற்செய்வோம்; கடலை வளப் படுத்துவோம்; கலையை வளர்ப்போம்; வாணிகத்தைப் பெருக் குவோம்; ஏழ்மையைத் துரத்துவோம்; அடிமையை அகற்றுவோம்.

“ஐயத்தை அகற்றிவிட்டு வாருங்கள்! வலியவன் நேர்மையுள்ளவனுகவும் எளியவன் பாதுகாப்புள்ளவனுகவும் வாழக்கூடிய, அமைதியான ஒரு புத்துலகத்தைச் சமைக்க முயன்று பார்ப்போம்.”

“நாம் துவக்கிவைக்கும் இப்புது முயற்சி இன்னும் நூறு நாட்களில் முற்றுப் பெருமல் போகலாம்; அல்லது ஆயிரம் நாட்களில் முற்றுப் பெருமல் போகலாம். ஏன்? நம் ஆயுட் காலத்திலே கூட முற்றுப் பெருமல் போகலாம். அதற்காக நாம் தயங்க வேண்டியதில்லே. நாம் இம்முயற்சியைத் தொடங்கி வைப்போம்.”

“அமெரிக்கக் குடிமக்களே நான் அறைகூவி அழைக்கின்றேன். இம்மகத்தான முயற்சி வெற்றியோ தோல்வியோ பொறுப்பு, என்னைவிட உங்கள் கையில்தான் மிகுதியாக இருக்கிறது. இவ்வமெரிக்க நாடு தோன்றிய நாள் தொட்டுத் தங்கள் நாட்டுப்பற்றைக் காட்டுவதற்காக அமெரிக்க மக்கள் பலமுறை அறைகூவி அழைக்கப்பட்டிருக்கின்றனர். உலகமெங்கும் பரவிக்கிடக்கும் அமெரிக்க வீரர்களின் கல்லறைகள் அவர்கள் நாட்டுப் பற்றுக்குச் சான்று பகரும்.

“அமெரிக்க இளைஞர்களே; சங்கநாதம் உங்களை நோக்கி முழங்குகிறது.

“படைக்கலன் தாங்குவதற்காக நான் உங்களை அழைக்கவில்லே; ஆனுல் அளவற்ற படைக்கலன்களை நாம் பெற்றிருக்கிரும்.”

“போர்க்களத்தில் அணிவகுத்து நிற்பதற்காக நான் உங்களை அழைக்கவில்லே. ஆனுல் நாம் போருக்கும் ஆயத்தமாக இருக்கிரும்.”

" நான் உங்களை ஓர் அமைதியான போராட்டத்திற்கு அழைக்கிறேன். அப்போராட்டத்தின்போது மகிழ்ச்சியில் நம்பிக்கையும், துன்பத்தில் சகிப்புணர்ச்சியும் கொள்ள வேண்டும். மக்களினத்திற்குப் பொது எதிரிகளான கொடுங் கோன்மை, வறுமை, பிணி, போர் ஆகியவற்றை எதிர்த் தழிக்கவேண்டும்."

" இந்த எதிரிகளை முறியடிக்க மக்களெல்லாரும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற வேறுபாடில்லாமல் உலக நோக்கில் ஒன்றுபட வேண்டும். மக்களினத்தின் இந்தப் பொதுப் பகைவர்களை ஒழித்துக்கட்டும் வரலாற்றுப் புகழ்பெற்ற இம்முயற்சியில், நீங்களும் கலந்து கொள் கிறீர்களா ?

" மனித உரிமையைப் பாதுகாக்கப் போராடும் நல் வாய்ப்பு எல்லாத் தலைமுறையினருக்கும் கிடைப்பதில்லை; நமக்குக் கிடைத்திருக்கிறது. அமெரிக்க மக்களாகிய நாம் ஏற்றி வைக்கும் இவ்விளக்கொளி உலகமெங்கும் பரவட்டும்."

" அமெரிக்கக்குடி மக்களே ! உங்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன்."

" அமெரிக்கா உங்களுக்கு என்ன செய்யக் கூடும் ? என்று கேட்காதீர்கள். நீங்கள் அமெரிக்காவுக்கு என்ன செய்யக்கூடும் ? என்பதை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்,

" அன்பிற்குரிய உலக மக்களே ! அமெரிக்கா உங்க ளுக்காக என்ன செய்யக்கூடும்? என்று கேட்காதீர்கள். நாம் எல்லாரும் மனித உரிமையைக் காக்க என்ன செய்யக்கூடும்? என்று கேளுங்கள்.

" அமெரிக்க மக்களாயிருப்பினும் சரி, அல்லது உலக மக்களாயிருப்பினும் சரி, இக்குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குரிய ஆற்றலையும், தியாக உணர்வையும் நாம் முயற்சிக்கும், உழைப்புக்கும் உரிய பரிசை எதிர்கால வரலாறு நமக்குக் கொடுக்கும். இப்பணி முற்றுப்பெற ஆண்டவன் அருளை வேண்டி நிற்போம். இவ்வுலகில் ஆண்டவன் கடமையும், நம் கடமையும் ஒன்றுதான் என்பதை உணர்வோமாக! வணக்கம்! "

# 14. வெள்ளை மாளிகை

கனடாவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் நூறு ஆண்டுகளுக்கு முன் பெரும் போரில் ஈடுபட்டிருந்தன. அமெரிக்க வீரர்கள் கனடாவிலிருந்த யார்க் நகரைத் தீயிட்டு அழித்துவிட்டனர். இந்நிகழ்ச்சிக்குப் பழிவாங்குவதற்காகக் கனடியர்கள் அமெரிக்க நாட்டில் புகுந்து அமெரிக்கத் தலைவரின் மாளிகையைத் தீயிட்டு அழித்துவிட்டனர். எரிந்துபோய் வெறும் கற்சுவர்களோடு கூண்டு போல் நின்ற அம்மாளிகையை அமெரிக்கர்கள் மீண்டும் புதுப்பித்தனர். தீப்பட்டு எரிந்ததால் கருகிக் கருப்பாய் நின்ற சுவர்களின் நிறத்தை மறைக்க வெள்ளை வண்ணம் பூசப்பட்டது. அன்று முதல் அம்மாளிகையை வெள்ளை மாளிகை என்று அமெரிக்க மக்கள் அழைக்கத் தொடங்கினர். இந்தப் பெயர் நிலைத்து, அமெரிக்கத்தலைவரின் மாளிகையைக் குறிப்பிடும் அதிகார பூர்வமான பெயராகிவிட்டது. வெள்ளை மாளிகையை அமைத்தவர் திருவாளர் ஹோபன் என்பவர், இவரும் கென்னடியைப் போல இளம் வயதிலேயே புகழ் பெற்றவர்; இவருடைய மூதாதையரும் ஐரிஷ்காரரே.

இம்மாளிகையின் சமையலறையைக் கட்டி முடிக்க முதன் முதலில் முப்பதனுயிரம் டாலர்கள் செலவழிக்கப் பட்டன. பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் அமெரிக்கத் தலைவராக இம்மாளிகையில் குடிபுகுந்தபோது, இச்சமையலறை அவருடைய மனைவியாருக்குப் பிடிக்கவில்லை. எனவே மீண்டும் முப்பதினுயிரம் டாலர் செலவில் நவீன வசதிகளோடு இச்சமையலறை புதுப்பிக்கப்பட்டது. அமெரிக்க நாட்டிலேயே மிகச்சிறந்த உணவுகளைத் தயாரிக்கும் ஒருவர் இங்குத் தலைமைச்சமையற்காரராக அமர்த்தப்பட்டிருந்தார். அவர் ஹேய்ஸ் என்ற அமெரிக்கத் தலைவரின் காலத்திலிருந்தவர் ஜான் சேம்பர்லேன் என்ற பெயர் கொண்ட அச்சமையற்காரர் ஒரு

கோடீசுவரராம். இன்றும் இச்சமையற்காரர் பதவி வகிப்போருக்கு ஆயிரக்கணக்கான டாலர்கள் திங்கள் தோறும் ஊதியமாகக் கொடுக்கப்படுகிறதாம்.

வெள்ளை மாளிகையில் வெந்நீர் நீச்சற் குளம் உள்ளது. இம்மாளிகையில் வாழும் அமெரிக்கத் தலைவருக்குப் பதினெட்டு நவீன வசதி உந்துகளும், ஒரு படகும், சிறு கப்பலும், ஒரு ஜெட்வான ஊர்தியும், நான்கு ஹெலிகாப்டர்களும் தரப்பட்டுள்ளன.

'கானகத்தில் உள்ள மாளிகை' என்று முதல் அமெரிக்கத் தலைவர் ஜார்ஜ் வாஷிங்டன் இதை வருணித்தார். ஜெபர்சன் என்ற மற்ருேர் அமெரிக்கத்தலைவர் இம்மாளிகையைப் பற்றிக் குறிப்பிடும் போது, "இதில் இரண்டு மாமன்னர்களும், ஒரு போப்பாண்டவரும், ஒரு தலாய் லாமாவும் குடியிருக்கலாம்" என்று கூறினுர்.

ஜாக்குலின் சிறுமியாக இருந்தபோது தன் தாயுடன் வெள்ளை மாளிகையைக் காண வந்திருக்கிருள். இம்மாளிகைக்கே தான் எதிர்காலத்தில் தலைவியாக வரப் போகிருேம் என்று அவள் கனவும் கண்டிருக்கமாட்டாள். வெள்ளை மாளிகையில் குடியேறியதும், ஜாக்குலினுக்குச் சற்றுத் தொல்லையாகத் தானிருந்தது. நாள்தோறும் உள் நாட்டிலிருந்தும் உலகின் பல பகுதிகளிலிருந்தும் அரசியல் விருந்தாளிகள் வந்த வண்ணமிருந்தனர். விருந்தும், வரவேற்புமாகவே நாட்கள் கழிந்தன. இடையருத அலுவல்கள் அவளைச்சோர்வடையுமாறு செய்தன. நாள்தோறும் மேசையின் முன்ருல் வேலை குவிந்து கிடக்கும். தொலைபேசியின் மணி இடையருது ஒலித்துக் கொண்டிருக்கும். நாட்கள் செல்லச் செல்ல இவ்வேலைப் பளு ஜாக்குலினுக்குப் பழகிப் போய்விட்டது. இதற்கு முன்பெல்லாம் ஜாக்குலின் கென்னடியின் மனைவி மட்டும் தான். ஆனுல் அவள் இன்று அமெரிக்க நாட்டின் முதல் பெண்மணி.

வெள்ளை மாளிகையைப்போல் வசதியான ஒரு மாளிகை உலகில் வேறெங்கும் கிடையாது. அழகிலும் இம்மாளிகை ஒப்பில்லாதது. ஜாக்குலின் இம்மாளிகையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும், இதை மேலும் அழகு படுத்த விரும்பினாள்.

"இந்த வெள்ளை மாளிகையில் வாழ்ந்த முன்னாள் அமெரிக்கத் தலைவர்கள் பல பொருள்களை விரும்பிப் போற்றி வந்திருக்கலாம். அப்பொருள்கள் நாட்டின் பல பகுதிகளில், பலரிடத்தில் இருக்கலாம். அக்கலைப்பொருள்களைத் தேடிச் சேகரித்து இம்மாளிகையில் நிரப்ப விரும்புகிறேன். அக்கலைக் கருவூலங்கள் யாரிடம் இருக்கின்றனவோ, அவர்களெல்லாம் அருள் கூர்ந்து அனுப்பி வைக்கவேண்டும்" என்று ஜாக்குலின் ஓர் அறிக்கை விடுத்தார். அவ்வறிக்கையைப் பார்த்த அமெரிக்க மக்களும், கலைப்பொருள்களை அனுப்பி வைத்தனர். அவற்றைக் கொண்டு ஜாக்குலின் ஒரு பொருட்காட்சியே அமைத்துவிட்டார். அமெரிக்க நாட்டு நிர்வாகத்தில் கென்னடிக்கு எவ்வளவு பெருமையுண்டோ, அந்த அளவு பெருமை வெள்ளை மாளிகை நிர்வாகத்தில் ஜாக்குலினிக்கு உண்டு.

கென்னடியின் குடும்பம் ஓர் அரசியற் குடும்பம். தம்பி ராபர்ட் கென்னடி அமெரிக்க நாட்டின் சட்டத்துறைத் தலைவர் ( Attorney General ) மைத்துனர் சர்ஜெண்ட் ஷ்ரீவர் அமைதிப்படையின் இயக்குநர். கடைசித் தம்பி எட்வர்டு கென்னடி மாசாசூசெட்ஸ் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர். இவ்வரசியற் சூழ்நிலை வெள்ளை மாளிகையில் நல்ல சுறுசுறுப்பை உண்டாக்கியது. கென்னடி இயந்திர வேகத்தில் இயங்கிக் கொண்டிருந்தார் தந்தையின் வேகம் குழந்தைகளான கரோலினிக்கும், சின்ன ஜானுக்கும் துளிக்கூடப் பிடிக்கவில்லை.

ஒரு நிருபர், "ஒரே அவசரத்தில் இருப்பவர் இளைஞர் கென்னடி அவருடைய மகளான கரோலினுக்கு ஆறு

சொற்கள் தாம் தெரியும். அப்பா, வான்ஊர்தி, உந்துவண்டி, தொப்பி, செருப்பு, நன்றி என்பவையே அச்சொற்கள். இந்த ஆறு சொற்களில் மூன்று வேகத்தைக் குறிப்பவை" என்று நகைச் சுவையோடு ஒரு முறை எழுதியிருந்தார்.

கென்னடி அமெரிக்கத் தலைவராக வெள்ளை மாளிகையில் குடியேறியதும், "இந்த விளையாட்டிளைஞன் என்னத்தான் செய்யப் போகிருன்? பார்ப்போம்" என்று உலக அரசியல் தலைவர்களெல்லாம் விழிப்போடு காத்திருந்தனர். அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை

அணு ஆயுத ஒழிப்பு உடன்படிக்கையின் மூலமும் கியூபா நெருக்கடியின்போது காட்டிய உறுதியின் மூலமும் உலக அரசியல் வாதிகளின் நெஞ்சில் அழியாத இடம் பெற்றுவிட்டார் கென்னடி. இறுதியாக அவர் மேற்கொண்ட முயற்சி மனிதத் தன்மையை உயர்த்தும் பெரு முயற்சி; 'மக்கள் உரிமைச் சட்டத்தை' கொணர்வதற்கு மேற்கொண்ட முயற்சி. இச்சட்டத்தைக் கொண்டுவரக் கென்னடி முயற்சி எடுத்துக்கொண்ட காரணத்தால், அமெரிக்க நாட்டு மக்களில் பாதித் தொகையினரின் வெறுப்புணர்ச்சியைத் தேடிக் கொள்ள நேரிட்டது. அதற்காகக் கென்னடி அஞ்சவில்லை.

---

# 15. மக்கள் உரிமைச் சட்டம்

அமெரிக்க ஐக்கிய நாடு பெரும் நிலப்பரப்பைத் பின்ன கத்தே கொண்ட ஒரு துணைக் கண்டம். வெள்ளையர்கள் அங்குக் குடியேறிய காலத்தில் அந்நாடு காடுகளும், அடர்ந்த புல் வெளிகளும் கொண்ட பரந்த நிலப்பரப்பாக விளங்கியது. செவ்விந்தியர்கள் என்ற நாகரிகமற்றமக்கள் அமெரிக்கக்காடு களில் வாழ்ந்து வந்தனர். வெள்ளையர்கள் செவ்விந்தியர்களை அந்நாட்டின் மேற்கெல்லைக்குத் துரத்தியடித்துவிட்டுக் குடி யேற்ற நாடுகளை ஏற்படுத்தினர். அமெரிக்க நாடு வற்றாத பேராறுகளையும், வளங்கொழிக்கும் சமவெளிகளையும், எடுக்க எடுக்கக் குறையாத நிலக்கரி, இரும்புச் சுரங்கங்களையும் பெற்றுத் திகழ்ந்தது. இவ்வியற்கை வளங்களை நல்ல முறை யில் வெளிக் கொணர்ந்து மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படு மாறு செய்வதற்கு எல்லையற்ற உடலுழைப்புத் தேவைப் பட்டது. இதன் பொருட்டே அடிமை வாணிகம் அமெரிக்கா வில் தோன்றியது.

இருண்ட கண்டம் என்று வழங்கப்பட்டு வந்த ஆப்பிரிக் காவில் பழங்குடி மக்களுக்கு நீக்ரோவர் என்பது பெயர். இம்மக்கள் கருத்த மேனியும், கருங்கற்சிலை போன்ற உடற் கட்டும், தடித்த உதடும், அகன்ற நெற்றியும், சலியாத உடல் வலிமையும் வாய்க்கப் பெற்றவர்கள். வன விலங்குகளை வேட்டையாடிப் பிடிப்பது போல் இம்மக்களைக் கப்பல் கப்ப லாக ஆப்பிரிக்காவிலிருந்து ஐரோப்பியர்கள் பிடித்து வந்து அமெரிக்காவில் அடிமைகளாக விற்றனர்; ஆடுமாடுகளைச் சந்தையில் ஏலம் விடுவதுபோல் நீக்ரோவர்களை ஏலம் விட் டனர். மாடுகளை நாம் தொழுவத்தில் கட்டி வைப்பதுபோல இவர்களை அமெரிக்கர்கள் கட்டி வைததனர். நாள்தோறும் இக்கருப்பர்கள் வயல்களில் வேலை செய்ய வேண்டும். எதிர்த்துப் பேசினாலோ, அல்லது ஆண்டையின் ஆணைக்குத் தலைவணங்க மறுத்தாலோ, மாடுகளை மிலாறினால் அடிப்பது

போல் அமெரிக்கர்கள் அடித்து நொறுக்கிவிடுவார்கள் ; அடிபட்டு இறந்தால் வெறிநாயை வீதியோரத்தில் எறிவதுபோல் இவர்களையும் எறிந்துவிடுவார்கள். கணவன், மனைவி, மக்கள் என்றும் பாராது இவர்களைப் பிரித்துப் பணத்திற்காகத் தொலை தூரத்தில் விற்றுவிடுவதுமுண்டு. அமெரிக்க நாடு பொன்னுடாக மாறியதற்கு இக்கருப்பர்களே அடிப்படைக் காரணம் என்று சொல்லலாம்.

இக்கொடிய அடிமை வாணிகத்தைப் போராடி ஒழித்தவர் நூருண்டுகளுக்கு முன் அமெரிக்கத் தலைவராயிருந்த அப்ரகாம் லிங்கன் என்பவர். அமெரிக்க ஐக்கிய நாட்டின் தென் மாநிலங்கள் உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டவை. அம்மாநிலங்கள் அடிமை வாணிகத்தை ஆதரித்தன ; அடிமை வாணிக்கத்தைச் சட்டத்தின் மூலம் தடை செய்ய முன்வந்த அமெரிக்க ஐக்கிய நாட்டினின்று தனியாகப் பிரிந்து நின்று, படை திரட்டிப் பெரும் போர் செய்தன. இறுதியில் மனிதப் பண்பே வெற்றிபெற்றது. அடிமை வாணிகம் அடியோடு ஒழிக்கப்பட்டது. ஆனால் இக்கொடுமையை ஒழித்துக்கட்டிய பெரியார் அப்ரகாம் லிங்கன், பூத் என்ற நடிகன் ஒருவனுல் நாடக அரங்கில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அமெரிக்க நாட்டில் அடிமை வாணிகம் ஒழிக்கப்பட்டாலும், கறுப்பர்கள் சமூக வாழ்வில் ஒதுக்கி வைக்கப்பட்டு மிகக் கேவலமாக நடத்தப்பட்டனர் ; பொதுவிடங்களிலும், நடைபாதைகளிலும், கல்லூரிகளிலும், படக்காட்சி கொட்டகைகளிலும், உணவு விடுதிகளிலும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். வெள்ளையர்கள் பெறும் உரிமைகளையும், சலுகைகளையும் இவர்கள் பெற முடியாமல் போய்விட்டது. அதனுல் அறிவும் ஆற்றலும் பெற்ற நீக்ரோ இளைஞர்கள் முறைப்படி கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேற முடியாத நிலை ஏற்பட்டது.

கென்னடிக்கு இளமையிலிருந்தே நீக்ரோவர்பால் அன்பும், அவர்கள் முன்னேற்றத்தில் அக்கறையும் இருந்து வந்தன. தம்முடைய நூலான 'தீரர்கள் வாழ்க்கைக்குக் கிடைத்த பரிசுத் தொகையை நீக்ரோவர் பயிலும் கல்விக் கூடம் ஒன்றிற்கு அவர் நன்கொடையாக வழங்கிவிட்டார் என்பதை முன்னரே படித்துள்ளோம். அப்ரகாம் லிங்கன் அடிமை வாணிகத்தை ஒழிப்பதைத் தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டார். அதேபோல் நீக்ரோவருக்குச் சம உரிமை வழங்குவதைக் கென்னடி தமது குறிக்கோளாகக் கொண்டார்.

சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் அலபாமா பகுதியில் நிறவெறி தலைவிரித்தாடியது. நீக்ரோ மாணவர்கள் கல்லூரிகளில் சேர்வதற்கு முடியாமல் தத்தளித்தனர். வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் பூசல் முற்றிக் கலகங்களும் தோன்றின. ஒருசில மாநில அரசாங்கங்களும் நிறவெறிக்கு ஆதரவு காட்டின. இந்நிகழ்ச்சிகள் கென்னடியின் உள்ளத்தில் பெரும் வேதனையை உண்டாக்கின. தம்முடைய பதவிக்காலம் முடிவதற்குள் நீக்ரோவருக்கு அமெரிக்கச் சமுதாயத்தில் சம உரிமை வழங்கும் சட்டம் ஒன்றைக் கொண்டுவர முடிவு செய்தார்; மக்கள் உரிமைச் சட்டம் (American civil rights law) என்று அதைக் குறிப்பிட்டார்; அம் மசோதாவை விளக்கியும், நிறவெறியை எதிர்த்தும் 1963 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் பதினோராம் நாள் கென்னடி வானொலியில் அரிய சொற்பொழிவொன்று நிகழ்த்தினர். அச்சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு :

"இந்த அமெரிக்கச் சமுதாயம் பன்னாட்டு மக்களாலும், பன்னாட்டுப் பண்பாடுகளாலும் உருவாக்கப் பட்டது. பிறப்பால் அமெரிக்க மக்கள் எல்லாரும் சமமாவர் என்ற அடிப்படையில் இச்சமுதாயம் உருவாக்கப்பட்டது. தனியொருவனின் உரிமை பறிக்கப்படும்போது, ஒவ்வோர் அமெரிக்

கனின் உரிமையும் பறிக்கப்படுகிறது என்ற உண்மையை எல்லாரும் உணரவேண்டும்.

“ உலக மக்களின் உரிமைகளைப் பறிபோகாமல் காப்பாற்றும் பெரும் பணியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். உலக நாடுகளுக்கு நாம் உதவும்பொழுது அந்நாட்டு மக்கள் கறுப்பர்களா அல்லது வெள்ளையர்களா என்று நாம் சிந்திப்பதில்லை; பொது நோக்கோடு நடந்துகொள்ளுகிறோம். ஆனால் அந்தப் பொது நோக்கம் நம் சொந்த நாட்டிலே இல்லை என்பதை எண்ணும்போது நான் மிகவும் வேதனைப்படுகிறேன்.

“ அமெரிக்க நாட்டில் பிறந்த ஒவ்வொரு குடி மகனும் நிறவேற்றுமை இல்லாமல், அரசாங்கத்தின் துணை நாடாமல், வீதிகளில் நின்று போராட்டம் நடத்தாமல், தான் விரும்பிய உணவு விடுதியிலோ, படக்காட்சிக் கொட்டகையிலோ, விற்பனை நிலையங்களிலோ, மற்ற எந்தப் பொது விடத்திலோ நுழைவதற்கு உரிமை பெறவேண்டும்; நிற வேறுபாடு கருதாமல் தனது வாக்கைப் பதிவு செய்து, தான் விரும்பும் ஒரு சட்டமன்ற உறுப்பினரைத்தேர்ந்தெடுக்க ஒவ்வோர் அமெரிக்கனும் உரிமை பெறவேண்டும். நீங்கள் உங்கள் குழந்தைகள் எல்லாரும் எப்படி உரிமையோடு நடத்தப்பட வேண்டும் என்று எதிர் பார்க்கின்றீர்களோ, அதே உரிமையோடு அமெரிக்க நாட்டில் பிறந்த ஒவ்வொரு குடிமகனும் நடத்தப் படவேண்டும், ஆனால் இப்போது நம் நாட்டு மக்களின் எண்ணம் அப்படி இல்லை.

“ நாம் துய்க்கும் உரிமைகளில் கால் பங்குகூடக் கறுப்பர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆனால் நாம் துய்க்கும் துன்பத்தைப்போல் பன்மடங்கு அவர்கள் தாங்கவேண்டியுள்ளது. வேறுபடுத்தல், ஒதுக்கி வைத்தல் ஆகிய கொடுமைகள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒவ்வொரு நகரிலும், ஒவ்வொரு மாநிலத்திலும் காணப்படுகின்றன. இவை நம் நாட்டின் அமைதியைக் குலைக்கக் காத்திருக்கும் பேரிடிகள்.

" மனித உள்ளம் கொண்ட ஒவ்வோர் அமெரிக்கனும், கட்சி வேறுபாடின்றி நிற வெறியைப் போக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். வீதியில் நின்று போராடி இனி எந்த அமெரிக்கனும் தன் உரிமையை நிலை நாட்டும் நிலை கூடாது.

" இனி வழக்கு மன்றத்தில் தீர்வு காணும் முறையில் சட்டங்கள் இயற்றப் படவேண்டும். ஆனால் சட்டத்தைவிட மக்கட் பண்பும், அறமும் சிறந்தவை என்பதை எல்லாரும் உணரவேண்டும்.

" தனது தோல் கருப்பாக இருக்கிறது என்ற காரணத்தால் ஓர் அமெரிக்கக் குடிமகன் பொதுவிடங்களிலும், படக் காட்சிக் கொட்டகைகளிலும், கல்லூரிகளிலும், உணவு விடுதிகளிலும் ஒதுக்கிவைக்கப்பட்டு உரிமையின்றி வாடுகிறான் என்றால், அந்நிறத்தைப் பெற்றுப் பிறக்க நீங்கள் யாராவது முன் வருவீர்களா ? என்று உங்களைக் கேட்கிறேன். நீக்ரோவர்களின் அடிமைத் தளை அறுத்து நூறாண்டுகள் கழிந்து விட்டன! ஆனால் அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய துறைகளில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளை நாம் இன்னும் வழங்காமலிருக்கிறோம்.

" நீக்ரோவர்களுக்குச் சம உரிமை வழங்கும் காலம் வந்துவிட்டது. நாடெங்கும் வாழும் நீக்ரோவர்கள் உரிமை வேண்டிக் கிளர்த்தெழுகின்றனர். இக்கிளர்ச்சியைப் போராட்டங்கள் மூலமாகவோ, காவற்படையினரின் துணை கொண்டோ, சமரசப் பேச்சின் மூலமாகவோ தீர்த்து வைக்க முயல்வது பேதைமை. அடுத்த வாரம் நீக்ரோவருக்குச் சம உரிமை வழங்குமாறு அமெரிக்கப் பாராளுமன்றத்தைக் கேட்கப்போகிறேன். அவர்களுக்குச் சம உரிமை வழங்கும் சட்டத்தையும் மன்றத்தின் துணைகொண்டு நிறைவேற்றப் போகிறேன். இச்சட்டத்தை எதிர்ப்பவர்கள், நம் நாட்டிற்கு

இழிவைத் தேடுபவர்கள், அமைதியைக் கெடுப்பவர்கள். இச்சட்டத்தை ஆதரிப்பவர்கள் உண்மையையும் நேர்மை யையும் வரவேற்பவர்கள்.

"தனிப்பட்ட வணிகத் தலைவர்கள் பலரை நான் நேரில் கண்டு பேசினேன், அவர்களுடைய வாணிக நிறுவனங் களில் நீக்ரோவாகளுக்குச் சம உரிமை வழங்குமாறு கேட்டுக் கொண்டேன். இதுவரை எழுபத்தைந்து நகரங்களில் உள்ள வாணிக நிலையங்கள் நீக்ரோவருக்குச் சம உரிமை வழங்க முன் வந்திருக்கின்றன. மற்ற நகரங்களில் உள்ள முதலாளி கள் தனியர்க முன் வந்து உரிமை வழங்கத் தயங்குகின்றனர். எனவே நீக்ரோவருக்கு நாடெங்கும் உரிமை வழங்குமாறு சட்டம் செய்துவிட்டால், யாரும் தயங்கமாட்டார்கள்.

"வெள்ளை இளைஞரைப்போல் மும்மடங்கு நீக்ரோ இளைஞர்கள் நம் நாட்டில் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். திறமையிருந்தும் கல்லூரிகளில் படிக்க வகையின்றித் திரிகின்றனர். உரிமையின்றி ஒதுக்கப் படுகின்றனர். இக்கொடுமைகளைப் போக்கும் பொறுப்பு அமெரிக்க நாட்டுத் தலைவரையோ, பாராளுமன்ற உறுப்பின ரையோ மட்டும் சார்ந்ததன்று. அமெரிக்காவில் பிறந்த ஒவ் வொரு குடி மகனுடைய பொறுப்பும் ஆகும். ஒரு நாட்டின் சட்டம் என்பது துலாக்கோலைப் போல் நடுநிலைமை வகிப்ப தாக இருக்கவேண்டும். நம் நாட்டுச் சட்டம் நிற வெறியினால் குருடாகி (Colour blind) விடக்கூடாது" வணக்கம்.

கென்னடி கொல்லப்பட்டாலும், அவர் நீக்ரோவருக்குச் சம உரிமை வழங்க வேண்டும் என்று பேசிய பேச்சு, அமெரிக்க மக்களின் உள்ளத்திலே பதிந்து விட்டது. அரசி யலில் துணைத் தலைவராக இருந்து பணியாற்றியவரும், இப்போது அமெரிக்க நாட்டின் தலைவராக விளங்குபவருமான லிண்டன் பி. ஜான்சன் அரும்பாடுபட்டுக் குடியுரிமைச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிவிட்டார்.

1964 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் நாள் இது சட்டமாக நிறைவேறியது.

“ மறைந்த மாவீரரான கென்னடிக்கு வேறு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டியதில்லை. அவர் தம்முடைய உயிர்த் துடிப்பாகக் கொண்டிருந்த குடியுரிமைச் சட்டத்தை நிறை வேற்றுவதுதான் நாம் அவருக்கு எழுப்பும் அழியாத நினைவுச் சின்னம்.”

— லிண்டன் பி. ஜான்சன்.

# 16. புகழ்ச் சாவு

கி. பி. 1963 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 22 ஆம் நாள் கதிரவன் நனது செம்பொற் கதிர்களை நீட்டிக்கொண்டு கிழக்கு வானில் தலை தூக்கிப் பார்த்தான். அன்று வெள்ளிக் கிழமை. வெள்ளிக்கிழமை அமெரிக்க வரலாற்றில் குருதிக் கறை படிந்த நாள் ஜாக்சன், அப்ரகாம் லிங்கன், மெக்கின்லி ஆகிய அமெரிக்கத் தலைவர்கள் வெள்ளிக்கிழமையில் தான் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அமெரிக்கத் தலைவரான ஜான் பிட் ஜெரால்டு கென்னடி, அன்று அதிகாலையில் எழுந்தார்; போர்ட்வொர்த்தில் நடந்த காலை விருந்தில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். வானம் மெல்லத் தூறிக்கொண் டிருந்தது. கூட்டம் முடிந்ததும் வான ஊர்தியில் அவர் தம் மனைவியுடன் ஏறி டெக்சாஸ் மாநிலத்தின் இரண்டாவது பெரிய நகரமான டல்லாசை நோக்கிப் புறப்பட்டார்.

டல்லாஸ் நகரம் முரட்டுத்தனத்திற்குப் பெயர் பெற்றது. ஓராண்டில் இங்கிலாந்து நாடு முழுவதும் நடைபெறும் கொலையைவிட அதிகமாக, இந்நகரில் நடைபெறுவதாகக் கணக்கிட்டிருக்கிருர்கள். அமெரிக்கத் தூதரான அட்லாய் ஸ்டீவன்சன் ஒரு திங்களுக்கு முன் இந்நகரில் சுற்றுப்பயணம் செய்தபோது, இந்நகரில் வாழும் எதிர்க் கட்சிக்காரர்கள் அவரைக் காறித் துப்பித் தாக்கியிருக்கிருர்கள். ஏழு திங்கள் களுக்கு முன் எட்வின் வாக்கர் என்ற அரசியல் தலைவரை இந்நகர் மக்களில் ஒருவன் மறைந்திருந்து சுட்டான். நல்ல வேளையாகக் குண்டு குறி தவறிவிட்டது. மூன்று ஆண்டு களுக்கு முன் பொதுத் தேர்தலின்போது லிண்டன் பி. ஜான் சனும் அவருடைய மனைவியும் கென்னடிக்கு ஆதரவு திரட்டு வதற்காக இந்நகரம் சென்றிருந்தனர். தங்கள் விடுதியின்

தாழ்வாரத்தில் இவர்கள் சென்று கொண்டிருந்தபோது அரசியல் கருத்து வேறுபாடு கொண்ட சிலர் இவர்களை இகழ்ந்து பேசிக் கீழே பிடித்துத் தள்ளினர்.

இந்நகரம் வாணிகத்தில் புகழ்பெற்றது ; ஆடம்பரச் சிறப்பு மிக்கது, மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கும் காலுறை முதல், ஒரு மில்லியன் டாலர் விலையுள்ள வைரக்கல் வரை இந்நகரக் கடைத் தெருக்களில் விலைக்கு வாங்க முடியும். அமெரிக்க ஐக்கிய நாட்டின் தென் பகுதியிலேயே மிகப் பெரிய வங்கி இந்நகரத்தில்தான் உள்ளது.

நன்மைச் சிறப்புக்கும் தீமைச் சிறப்புக்கும் மணிமுடி போல் விளங்கும் இந்நகரின் எல்லைக்குள் கென்னடியின் திறந்த உந்து வண்டி நுழைந்தது. கென்னடியின் மனைவியான ஜாக்குலின் முதன் முறையாக இந்நகருக்கு வருகை தருவதால் இருநூறாயிரம் மக்கள் அவனையும் கென்னடியையும் காண்பதற்காக வீதியில் இரு மருங்கிலும் கூடியிருந்தனர். முதல் உந்து வண்டியில் கென்னடியும் ஜாக்குலினும் இருந்தனர். அவர்களுக்கு அருகில் டெக்சாஸ் மாநில ஆளுநரான திருவாளர் கான்னல்லியும் அவர் மனைவியும் வீற்றிருந்தனர். அடுத்த வண்டியில் அமெரிக்க நாட்டுத் துணைத் தலைவர் லிண்டன் ஜான்சனும் அவர் மனைவியும் வீற்றிருந்தனர். இவர்களுக்குப் பின்னால் பத்து உந்து வண்டிகள் அரசியல் தலைவர்களையும் காவல் வீரர்களையும் தாங்கிக் கொண்டு வந்தன. துணைக்கு ஆயுதந் தாங்கிய வண்டியும் வந்துகொண்டிருந்தது.

“ திருவாளர் கென்னடி ! டல்லாஸ் மக்கள் உங்களை வெறுப்பதாக நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்களே ! உங்களுக்கு ஆதரவாளர்களாக எவ்வளவு மக்கள் கூடியிருக்கின்றார்கள் பார்த்தீரா ?” என்று கென்னடியிடம் கூறினார். அருகில் அமர்ந்த ஆளுநர் கான்னல்லி.

“ ஆமாம் ! உண்மைதான் !” என்று புன் முறுவலோடு விடையிறுத்தார் கென்னடி.

நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்த உந்து வண்டி ஒரு திருப்பத்தில் திரும்பியது. திறந்த உந்து வண்டியில் நின்ற வண்ணம் புன் சிரிப்போடு கையை ஆட்டிக்கொண்டு வந்தார் கென்னடி. திடீரென்று வேட்டுச் சத்தம் கேட்டது. இரண்டு குண்டுகள் தொடர்ந்து கென்னடியின் தலையில் பாய்ந்தன. ஒரு குண்டு மூளையைத் துளைத்துக்கொண்டு தொண்டையிலும் பாய்ந்தது. ' ஓ ' என்று கதரிய வண்ணம் தொண்டையைக் கையால் பற்றிக்கொண்டு அருகிலிருந்த தமது மனைவியின் மடியில் வீழ்ந்தார் கென்னடி.

" ஐயோ கடவுளே ! எனது கணவனைக் கொல்லுகின்றார்களே ! ஐயோ * ஜாக் ! ஜாக் ! " என்று கதறி துடித்தாள் ஜாக்குலின். அவள் கையிலிருந்த மலர்ச்செண்டு கீழே விழுந்தது.

மூன்றுவது குண்டு அருகிலிருந்த ஆளுநர் கான்னலியின் தோள் பட்டையில் பாய்ந்து, அவ்வெலும்பை முறித்து, மூன்று விலா எலும்புகளை நொறுக்கி, நுரையீரலைத் துளைத்து, வலக்கை மணிக்கட்டில் பாய்ந்து, இறுதியாக இடக்கணுக்காலில் சென்று தங்கியது. " ஐயோ! நம் எல்லாரையும் கொல்லப் போகிறார்கள்." என்று கதறிக்கொண்டு அவர் சாய்ந்தார்.

கென்னடியைத் தாங்கிக் கொண்டு மூன்றுகல் தொலைவிலிருந்த பார்க்குலாந்து மெமோரியல் மருத்துவமனைக்கு உந்து வண்டி விரைந்து செலுத்தப் பட்டது. கென்னடியைப் பிழைக்க வைப்பதற்காகத் திறமை மிக்க மருத்துவர்கள் பலர் கூடி அரை மணி நேரம் போராடினர். சரியாகப் பிற்பகல் ஒரு மணிக்குக் கென்னடியின் ஆவி உடலை விட்டுப் பிரிந்தது. டெக்சாஸ் மாநில ஆளுநர் காப்பாற்றப் பட்டார்.

---

* ஜாக் என்பது கென்னடியின் செல்லப்பெயர். ஜாக்குலின், கென்னடியை ஜாக் என்றுதான் அழைப்பது வழக்கம். கென்னடி தமது மனைவியை ஜாக்கி என்று அன்பு பொங்க அழைப்பது வழக்கம்.

கென்னடி சுடப்பட்ட இடத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் ஆறடுக்கு மாடிகளை உடைய கட்டடம் ஒன்று இருந்தது. அது பாடநூல்கள் வெளியிடும் ஒரு பதிப்பகம். கென்னடியை நோக்கிப் பாய்ந்து வந்த குண்டுகள், அக்கட்டடத்தின் மாடியிலிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று எல்லாருக்கும் ஓர் ஐயம் ஏற்பட்டது. உடனே காவற் படை வீரர்கள் அக்கட்டடத்தைச் சூழ்ந்து கொண்டனர். அப்பதிப்பகத்தில் வேலை செய்த பணியாளர்கள் எல்லாரும் சோதனையிடப்பட்டனர். அக்கட்டடத்தின் மூலை முடுக்கெல்லாம் சோதனையிடப்பட்டன. அக்கட்டடத்தின் ஆறுவது மாடியில் ஒரு மூலையில் துப்பாக்கி ஒன்று மறைக்கப் பட்டிருந்தது. அது உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த துப்பாக்கி. இத்தாலியில் செய்யப்பட்டது. அதன் நுனியில் தொலைநோக்குக் குவியாடி ஒன்றும் பொருத்தப்பட்டிருந்தது. அம்மாடியின் மூலையில் உள்ள பலகணி ஒன்றில் நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அப்பலகணியிலிருந்து பார்ப்பதற்குக் கென்னடி சுடப்பட்ட இடம் மிகவும் வாய்ப்பாக இருந்தது. எனவே அப்பதிப்பகத்தைச் சேர்ந்த யாரோ ஒருவன்தான் அம்மாடியிலிருந்து கென்னடியைச் சுட்டிருக்க வேண்டும் என்று காவற்படை வீரர்கள் முடிவு செய்தனர்.

அப்பதிப்பகத்தில் பணி புரிந்தோர் யாவரும் மீண்டும் அழைக்கப்பட்டனர். அப்பணியாளர்களில் ஒருவன் காணப்படவில்லை. அவன் பெயர் லீ ஆர்வி ஆஸ்வால்டு. வெண்ணிற மேனியும், ஐந்து அடி பத்தங்குல உயரமும், நூற்றுபது இராத்தல் எடையும் கொண்ட அவனுக்கு வயது முப்பது இருக்கும். உடனே அவனுடைய அடையாளங்கள் யாவும் ஒலிபெருக்கியின் மூலம் நகரெங்கும் தெரிவிக்கப்பட்டன. அவனைப் பிடிப்பதற்காகக் காவல் வீரர்கள் நாற்புறமும் அனுப்பப்பட்டனர். கென்னடி சுடப்பட்ட இடத்திலிருந்து மூன்று கல்களுக்கு அப்பால்வீதியில் பரபரப்போடு ஓர் இளைஞன் சென்று கொண்டிருந்தான். அவன்பால் ஐயம் கொண்ட ஒரு காவல் வீரன், அவனை நெருங்கினான். உடனே அவ்விளைஞன் தன் சட்டையில் மறைத்து வைத்திருந்த

கைத்துப்பாக்கியை எடுத்து அக்காவல்படை வீரனைச் சுட்டு விட்டு ஒரு சந்தில் புகுந்து ஓடிவிட்டான். அக்காவற்படை வீரன் அவ்விடத்திலேயே துடிதுடித்து விழுந்து இறந்து விட்டான். உடனே மற்றக் காவற் படையினர் அவ்விளைஞனைத் தொடர்ந்து ஓடினர். அவன் ஒரு படக்காட்சிக் கொட்டகையில் நுழைந்து கூட்டத்தோடு கூட்டமாகக்கலந்து விட்டான். காவற்படையினர் எப்படியோ அவனைக் கண்டு பிடித்துக் கையிற் காப்பிட்டனர்.

லீ ஆர்வி ஆஸ்வால்டுதான் கென்னடியைச் சுட்டுக் கொன்றிருக்கவேண்டும் என்பதற்குத்தக்க சான்றுகள் கிடைத்துள்ளன. பதிப்பகத்தின் ஆறுவது மாடியில் கிடந்த துப்பாக்கி அவனுடையது தான் என்ற உண்மையை அவன் மனைவியான மெரீனு ஒப்புக்கொண்டாள். துப்பாக்கி விற்பனை செய்யும் நிறுவனத்தாரும், அத்துப்பாக்கி ஆஸ்வால்டினுல் தான் வாங்கப்பட்டது என்ற உண்மையைப் புலப்படுத்தினர். அவனுடைய உடலை இராசயன முறைப்படி சோதனையிட்ட போது, சிறிது நேரத்திற்கு முன் துப்பாக்கி வெடித்ததால் சிதறிய நுண் துகள்கள் அவன்மீது படிந்திருந்தன என்ற உண்மையும் புலப்பட்டது. அன்று காலை துப்பாக்கிப் போன்ற நீளமான ஒரு பொருளைப் பழுப்புக் காகிதத்தில் சுற்றிக்கொண்டு ஆஸ்வால்டு பதிப்பகத்திற்குள் நுழைந்த தாக அங்கு பணிபுரிந்தோர் கூறினர். " அது யாது " என்று கேட்டபோது, சாளர மறைப்பு என்று அவன் கூறினுனும். மேலும் ஆறுவது மாடியின் மூலையில் இருந்த பலகணிச்சுவரில் அவனுடைய உள்ளங்கை அடையாளம் கண்டு பிடிக்கப் பட்டது. இச்சான்றுகளை வைத்துக்கொண்டு பார்க்கும் போது, கென்னடியை ஆஸ்வால்டுதான் சுட்டுக் கொன்றி ருக்கவேண்டும் என்பதில் ஐயம் எதுவுமில்லை. ஆனுல் கடைசி வரையில் ஆஸ்வால்டு, " நான் யாரையும் கொல்லவில்லை " என்றே சாதித்தான். பாதையில் காவற்படை வீரனைச் சுட்டதைக் கூட அவன் இறுதிவரை ஒப்புக்கொள்ளவில்லை.

கென்னடியின் கொலேக்கு அரசியல் காரணம் எதுவும் இல்லே என்று கூறப்படுகிறது. கென்னடியைச் சுட்டுக் கொன்றதற்கு முழுக்க முழுக்க ஆஸ்வால்டுதான் காரணம் என்றும் கூறப்படுகிறது. கென்னடியைச் சுட்டுக் கொல்லும் படி அவனேத் தூண்டியது எது? திரிபுணர்ச்சி கொண்ட உள்ளம்தான். அவன் உள்ளத்தில் திரிபுணர்ச்சி தோன்றி வளரக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தனர். ஆஸ்வால்டு இளமையில் தந்தையை இழந்தவன். அவனுடைய தாயின் உழைப்பால் வளர்ந்தவன். இளமையிலிருந்தே வறுமை அவனுடைய அறிவை முடம்செய்துவிட்டது. எப்பொழுதும் தனது வறுமையை எண்ணியே அவன் வாடியிருக்கிருன். பள்ளியில் படித்தபோதும் சரி, கப்பற்படையில் பணிபுரிந்த போதும் சரி, யாரிடமும் ஒட்டாமல் அவன் ஒதுங்கியே வாழ்ந்திருக்கிருன்; எப்பொருளேயும் வெறுப் புணர்ச்சியோடு நோக்கி வந்தான். தன்னேயே கூட வெறுக்கும் தன்மை அவனிடத்தில் இருந்தது.

செல்வர்களின் ஆடம்பர வாழ்வும், தனது ஏழ்மையின் இழிவும் அவனே ஆத்திரக்காரனுக மாற்றிவிட்டன. காரல் மார்க்ஸின் நூல்களேப் படிக்கும் வாய்ப்பு அவனுக்கு ஏற்பட்டது. உடனே பொதுவுடைமைக் கொள்கையில் திடீரென்று பற்று ஏற்பட்டு, உருசிய நாட்டிற்குச் செல்லவேண்டும் என்று எண்ணினுன்; அரசாங்கத்தாரின் ஒப்புதலும் கிடைத்தது; உருசிய நாட்டில் குடியேறிவிட்டான்; அங்கு மருந்தகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த மெரீனு என்ற உருசிய மாதை மணம் புரிந்துகொண்டான். தொழிற்சாலே ஒன்றில் அவனுக்கு வேலேயும் கிடைத்தது. அமெரிக்கக் குடியுரிமையை ஒதுக்கிவிட்டு, உருசியக் குடியுரிமை பெறவேண்டும். என்ற விருப்பம் அவனுள்ளத்தில் ஏற்பட்டது. ஆனுல் உருசிய அரசாங்கத்தார் அவனுக்குக் குடியுரிமை வழங்க மறுத்துவிட்டனர்.

சில நாட்களில் உருசிய நாட்டு வாழ்க்கையில் அவனுக்குச் சலிப்பேற்பட்டுவிட்டது. அந்நாட்டின் கட்டுப்பாடான வாழ்க்கை அவனுக்குப் பிடிக்கவில்லே. தன் மனேவி

யோடு உருசிய நாட்டைவிட்டு வெளியேறி அமெரிக்காவை அடைந்தான், "உருசியப் பொது உடைமை ஆட்சியின் கட்டுப்பாடும், அந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையும் எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. சிறந்த துப்பாக்கி ஒன்றை நான் சொந்தமாக வைத்துக்கொள்ள அந்நாட்டு அரசாங்கச் சட்டம் இடந்தரவில்லை" என்று தனது டல்லாஸ் நண்பன் ஒருவனிடம் ஆஸ்வால்டு ஒரு முறை கூறியிருக்கிறான்.

அமெரிக்கா திரும்பிய ஆஸ்வால்டு வயிற்றுப் பிழைப்புக்காக எத்தனையோ பணிகளில் ஈடுபட்டான். எதிலும் நிலைத்திருக்க அவனால் முடியவில்லை. சிறிது நாட்களில் அவன் தனது உருசிய மனைவியின்மீதும் வெறுப்புக்கொண்டான். மேற்கூறிய நிகழ்ச்சிகளிலிருந்து ஆஸ்வால்டு ஓர் அவசர அறிவு படைத்தவன் என்பதும், திரிபுள்ளம் கொண்டவன் என்பதும் தெளிவாகப் புலப்படும்.

ஆஸ்வால்டு உருசிய நாட்டுப் பொதுவுடைமை அரசாங்கக் கட்டுப்பாடுகளை வெறுத்தான். ஆனால், பொதுவுடைமைக் கொள்கையின்மீது அவனுக்கு அளவற்ற பற்றுண்டு. தன்னை ஒரு 'மார்க்சீய வாதி' என்று அவன் பெருமையோடு கூறிக்கொள்வது வழக்கம். கியூபா நெருக்கடியின்போது காஸ்ட்ரோவின் அனுதாபியாக அவன் விளங்கினான் என்று ஆஸ்வால்டின் நண்பர்கள் குறிப்பிட்டனர்,

பொதுவுடைமைக் கொள்கையின்பால் அவன் கொண்டிருந்த அளவிறந்த பற்றும், கென்னடி செல்வக் குடும்பத்தைச்சேர்ந்தவர் என்ற காரணத்தால் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட வெறுப்பும் ஆஸ்வால்டைக் கொலைக்காரனாக மாற்றிவிட்டன என்று சொல்லலாம். கென்னடியின் அரசியல் போக்கும் இவனுக்குப் பிடிக்காமல் இருந்திருக்கலாம்.

# 17. இறுவாய்

கென்னடியின் சாவுக்குக் கென்னடியே ஒரு விதத்தில் காரணம் என்று சொல்லலாம். சரியாக இருபது ஆண்டு களுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட அமெரிக்க நாட்டுத் தலைவர்கள் துப்பாக்கியினால் தாக்கப்பட்டனர். அவ்வாறு தாக்கப்பட்ட அமெரிக்கத் தலைவர்கள் :—

1. ஹாரிசன் — கி. பி. 1840 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக் கப்பட்டார்.
2. அப்ரகாம்லிங்கன் — கி. பி. 1860 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. கார்பீல்டு — கி. பி. I880 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக் கப்பட்டார்.
4. மெக்கின்லி — கி. பி. 1900 ஆம் ஆண்டு இரண்டாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
5. ஹார்டிங் — கி. பி. 1920 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக் கப்பட்டார்.
6. பிராங்க்லின் டி. ரூஸ்வெல்ட் — கி. பி. 1940 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேற்கூறிய தலைவர்களில் பிராங்க்லின் டி. ரூஸ்வெல்ட் மட் டுமே உயிர் பிழைத்தார். மற்றவர்களெல்லாம் இறந்துவிட் டனர். அடுத்தாற்போலச் சரியாக இருபதாண்டுகள் கழித்துக் கி. பி. 1960 ஆம் ஆண்டு கென்னடி அமெரிக்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தேர்ந்தெடுக் கப்பட்டவுடன், மிகவும் பாதுகாப்போடு இருக்க வேண்டு மென்று பத்திரிகைகள் எச்சரிக்கை செய்தன. உலகத் திலேயே மிகுதியாக இன்னல் சூழ்ந்திருக்கும் அரசியல் தலை வர் கென்னடியே என்று ஓர் அரசியல்வாதி கட்டுரை யொன்று எழுதி வெளியிட்டிருந்தான்.

கென்னடி அமெரிக்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட முதல் ஆண்டே 870 அச்சுறுத்துக்கடிதங்கள் அவருக்கு வந்தன. கென்னடி ஹவுஸ்டன் நகருக்குச் சென்ற நாளில், கென்னடியைக் கொல்லப்போவதாக அச்சுறுத்தி ஐந்து முறை தொலைபேசியின் மூலம் அவ்வூர்க் காவல் நிலைய அதி காரியிடம் யாரோ பேசினர். குண்டு துளைக்க முடியாத மேல்

மூடியோடு கென்னடி உந்து வண்டியில் செல்வது நல்லது என்று யாரோ ஒரு மாது தொலைபேசியில் எச்சரிக்கை செய்தாள்.

ஆனால் கென்னடி இவ்வச்சுறுத்தல்களை எப்போதும் பொருட்படுத்தியதில்லை. அமெரிக்க நாட்டுத் தலைவர் ஏறிச் செல்லும் உந்து வண்டி, நகரின் மிக நெருக்கமான பகுதிகளில் சென்றால்கூட, எவ்விதப் பாதை விதிக் கட்டுப்பாடுகளுக்கும் உட்படாமலும், நிற்காமலும் செல்லலாம் என்ற விதியுண்டு. ஆனால் கென்னடி நெருக்கடியான இடங்களில் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வண்டியை நிறுத்திச் செல்லுமாறு கட்டளையிடுவது வழக்கம், கென்னடி மெய்க்காப்பாளர் துணையின்றித் தனியேகூடச் சில சமயங்களில் சென்று விடுவது வழக்கம். உலகிலேயே வெள்ளை மாளிகை மெய்க்காப்பாளர் படைதான் மிகவும் சிறந்தது. இவர்களாலேயே கென்னடியைக் காப்பாற்ற முடியவில்லை.

துப்பாக்கியை விட்டுப் புறப்பட்ட குண்டுகள் கென்னடியின் தலையில் பாய்ந்தன என்று கூறுகின்றனர். அப்பாழும் குண்டுகள் கென்னடியின் தலையில் மட்டுமா பாய்ந்தன? உலகில் வளர்ந்து வரும் நாகரிகத்தின்மீது பாய்ந்தன. நல்லவர்கள் உள்ளத்தில் பாய்ந்தன. மலர்ந்துவரும் மனிதத் தன்மையின்மீது பாய்ந்தன. உரிமை பெறுவதற்காக உரத்த குரல் எழுப்பிக்கொண்டிருக்கும் நீக்ரோவர் குரல்வளையில் பாய்ந்தன. ஏந்திய கையுடன் கடனுக்காகக் காத்திருக்கும் ஏழை நாடுகளின் இதயத்தில் பாய்ந்தன.

கென்னடியின் இறப்பைப் பற்றி எண்ணும்போது, நம் குடும்பத்தைச் சேர்ந்த உற்றார் யாரோ இறந்துவிட்ட உணர்வு தான் எல்லாருக்கும் ஏற்படும். கென்னடி கொலை செய்யப் பட்ட நிகழ்ச்சியை நான் எழுதும்போது, என் கண்ணில் வழிந்த கண்ணீரை என்னால் தடுத்துக்கொள்ள முடியவில்லை. ஆம்! கென்னடிக்கு நாம் கண்ணீரைத்தான் காணிக்கையாக்க முடியும்! நம்மால் அப்பெரு மகனுக்குச் செய்யக்கூடிய *அஞ்சலி அதுதான்!*

வாழிய கென்னடியின் புகழ்!

# 18. கென்னடியின் பொன்மொழிகள்

1. உலக அமைதியின் பொருட்டு நாம் தொடங்கியிருக்கும் பணி நூறு நாட்களில் முற்றுப்பெருமல் போகலாம்; ஆயிரம் நாட்களில் முற்றுப் பெருமல் போகலாம்; ஏன்? நம் வாழ்நாளில்கூட முற்றுப் பெருமல் போகலாம். இருப்பினும் இந்நற்பணியை நாம் துவக்கி வைப்போம்.

2. இது இடர்சூழ்ந்த உலகம்; நிலையற்ற உலகம். இவ்வுலகில் எளிதாக வாழ்ந்துவிடலாம் என்று யாரும் எதிர்பார்க்கக் கூடாது.

3. எளியவர்கள் பாதுகாப்போடும், வலியவர்கள் நேர்மையோடும் வாழத்தக்க அமைதியான புத்துலகம் ஒன்றைச் சமைக்க நம்மாலான பணியைச் செய்வோம்.

4. இன்று நடப்பது ஒரு கட்சியின் வெற்றிவிழாவன்று. மக்களின் உரிமை விழாவாகும். ஒன்றின் முடிவையும் மற்றொன்றின் துவக்கத்தையும் குறிப்பிடும் விழாவாகும். மாறுதலையும் புதுமையையும் வரவேற்கும் விழாவாகும்.

5. அதிகாரம் ஒருவனை அத்துமீறிய செயல்களில் ஈடுபடுத்தும்போது, கவிதை அவனுடைய எல்லை எதுவென்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அதிகாரம் ஒருவனைக் குறுகிய புத்திக்காரனுக்கும் போது, கவிதை அவன் உள்ளத்தை விரிவடையச் செய்கிறது.

6. நான் கூறும் சமாதானம் மனித உரிமை பற்றிய சமாதானம்; நான் குறிப்பிடும் உரிமை, போரினால் விளையும் அழிவைப் பற்றிய அச்சம் இல்லாமல் மக்களினம் வாழும் உரிமை. உயிரினங்கள் இயற்கை வழங்கியபடிகாற்றை உயிர்க்கும் உரிமை; எதிர்கால மக்களினம் முழு உடல் நலத்தோடு வாழும் உரிமை.

7. மனித உரிமை அழியாமல் நிலைத்து நிற்க நாம் எந்தக் கடமையையும் ஏற்போம். எந்தத் துன்பத்தையும் பொறுத்துக்கொள்வோம். எந்த நண்பரையும் எதிர்ப்போம்.

8. முடிவை எதிர்பாராமல், எதிர்ப்புகளுக் கஞ்சாமல், இடர்களுக்கு உள்ளங் கலங்காமல் தன்னால் இயன்ற அளவு நேர்மைக்காகப் பாடுபடவேண்டும். அதுதான் மக்களினத்தின் அடிப்படை ஒழுக்கம்.

## பாவலர் முருகுசுந்தரம் அவர்களின்

### பிற நூல்கள்.

பாரும் போரும்

வள்ளுவர் வழியில் காந்தியம்

நாட்டுக்கொரு நல்லவர்

பாட்டும் கதையும்

கடை திறப்பு (பாடல்கள்)

வேலா
சிவகம்
வெளியீடுகள்